


# புரட்சிப் பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 ஆகஸ்டு 06, 2009 புரட்சி 8 முழக்கம் 30 விலை: ரூ.2.50


## அடக்குமுறை சட்டங்களை எதிர்கொண்டு 3 மாத சிறைக்குப் பின் கோவை இராமகிருட்டிணன், பெரம்பூர் லெட்சுமணன் விடுதலை



# சிறை வாசலில் எழுச்சிவரவேற்பு

ஈழத் தமிழர்களை கொன்று குவிக்க ஆயுதங்களையும், உளவு 'சேவை'களையும் வழங்கியது இந்தியப் பார்ப்பன ஆட்சி. கோவைக்கு பயிற்சிக்கு வந்த சிங்கள விமானப் படைக்கு எதிராக பெரியார் திராவிடர் கழகம் நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் தான் சிங்கள விமானப் படையைத் தமிழகத்திலிருந்து திரும்பச் செய்தது.

அதேபோல் மே 2 ஆம் தேதி 80க்கும் மேற்பட்ட இந்திய ராணுவ லாரிகள் ஆயுதங்களை ஏற்றிக் கொண்டு கொச்சி துறைமுகத்துக்குப் போய், அங்கிருந்து கொழும்பு போகிறது என்ற தகவல் பரவியவுடன், அதைத் தடுத்தேயாக வேண்டும் என்ற உணர்வுடன் கோவைப் பகுதி கழகத் தோழர்கள் நீலாம்பூர் நெடுஞ்சாலையில் திரண்டனர். கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன், பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள், ம.தி.மு.க. தோழர்கள், ஆதித் தமிழர் பேரவைத் தோழர்கள், மனித உரிமை அமைப்பினர், தமிழின உணர்வாளர்கள், பொது மக்கள், பெண்கள் உள்ளிட்ட 300 பேர் திரண்டு, வாகனங்களை மறித்தனர். ஈழத் தமிழினத்தைப் பாதுகாக்க இராணுவ வாகனத்தையே மறித்த இந்தப் போராட்டம், தமிழகத்தில் மட்டுமல்ல, உலகத் தமிழர்களையே வியப்பில் ஆழ்த்தியது. அர்ப்பணிப்பும், தியாகம் நிறைந்த தமிழர்கள் ஏராளம் இருக்கிறார்கள் என்பதை நாட்டுக்கு உணர்த்தியது. தமிழின உணர்வாளர்கள் மகிழ்ந்தார்கள். விளைவுகளை எதிர்பார்க்காமல், விலை கொடுக்க பெரியார் திராவிடர் கழகம் தயாரானது.

முதலில் கழகப் பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் மீது தேசிய பாதுகாப்பு சட்டம் பாய்ந்தது. இரண்டாவதாக - ம.தி.மு.க. மாணவரணி அமைப்பாளர் சந்திரசேகர் மீது பாய்ந்தது. மூன்றாவதாக - பெரம்பலூர் கழக மாவட்ட அமைப்பாளர் லெட்சுமணன் மீதும், நான்காவதாக - ம.தி.மு.க. தோழர் வேலுசாமி, அய்ந்தாவதாக - கழகத்

(4 ஆம் பக்கம்)

# 'திராவிடன் வட்டிக்கடை இலாபம்' எங்கே போகிறது?

பெரியார் அறக்கட்டளை வெளியிடும் எந்த நூலை வாங்கினாலும் அதன் தொகை அறக்கட்டளைக்குத்தான் வந்து சேருமாம். வீரமணிக்குப் போய்ச் சேராதாம். ஆனால் பெரியார் திராவிடர் கழகத்துக்கு 'குடிஅரசு' முன் பதிவுக்கு அனுப்பும் பணம், கழகத் தலைவர் கொளத்தூர் மணி என்ற தனி நபருக்குத்தான் போய்ச் சேருமாம். இப்படி எழுதி, 'குடிஅரசு'க்கு காசோலை அனுப்ப கழகத் தலைவர் வங்கிக் கணக்கு முகவரியை 'பெரியார் முழக்கம்' வெளியிட்டதை எடுத்து வெளியிட்டிருக்கிறது 'விடுதலை'யின் மின்சாரம் கட்டுரை.

பெரியார் திராவிடர் கழகத்துக்கு அறக்கட்டளைகள் ஏதுமில்லை. எனவேதான் ஏதேனும் ஒரு முகவரியை காசோலை / வரைவோலை அனுப்புவோருக்கு தரவேண்டியிருப்பதால் கழகத் தலைவரின் முகவரியை தந்திருந்தோம்.

அப்படி அனுப்பப்படும் தொகை கொளத்தூர் மணிக்காக அல்ல. 'குடிஅரசு' தொகுப்புகளுக்காக. ஒவ்வொரு தொகுதியும் 400 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொன்றும் 400 பக்கங்கள் கொண்ட தனித்தனியான 27 நூல்கள் அத்தனைக்கும் முன்பதிவுக் கட்டணம் ரூ.3500. பெரியார் காட்டிய வழியில் மிகமிகக் குறைந்த விலையில் தரப்பட வேண்டும் என்ற கருத்தை உள்ளத்தில் ஏந்தி, பெரியார் திராவிடர் கழகம் செயல்படுகிறது. வர்த்தக நோக்கில் அல்ல.

கழகத் தலைவர் கொளத்தூர் மணியை தடா, பொடா, தேசிய பாதுகாப்புச் சட்டம் ஒன்றுகூட விட்டு வைக்கவில்லை. சிறைப் பறவையாகவே வாழ்நாளைக் கழித்து வருபவர். கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன், தடாவையும், தேசிய பாதுகாப்பு சட்டத்தையும் ஏற்று ஆண்டுக்கணக்கில் சிறை சென்றவர்.

பெரியார் திராவிடர் கழகத்தின் செயல் வீரர்கள் பலரும் பெரியார் கொள்கைக்காக அடக்குமுறைகளையும், சிறைச்சாலைகளையும் சந்தித்து வருபவர்கள். கொள்கையை உறுதியாகப்

4 ஆம் பக்கம்

# ‘தினமலரும்’ – ‘விடுதலை’யும் ஓரணியில்!

‘தினமணி, தினமலர், தீக்கதிர் வெளியேற்றப் பட்டவர்கள் பி.ஜே.பி. எல்லாம் ஓரணியில்’ என்ற தலைப்பில் ‘விடுதலை’யில் ‘மின்சாரம்’ கட்டுரை ஒன்று (3.8.2009) வெளிவந்திருக்கிறது. உயர்நீதிமன்றத் தீர்ப்பை முன் வைத்து ‘தினமலர்’ பார்ப்பன நாளேடு வெளியிட்ட கடிதம் ஒன்றுக்கு பதிலளிப்பதாகக் கருதி மின்சாரம் இவ்வாறு எழுதியுள்ளார்.

“நாளையே கூட, மீண்டும் பிள்ளையார் பொம்மைகளை வீதிக்கு வந்து உடைக்க நாங்கள் தயார்! ‘தினமலர்’ அதை முதல் பக்கத்தில் வெளியிடத் தயாரா?

இராமன் படத்தை செருப்பால் அடிக்க எங்கள் இளைஞர்கள் தயார்! தயார்! அதை அப்படியே ‘தினமலர்’ செய்தி வெளியிட்டு மகிழுமா?

சீதையை விபச்சாரி என்று சிறப்புக் கூட்டம் போட்டு பேசத் தயார்! அந்தப் பேச்சை அப்படியே திரிக்காமல், குறுக்காமல் தலைப்புச் செய்தியாக வெளியிட முன் வருமா?”

இப்படி எல்லாம் பார்ப்பன ‘தினமலரு’க்கு, ‘விடுதலை’யில் மின்சாரம் எழுதிய (3.8.2009) கட்டுரை ஒன்று சவால் விடுகிறது!

மேலே பட்டியலிட்ட போராட்டங்களை யெல்லாம் தி.க. நடத்தப் போவதும் இல்லை. அதனால் ‘பார்ப்பன மலர்’ வெளியிட வேண்டிய அவசியமும் இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்தது தான்.

ஆனால், பார்ப்பன ‘தினமலர்’ நோக்கி ‘கொள்கைப் போராளிகளாக’ காகிதத்துக்குள் களம் அமைக்கப் புறப்பட்டிருக்கும் ‘மின்சாரங்களை’ கேட்கிறோம்!

திருவரங்கத்தில் தி.க.வினரே அமைத்த பெரியார் சிலை தகர்க்கப்பட்டபோது, பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் பார்ப்பன நிறுவனங்கள் மீது பதிலடி தாக்குதல் நடத்தி, அதற்காக தி.மு.க. ஆட்சியில் தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்யப்பட்டார்களே, அப்போது பார்ப்பன ‘தினமலர்’, பெரியார் திராவிடர் கழகத்தினர் மீது பாய்ந்து பிராண்டியதே! அப்போது ‘விடுதலை’, பெரியார் திராவிடர் கழகத்தின் செய்தியை முதல் பக்கத்தில் கூட வேண்டாம் - கடைசி பக்கத்திலாவது போட்டதா?

பார்ப்பனர் பூணூலை அறுத்ததே ‘தேச விரோதம்’ என்று தி.மு.க. ஆட்சி, தேசப் பாதுகாப்பு சட்டத்தை பெரியார் தி.க. தோழர்கள் மீது ஏவியபோது, ‘தினமலர்’ பார்ப்பன ஏடுகள், அரசின் நடவடிக்கைகளை ஆதரித்து தூபம் போட்டனவே, ‘விடுதலை’ தி.மு.க.வையோ, ‘தினமலரை’யோ கண்டித்ததா?

மாறாக, பெரியார் திராவிடர் கழகத்தைத் தானே தி.க. தலைமை கண்டித்தது?

ஈழத் தமிழர் படுகொலைக்கு ஆயுதங்களையும், பயிற்சிகளையும் வழங்கிய இந்தியப் பார்ப்பன ஆட்சிக்கு எதிராக கோவை நீலாம்பூரில் ராணுவ வாகனங்களுக்கு எதிராக பெரியார் திராவிடர் கழகம் போராட்டம் நடத்தியபோது, ‘வன்முறையாளர்கள் தேச விரோதிகள்’ என்று, கழகத்தினர் மீது பார்ப்பன ‘தினமலரும்’ பாய்ந்தது. ‘சூத்திர’ ‘விடுதலை’யும், பார்ப்பன ‘தினமலரோடு’ சேர்ந்து கொண்டு கழகத்தினரை வன்முறையாளராகவே சித்தரித்து இந்த பார்ப்பன எதிர்ப்பு போராட்ட சிங்கங்கள் செய்தி வெளியிட்டதே, மறந்து விட்டதா?

பெரியார் கொள்கைகளுக்காக களத்தில் இறங்கி போராடும் பெரியார் திராவிடர் கழகத் தோழர்களை எதிர்ப்பதில் பார்ப்பன ‘தினமல’ரோடு கைகோர்த்த ‘விடுதலை’ குழுமம் தான், இப்போது ஏதோ பார்ப்பன எதிர்ப்பில் ‘படம் போட்ட வீரர்களாக’ பேனா பிடிக்கக் கிளம்பியிருக்கிறார்கள்! வெட்கக் கேடு!

## இப்போதாவது புரியுமா?

‘ஈ.வெ.ரா.வின் தலையாய கொள்கை மதுவிலக்கு பிரச்சாரம்’ என்று பார்ப்பன ‘தினமலர்’ எழுதப் போய் அதற்கு ‘விடுதலை’ இவ்வாறு பதிலளித்துள்ளது:

“பெரியார் மதுவிலக்கை ஆதரித்தது; அதில் மாற்றுக் கருத்துக் கொண்டது போன்ற வரலாறு எல்லாம் தெரியாமல், பேனா பிடிப்பதைப் பார்த்து, எந்த புறத்தால் சிரிப்பதோ”

- ஒரு கட்டத்தில் மதுவிலக்கை பெரியார் ஆதரித்தார்; பிறகு அவரே தீவிரமாக எதிர்த்தார். இந்த வரலாறு எப்போது மக்களிடம் சரியாகப் போய்ச் சேரும்? காலவரிசைப்படி, பெரியார் கருத்துகள் முழுமையாகத் தொகுக்கப்படும்போது தானே? அப்படி, ஒரு தொகுப்பு இல்லாமையினால் தானே, இப்படி எல்லாம் பெரியாரியலை, தவறாக அடையாளப் படுத்த முடிகிறது?

பெரியார் திராவிடர் கழகம் இப்படி காலவரிசைப்படி தொகுக்க முன் வந்தால் - அதனால் ‘குழப்பம்’ ஏற்படும் என்று எழுதியது இதே ‘விடுதலை’ தானே!

அப்படி தொகுக்கப்படாததால் தான் ‘தினமலர்’ பார்ப்பன ஏடுகள் ‘குழப்பம்’ செய்கின்றன என்பதை, இப் போதாவது ஒப்புக் கொள்வார்களா?

## பாலபாடம் யாருக்கு?

“(பெரியார் சிந்தனைகள்) நூலின் முதல் தொகுதியில் பதிப்பாசிரியர் முன்னுரையில், பதிப்பாசிரியர் தோழர் வே. ஆனைமுத்து அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

‘பெரியார் அவர்களின் சொற்பொழிவுகளையும் எழுத்துகளையும் தொகுக்கும் பணியினை சிந்தனையாளர் கழகத்தார், அன்புடன் என்பால் ஒப்புவித்தனர். இந்த ஏற்பாடுகள் அனைத்துக்கும் பெரியார் அவர்கள் மனமுவந்து 9.1.72 இல் முழு ஒப்புதல் அளித்தார்கள்’ என்று குறிப்பிடப்பட்டுள்ளதே.

இதிலிருந்து தெரியும் உண்மை - பெரியார் எழுத்துகளை வெளியிடுவதாக இருந்தால், சம்பந்தப்பட்டவர்களின் ஒப்புதல் தேவை என்பது பால பாடம்.”

**– ‘விடுதலை’ (31.7.2009)யில் பொதுச் செயலாளர் கலி. பூங்குன்றன்**

மிகச் சரியான, உண்மையான கருத்து. இந்த ‘பால பாடம்’ வீரமணிக்கு தெரியவில்லை என்பதை கட்டுரையாளர் மறைமுகமாக சுட்டிக்காட்டியிருக்கிறார் போலும்!

பெரியார் எழுத்துகளை வெளியிட்ட திருச்சி சிந்தனையாளர் கழகத்துக்கு பெரியாரே ஒப்புதல் வழங்கியது போல் கி. வீரமணியை பொதுச்செயலாளராகக் கொண்ட நிறுவனத்துக்கு, பெரியார் ஒப்புதல் எதையும் வழங்கவில்லை. இந்த பால பாடம் கி.வீரமணிக்குப் புரிய வேண்டாமா, என்று விடுதலை கட்டுரை மறைமுகமாக கேட்கிறதோ!

வீரமணி செயலாளராக உள்ள நிறுவனத்தின் விதிகளில் அப்படி பெரியார் வழங்கிய உரிமைகள் ஏதும் இடம் பெற்றுள்ளதா? இல்லையே!

தனது எழுத்து பேச்சுகளுக்கு குறிப்பிட்ட எவருக்கும் - பெரியார் உரிமைகளை எழுதி வழங்கிடவில்லை. அதற்கான சான்றுகள் எதுவும் வீரமணியிடம் இல்லை.

அதுமட்டுமல்ல, பெரியார் மறைவதற்கு 7 நாட்களுக்கு முன்பு ‘மாலை முரசு’ நாளேட்டுக்கு அளித்த பேட்டியில் தனக்கென்று வாரிசு எவரும் கிடையாது. என்னுடைய சிந்தனைகளும் கருத்துகளுமே வாரிசு என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வளவுக்குப் பிறகும் ‘பதிப்புரிமை’, ‘வாரிசுரிமை’ கோரி, பெரியார் எழுத்துகளை முடக்குவது, பெரியாருக்கு இழைக்கப்படும் துரோகம் அல்லாமல் வேறு என்ன?

## அன்றும் இன்றும்!

“ஆயிரம் ஆயிரம் பக்கங்களாக தொகுதிகளை வெளியிடுவதால் யாருக்குப் பயன்? பணம் கொடுத்து வாங்கும் சக்தி உள்ளவர்களின் அலமாரிகளில் அழகு செய்யும். சாதாரண மக்களுக்கு சென்றடையாது.”

**– விடுதலை (24.08.2008)**
**கலி. பூங்குன்றன் கட்டுரை**

300 பக்கங்களுக்கு மிகைப் படாமல் இருந்தால்தான் வெகு மக்களை சென்றடைய முடியும்.

**‘விடுதலை’ 3.3.2009**
**மின்சாரத்தின் கருத்து.**

இது அன்று - வைத்த வாதம்.

**இன்று...?**

“சந்திரசேகரப் பாவலர் எழுதிய இராமாயண ஆராய்ச்சி தனித்தனி காண்டமாக வெளியிடப்பட்டு வந்தது. அந்த ஏழு நூல்களையும் ஒரே தொகுதியாக்கி வெளியிட்டது யார்? **718 பக்கங்களைக் கொண்ட** அந்த நூலின் விலை என்ன தெரியுமா? வெறும் 200 தான்.”

**– இது இப்போது மின்சாரத்தின் கட்டுரை, ‘விடுதலை’ (2.8.2009)**

பெரியார் திராவிடர் கழகம் தொகுதி தொகுதியாக வெளியிட்டால் 300 பக்கங்களுக்கு மேலே போனால், அது மக்களிடம் போகாதாம்!

ஆனால், திராவிடர் கழகம் ஏழு நூல்களை ஒன்றாக்கி, 718 பக்கங்களில் வெளியிட்டால், அண்டசராசரம் அத்தனையும் கடந்து விண்வெளிக்கும் போய் பரவிடுமாம்! இது என்ன கதை!

மறுப்புரை தரவேண்டும் என்ற பார்வை ஒன்றைத் தவிர எந்த கருத்தோ, சிந்தனையோ இல்லாமல் எழுதுவதால் எழும் குழப்பங்கள் இவை. என்ன செய்வது? பாட்டுக்காரரின் சுருதி பேதம், பக்க வாத்தியத்தையும் பாதிக்கத்தானே செய்யும்!

## ஐ.நா. தலையீடு கோரி கரூரில் கழகம் பிரச்சாரம்

30.7.2009 அன்று கரூரில் கழகத்தின் சார்பில் முள்வேலி கம்பிக்குள் இருக்கும் ஈழத் தமிழர்களை பாதுகாக்க ஐ.நா. சபை தலையிடக் கோரி கண்களை கட்டி கொண்டு வாகன பிரச்சாரம் கரூர் நகரம் முழுவதும் நடந்தது. கு. ராசா மாவட்ட கழக அமைப்பாளர் தலைமையில் தமிழர் பண்பாட்டுப் பேரவை தலைவர் ஆசிரியர் ம.காமராசு தொடங்கி வைத்தார். ஆதி தமிழர் பேரவை வீர முருகு பிரச்சாரத்தை முடித்து வைத்தார்.

மாவட்ட தலைவர் கு.கி. தனபால் முன்னிலையில் தூத்துக்குடி பால். அறிவழகன் கண்களை கட்டிக் கொண்டு வாகனம் ஓட்டி வந்தார். கலந்து கொண்டவர்கள் - மாவட்ட செயலாளர் க. முருகேசன், பரமத்தி ஒன்றியத் தலைவர் த.ராமஜெயம், வழக்கறிஞர் ஜெயபிரகாஷ், கிருஷ்ண ராயபுரம் இரா. காமராசு, வெங்கடேஷ், தமிழர் முன்னணி அதியமான், நல்லசிவம், ம.தி.மு.க. டி.எஸ். பூபதி, வழக்கறிஞர்கள் செல்வ. நன்மாறன், க. பாஸ்கர், மோகன் மற்றும் உணர்வாளர்கள் கலந்து கொண்டனர். சுடர் தென்னரசு நன்றி கூறினார்.

மாலை 6 மணியளவில் குளித்தலை பேருந்து நிலையம் அருகில் கழக பொதுக் கூட்டம் நடைபெற்றது. ம.தே. தமிழ் நெஞ்சன் தலைமையில், தமிழர் முன்னணி பிரகாஷ் முன்னிலையில், திண்டுக்கல் துரை சம்பத், ஈழ மக்கள் படும் துயரங்களை உருக்கமாக எடுத்துரைத்தார். தூத்துக்குடி பால். அறிவழகன், ‘மந்திரமா? தந்திரமா?’ நிகழ்ச்சியை நடத்தினார். கரூர் மாவட்ட தலைவர் கு.கி. தனபால், திருச்சி மாவட்ட தவைலர் இராசேந்திரன், செயலாளர் க.முருகேசன், அமைப்பாளர் ராசா, ஒன்றிய அமைப்பாளர் இரா. காமராசு, வெங்கடேஷ், பால முருகன் மற்றும் தமிழர் முன்னணி தோழர்கள் கலந்து கொண்டனர். குளித்தலையில் கழக நிகழ்ச்சி முதன்முறையாக நடப்பது குறிப்பிடத்தக்கது.

# இதுவா பொறுப்புணர்ச்சி?

பெரியார் - பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் என்ற அமைப்பை நிறுவியதே, பெரியார் கொள்கைகளைப் பரப்புவதற்குத்தான்! ஆனால், அந்த நிறுவனம், இப்போது பெரியார் எழுத்துகள்-பேச்சுகளை வெளியிடும் உரிமை தங்களுக்கு மட்டுமே உண்டு என்று கூறி, நீதிமன்றம் போய், பெரியாரின் நோக்கத்துக்கு எதிராகவே செயல்படுகிறது!

தனது கருத்துகளைப் பரப்புவதற்காகவே சொத்துகளை வழங்கி, அதற்காகவே ஒரு நிறுவனத்தை பெரியார் ஏற்படுத்திய நிலையில், அந்நிறுவனம் பெரியார் கருத்துகளைப் பரப்புவதற்கு தடை வாங்கத் துடிக்கலாமா என்று கேள்வியை எழுப்பினால், இப்படி கேள்வி எழுப்பியவர்களையெல்லாம், பெரியாரின் எதிரிகளாக சித்தரிக்கிறார்கள்.

பெரியாரைப் பற்றி நூல் எழுதிய எஸ்.வி. ராஜதுரை, உரிமை நூலாசிரியருக்கு மட்டும் என்று போட்டு இருப்பது ஏன்? ஊருக்கு தான் உபதேசமா என்று, ‘விடுதலையில் கலி. பூங்குன்றன் கேள்வி எழுப்புகிறார். இப்போது பிரச்சினை பெரியாரின் நூல்களைப் பற்றித்தான், பெரியாரைப் பற்றிய நூல்களுக்காக அல்ல.

தனது கருத்துகளைப் பரப்புவதற்காகவே சொத்துகளையும், நிறுவனங்களையும் விட்டுச் சென்ற ஒரு தலைவரின் கருத்தை பரப்புவதற்கு அந்த நிறுவனமே தடை போடலாமா என்பதுதான் கேள்வி?

ஆத்திரத்தின் உச்சிக்குப் போய் - எதையாவது மறுப்பாக எழுத வேண்டும் என்று பேனா பிடிப்பதால், விவரங்களைப் புரிந்து கொண்டுகூட எழுத தயாராக இல்லை.

எஸ்.வி.ஆர். ‘சுயமரியாதை சமதர்மம்’ என்ற நூலை எழுதி வெளியிட்டுள்ளார் என்கிறது ‘விடுதலை’ கட்டுரை!

வெளியிட்டது, எஸ்.வி.ஆர். அல்ல, ‘விடியல்’ பதிப்பகம்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியையும் ‘விடுதலை’ கட்டுரையாளர் கலி. பூங்குன்றன் சாடியிருக்கிறார். “மார்க்சிஸ்டுகள் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ள வேண்டாமா? அவர்களுடைய கட்சி நூல்களில் எல்லாம் பதிப்புரிமை என்று போடுவதே இல்லையா? சாமானிய மக்களுக்கே சரித்திரம் படைக்கப் போவதாகக் கூறும் அவர்கள், அத்தகைய நூல்களை யார் வேண்டுமானாலும் வெளியிட்டுக் கொள்ளலாம் என்று கதவைத் திறந்துவிட வேண்டியது தானே!” - என்று பொறுப்புணர்ச்சி பற்றி ‘பாடம்’ எடுக்கிறார்.

மார்க்சிய தத்துவத்தின் ஆசான்களான மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் எழுத்துகளுக்கு, பதிப்புரிமை கோரி, முடக்கப்படவில்லை. அதன் காரணமாக உலகம் முழுதும் பல்வேறு மொழிகளில் அவர்களின் சிந்தனைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இன்னும் சொல்லப் போனால், ‘பென்குயின்’ என்ற முதலாளித்துவ நிறுவனமே மார்க்சின் மூலதனத்தை சிறப்பாக வெளியிட்டுள்ளது. அதற்காக அன்றைய சோவியத் ஒன்றியம் அதை முடக்க முனையவில்லை.

எந்த நூலுக்கும் பதிப்புரிமையே கூடாது என்று பெரியார் திராவிடர் கழகம் கூறுவது போலவும், பதிப்புரிமை சட்டத்தையே ஒழித்து விடலாம் என்று வலியுறுத்துவது போலவும் ஒரு பொய்மையை முன்னிறுத்தப் பார்க்கிறது, ‘விடுதலை’யின் கட்டுரை!

தத்துவத் தலைவர்களின் சிந்தனைகள் மக்களிடம் கொண்டு செல்லப்பட வேண்டும். அதுவும் காலவரிசைப்படி தொகுக்கப்படும்போதுதான் அந்த சிந்தனைகளைப் பற்றிய புரிதலில் சரியான வெளிச்சம் கிடைக்கும். காரல் மார்க்ஸ், லெனின் பற்றிய அத்தகைய தொகுப்புகள் அப்படி எல்லாம் வெளி வந்த காரணத்தால் தான் இந்த தத்துவங்களின் அடிப்படையில் பல்வேறு ஆய்வுகள், கருத்துகள் நூல்களாக வெளி வந்து, மக்கள் மன்றத்தில் விவாதிக்கப்பட்டு வருகின்றன. அதன் வழியாக தத்துவங்கள் காலத்துக்கேற்ப மேலும் செழுமையாகி வருகின்றன.

இதைப் பற்றி எந்தக் கவலையுமின்றி கல்வி நிறுவனங்களின் வர்த்தகக் கனவுகளிலும் கழகத்துக்குள் குடும்ப வாரிசுகளைக் கொண்டு வருவதிலும் கவலையை செலுத்திக் கொண்டு, பெயருக்கு பெரியாரை நாமவாளியாக்கிக் கொண்டிருப்பவர்கள். ‘பொறுப்புணர்ச்சி’ என்றெல்லாம் பேசுகிறார்கள்.

‘பொறுப்புணர்ச்சி’, ‘உபதேசிகளுக்கு’ ஒரு கேள்வி?

பெரியார் ஒப்புதலோடு - பதிப்புரிமை பெற்று வெளியிடப்பட்ட நூல் சாமி. சிதம்பரனார் எழுதிய ‘தமிழர் தலைவர்’ என்ற பெரியார் வரலாற்று நூல், 1939 ஆம் ஆண்டு ‘பதிப்புரிமை பெற்றது; உரிமை வெளியிடுவோருக்கே’ என்ற அறிவிப்புடன் ‘தமிழ் நூல் நிலையம்’ பதிப்பகத்தால் 408 ஹைரோடு - திருவல்லிக்கேணி என்ற முகவரியோடு வெளி வந்தது, இந்த நூல். இது மறைந்த கொள்கை வேள் குத்தூசி குருசாமியின் இல்ல முகவரி. இப்படி ஒரு நூல் வெளியிடுவதற்கான முழு முயற்சியையும் மேற்கொண்டது அவர்தான்.

பதிப்புரிமையோடு தமிழ் நூல் நிலையம் வெளியிட்ட அந்த நூலை பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் வெளியீடாக வீரமணி பல பதிப்புகளை வெளியிட்டுக் கொண்டிருக்கிறாரே, இதுதான், இவர்களின் பொறுப்புணர்ச்சியா?

ஊருக்கு உபதேசம் கூறுவோரே! உங்கள் முதுகைப் பாரும்!

## வழக்கு நிதி: பொள்ளாச்சி தோழர்கள் தீவிரப் பணி

ஜூன் 14 ஆம் நாள் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் கோவையில் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்ட தீர்மானத்தின்படி பொள்ளாச்சி - ஆனை மலை பகுதிகளில் கழகத் தோழர்கள் வழக்கு நிதி திரட்டும் பணியில் தீவிரமாய் செயல்பட்டு வருகின்றனர்.

சமூக - அரசியல் கட்சித் தலைவர்கள், வணிகர்கள், மாணவர்கள் என பலரும் ஆர்வத்துடன் வழக்கு நிதி வழங்கி, கழகத் தோழர்களை ஊக்கப்படுத்துகிறார்கள். இந்நிலையில், வழக்கு நிதி திரட்டும் பணி குறித்தும், நிதியளிப்பு விழாப் பொதுக்கூட்டம் நடத்துவது குறித்தும் கலந்தாய்வு நடத்த பொள்ளாச்சி நகர செயலாளர் வே.வெள்ளிங்கிரி தலைமையில் நகர ஒன்றிய பொறுப்பாளர்கள் கூட்டம் பொள்ளாச்சியில் நடைபெற்றது.

கூட்டத்தில், பொள்ளாச்சி - ஆனைமலை நகர ஒன்றிய கழகங்களின் சார்பில் ரூபாய் ஒரு லட்சம் வழக்கு நிதி வழங்குவதென்றும், கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இயக்குனர் சீமான் ஆகியோரை அழைத்து வழக்கு நிதி வழங்கும் பிரமாண்டப் பொதுக் கூட்டம் நடத்துவதென்றும், இராணுவ வாகனத் தாக்குதல் வழக்கில் சிறைச் சென்ற தோழர்களை அழைத்து சிறப்பு செய்வது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பகுத்தறிவாளர் பேரவை அமைப்பாளர்கள் இரா. மோகன், சி.விசயராகவன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். பொள்ளாச்சி வட்ட செயலாளர் காசு. நாகராசன், நகர துணை செயலாளர் த.இராசேந்திரன், நகர பொருளாளர் கலை இராசேந்திரன், ஆனைமலை நகர செயலாளர் வே. அரிதாசு, ஆனைமலை ஒன்றிய துணை செயலாளர் சம்பத், பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம் சார்பில் சீனிவாசன், தெற்கு ஒன்றியம் சார்பில் கண்ணன் உள்ளிட்ட கழகப் பொறுப்பாளர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினர். முடிவில் தமிழ்நாடு மாணவர் கழக பொறுப்பாளர் கா.கணேசுக் குமார் நன்றி கூறினார்.

## விழுப்புரம் பொதுக் கூட்டம்

9.7.2009 அன்று விழுப்புரம் மாவட்டத்தில் தமிழர் ஒருங்கிணைப்பு சார்பில் ஈழம் - நாம் என்ன செய்யவேண்டும் விளக்கப் பொதுக்கூட்டம் மாலை 6 மணியளவில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சுபாட் சந்திரபோசு தலைமை வகித்தார். ம. கணேசன் வரவேற்புரையாற்ற, கல்லை சி.ஆசைத்தம்பி முன்னிலை வகித்தார்.

மாவட்டத் தலைவர் வழக்கறிஞர் ப. கண்ணன், செயலாளர் மு.வ. நடராசன், சாக்ரட்டீசு, வழக்கறிஞர் லூசியா ஆகியோர் உரையைத் தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தமிழ் தேசிய விடுதலை இயக்கப் பொதுச் செயலாளர் தியாகு ஆகியோர் சிறப்புரையாற்றினர். கல்லை தங்க செந்தில்குமார், எழில் இளங்கோ, ஏழுமலை, தமிழ் வேங்கை, சோதி நரசிம்மன், ஆ. தமிழ்தாசதுரை, சி. சாமிதுரை, இளையராசா, மு.வ. செல்வராசு, பிரபு, பேராசிரியர் கல்விமணி உள்பட ஏராளமான தோழர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். ந. அய்யனார் நிகழ்ச்சி ஒருங்கிணைத்தார்.

REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# சுயமரியாதை ராமசாமியாக....

என்னுடைய சர்வாதிகாரத்தைக் கழக இலட்சியத்தின் வெற்றிக்காகப் பொது நன்மைக்காகப் பயன்படுத்துகிறேனே தவிர, எந்தச் சிறு அளவுக்கும் எனது சொந்தப் பெருமைக்காகவோ, ஒரு சிறு கடுகளவாவது சொந்த நன்மைக்காகவோ, பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதை நீங்கள் ஆராய்ந்து பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டுகிறேன்.

ஒருவர் தம் மறைவுக் காலத்தில் எந்த நிலையில் இருக்கிறாரோ அதைப் பொறுத்துத்தான் அவருடைய மறைவுக்குத் துக்கப்படுபவர்களும் சந்தோசப்படுபவர்களும் அமைவார்கள். உதாரணமாக நான், காங்கிரசு இராமசாமியாக ஒரு காலத்திலும், சுய மரியாதை இராமசாமியாக ஒரு காலத்திலும், திராவிடர் கழக இராமசாமியாகத் தற்காலத்திலும் இருந்து வருகிறேன். காங்கிரசு இராமசாமியாக இருந்த காலத்தில் இறந்திருந்தால் சுதேசமித்திரன் ஆசிரியர், இந்து ஆசிரியர் உள்பட பல காங்கிரசுக்காரரர்களும், அய்யர், அய்யங்கார்களும் துக்கம் கொண்டாடியிருப்பார்கள். சுயமரியாதை இராமசாமியாக இருந்த காலத்தில் இறந்திருந்தால் ஒரு சுயமரியாதைக்காரப் பார்ப்பனர் தவிர்த்த மற்ற பார்ப்பனர்கள், வைதீகர்கள் எல்லாரும் சந்தோசப்பட்டபடி இருப்பார்கள். ஆனால், இன்று மறைய நேர்ந்தாலோ திராவிடர்கள் அனைவரும் துக்கம் கொண்டாடலாம் என்று கருதுகிறேன்.

**– பெரியார் சிந்தனைகள், தொகுதி –2 பக்கம் 796**

எனக்கு அரசியல் வாரிசு என்று யாரும் கிடையாது; என்னுடைய கொள்கைகளும் கருத்துக்களும்தான் வாரிசு; வாரிசு என்பது தானாகவே ஏற்பட வேண்டும்.

**– பெரியார் சிந்தனைகள், தொகுதி –2 பக்கம் 1230**

*(சிறை வாசலில்.... முதல் பக்கத் தொடர்ச்சி)*

*தோழர் சூலூர் வீரமணி என்று பாதுகாப்பு சட்டங்கள் பாய்ந்தன. தேசிய பாதுகாப்பு சட்டம், கழகத் தோழர் சூலூர் வீரமணியைத் தவிர, மற்ற அனைவர் மீதும் ரத்தாகிவிட்டது. இதில் கோவை இராமகிருட்டிணன் தவிர, மற்றவர்கள் மீதான தேசிய பாதுகாப்பு சட்டத்தை முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளதாக கூறி, மத்திய அரசே ரத்து செய்தது குறிப்பிடத்தக்கதாகும். திராவிடர் கழகத்தின் விடுதலை நாளேடு, கழகத் தோழர்கள் தேசவிரோத செயல்களில் ஈடுபட்டதாக செய்தி வெளியிட்டது. பார்ப்பன ஏடுகளும் அது போன்றே செய்தி வெளியிட்டன. 3 மாத சிறைவாசத்துக்குப் பின் தடைகள் தகர்ந்தன. கோவை இராமகிருட்டிணன் மீதான தேசிய பாதுகாப்பு சட்டத்தை உயர்நீதிமன்றம் ரத்து செய்தது. பெரம்பலூர் லட்சுமணன் மீதான சட்டத்தை மத்திய அரசு ரத்து செய்தது.*

*தடைகளைத் தகர்த்து, தோழர்கள் பிணையில் விடுதலை பெற்று வரும் நிலையில், கடந்த 1.8.2009 அன்று பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன், பெரம்பலூர் இலட்சுமணன் ஆகியோர் விடுதலையானார்கள். சிறை வாயிலில் எழுச்சி மயமான வரவேற்பு வழங்கப்பட்டது. வரவேற்பு பற்றி கழகப் பொறுப்பாளர் வழக்கறிஞர் சாஜித் கோவையிலிருந்து தந்துள்ள தகவல்கள்:*

*பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன், பெரம்பலூர் லெட்சுமணன் ஆகியோர் காலை 10 மணிக்கு சிறையிலிருந்து வெளியே வந்த போது, பல்லடம் நகர கழகத் தோழர்களின் ஜமாப் எழுச்சி இசையோடு கழக செயற்குழு உறுப்பினர் ஆறுச்சாமி தலைமையில் கழகக் கொடிகளுடன் நூற்றுக்கணக்கில் தோழர்கள் திரண்டு, முழக்கமிட்டு, வரவேற்ற காட்சி, உணர்ச்சிமயமாக இருந்தது. கோவை, சேலம், ஈரோடு, மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களிலிருந்து தனிவாகனங்களில் தோழர்கள் பெருமளவில் திரண்டிருந்தனர். ம.தி.மு.க., ஆதித் தமிழர் பேரவை, புரட்சிகர விடுதலை முன்னணி அமைப்புகளைச் சார்ந்த தோழர்கள் நூற்றுக்கணக்கில் திரண்டு வந்திருந்தனர்.*

*வழக்கில் கைதான 52 தோழர்களுக்கும் ஆடைகள் போர்த்தப்பட்டது; அனைவரும் பொதுச்செயலாளருடன் புகைப்படம் எடுத்துக் கொண்டனர். சென்னையிலிருந்து வழக்கறிஞர் குமாரதேவன் வரவேற்பில் கலந்து கொண்டார். வழக்கில் உதவிய வழக்கறிஞர்கள் எஸ். துரைசாமி, ப.பா. மோகன், இளங்கோவன், குமாரதேவன், சம்பத், லெனின், வெண்மணி, ஆனந்தராசு, விஜயராகவன், பாலா சந்தர், பார்த்தசாரதி, தமிழ்ச்செல்வி மற்றும் ம.தி.மு.க. வழக்கறிஞர் சூரி, நந்த கோபால், மோகன்ராஜ் உள்ளிட்ட அனைவருக்கும் நிகழ்ச்சியில் நன்றி தெரிவிக்கப்பட்டது.*

### கொளத்தூர் மணி தலைமையில்

*கோவை நீலாம்பூர் இராணுவ வாகன தாக்குதல் வழக்கில் முதல் கட்டமாக கழகத் தோழர்கள் 9 பேர் உட்பட 11 பேர் 16.7.2009 அன்று பிணையில் விடுதலை செய்யப்பட்டார்கள். சிறையிலிருந்து வெளிவந்த தோழர்களுக்கு சிறைவாயிலில் கழக தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் உற்சாக வரவேற்பு வழங்கப்பட்டது. ஏறக்குறைய 200-க்கும் மேற்பட்ட தோழர்கள் சிறைவாயிலில் திரண்டு நின்று கழக கொடிகளுடன் முழக்கமிட்டு வரவேற்றனர். ஆவாரம்பாளையம் கிளை கழக தோழர்கள் ஜமாப் இசை நிகழ்ச்சி நடத்தினர். கோவை மாநகர், திருப்பூர், ஈரோடு, சேலம், திண்டுக்கல் போன்ற பகுதிகளிலிருந்து தோழர்கள் பெரும் திரளாக கொட்டும் மழையிலும் எழுச்சியுடன் வரவேற்றனர்.*

*சிறை மீண்ட தோழர்கள்: இராவணன், திருப்பூர் சண்முகம், பொள்ளாச்சி பிரகாசு, கலங்கல் வேலுசாமி, விக்னேஷ், சண்முகசுந்தரம், அம்பேத்கர், பாடகர் தியாகு, கொளத்துப்பாளையம் குமார் ஆகிய கழக தோழர்களும். பு.இ.மு. வள்ளுவராசன், சங்கத் தமிழ்ப் பேரவை சிவபிரியன் உள்ளிட்ட 11 பேர் விடுதலையடைந்தனர். தோழர்கள் அனைவரும் ஊர்வலமாக வந்து பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தனர். பின் கோவை பெரியார் படிப்பகத்தில் தேநீர் விருந்து வழங்கப்பட்டது.*

*இரண்டாவது கட்டமாக கோவை இராணுவ வாகன தாக்குதல் வழக்கில் தோழர்கள் 13 பேர் 21.7.2009 அன்று பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். சிறை மீண்ட தோழர்களை சிறை வாயிலில் கழகத் தோழர்களும் மாநகர, மாவட்ட, மாநில பொறுப்பாளர்கள் உள்ளிட்ட 250க்கும் மேற்பட்ட தோழர்கள் வரவேற்றனர்.*

*21.7.2009 அன்று பிணையில் விடுதலை செய்யப் பட்ட தோழர்கள்: பல்லடம் விஜயன், ஜெகதீசன், சூரி (எ) ஆறுமுகம், சூலூர் பன்னீர் செல்வம், அ.ப. சிவா, பா. நேருதாசு, மா. பிரகாசு (அனுப்பட்டி), பா. தமிழரசன், ச. ஆனந்த், கா. சோமசுந்தரம், ப. செல்வகுமார், தே. சீனிவாசன், பாலமுரளி.*




*(திராவிடன் வட்டிக் கடை..... முதல் பக்கத் தொடர்ச்சி)*

*பின்பற்றும் அமைப்பின் மீதுள்ள நம்பிக்கையால் தியாகங்களை வாழ்க்கையாக்கிக் கொண்டு வாழ்கிறவர்கள். தமிழ்நாட்டில் பொது வாழ்க்கையில் களமிறங்கியுள்ள எல்லோருக்கும் இது நன்றாகவே புரியும்.*

*அரசு அதிகாரக் குடைகளில் பதுங்கிக் கொண்டு ஆட்சிக்கு வரும் கட்சித் தலைமைக்கு புகழ் பாடும் கூட்டம் அல்ல பெரியார் திராவிடர் கழகம்.*

*தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் உரிமைகளை பேசிக் கொண்டு, மறுபக்கம் வணிகத்துக்கான சுயநிதி கல்வி நிறுவனங்களை நடத்திக் கொண்டிருப்பது யார் என்பது மக்களுக்கு தெரியும்!*

*ஒரு காலத்தில் லேவாதேவி ஒழிப்பு மாநாட்டை நடத்தினார் பெரியார். இப்போது பெரியார் பெயரைப் பயன்படுத்திக் கொண்டு, பெரியார் திடலுக்குள்ளே 'திராவிடன் நலநிதி' என்று லேவாதேவி (வட்டிக்கடை) நடத்துகிறார்கள். இந்த திராவிடன் நல நிதி - பெரியார் நிறுவிய அறக்கட்டளைகளுக்கு சொந்தமானதா? இல்லை! இதில் வரும் லாபம் யாருக்குப் போகிறது?*

*பெரியார் படம் எடுத்த 'லிபர்ட்டி கிரியேஷன்' அறக்கட்டளையின் கீழ் வருகிறதா? இல்லை. பெரியார் படம் எடுத்ததற்கான செலவில் பெரும் பங்கு ரூ.95 லட்சத்தை தி.மு.க. அரசே வழங்கிவிட்டது. படத்தின் லாபம் எங்கே போனது? 'லிபர்ட்டி கிரியேஷன்' என்ற கி.வீரமணி குழுவினர் அடங்கிய நிறுவனத்துக்குத் தானே!*

*பெரியார் பெயரைச் சொல்லி இப்படியெல்லாம் வியாபாரம் செய்யும் கூட்டம், பெரியார் கொள்கைக்காக உழைக்கும் உண்மையான இயக்கத்தை கொச்சைப்படுத்துகிறது! பெரியார் பணிகளை செய்ய விடாது முட்டுக்கட்டைப் போட துடிக்கிறது. இதுவே திராவிடர் கழகத்தின் தொழிலாகிவிட்டதை தமிழின உணர்வாளர்கள் நன்றாக உணர்வார்கள்.*

**ஜூனியர் விகடனுக்கு தஞ்சை இரத்தினகிரி அளித்த பேட்டிக்கு ஆதாரபூர்வ மறுப்பு அடுத்த இதழில்**

*பெரியார் திராவிடர் கழகத்தின் நேர்மையும், நம்பகத் தன்மையும், உண்மையும் உண்மைத் தமிழர்களுக்கு நன்றாகவே தெரியும்; புரியும்.*

*பெரியார் கருத்துகளைப் பரப்புவதில் கூட அவர்கள் வழக்கம் போல் வருமானத்தையே பார்க்கிறார்கள்.*

*நாம் - சமுதாயத்தின் லாபத்தைப் பார்க்கிறோம்!*

*பெரியார் திடலின் சான்றிதழ்கள் நமக்குத் தேவை இல்லை!*


"புரட்சிப் பெரியார் முழக்கம்" ஆண்டுக்கட்டணம் ரூ.150/–
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆ 2451 2857

**தமிழர்களே! அடக்குமுறை வழக்குகளை சந்திக்க நிதி குவிப்பீர்!**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 7th August 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 ஆகஸ்டு 13, 2009 புரட்சி 8 முழக்கம் 31 விலை: ரூ.2.50

## சர்வதேச நெறிமுறைகள் எங்கே போயின?

# ‘கே.பி.’ கடத்தலுக்கு கழகம் கண்டனம்

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவராக அறிவிக்கப்பட்ட செல்வராசா பத்மநாபாவை (கே.பி.) சர்வதேச சட்ட விதிமுறைகள் எதையும் பின்பற்றாமல், சிறீலங்கா அரசு “கடத்திச்” சென்றுள்ளதற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி கடும் கண்டனம் தெரிவித்தார். சர்வதேச மனித உரிமை அமைப்புகள் இதைக் கண்டித்து மனித உரிமைகளைக் காப்பாற்ற முன்வரவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்:

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் அவர்களால் அந்த அமைப்பின் சர்வதேச பொறுப்பாளராக நியமிக்கப்பட்டவர் செல்வராசா பத்மநாபா. இப்போது புலிகள் இயக்கத்தின் செயற் குழு தலைவராக விடுதலைப்புலிகளால் அறிவிக்கப் பட்டுள்ளார். மலேசிய நாட்டின் தலைநகரான கோலாலம்பூரில் ஒரு விடுதி;ல் நண்பர் ஒருவரை சந்திக்கச் சென்ற நிலையில் செல்பேசி அழைப்புக்கு பேசுவதற்காக அறையை விட்டு வெளியே வந்தபோது சிறீலங்கா உளவுத் துறையால் அவர் கடத்தப்பட்டார். மலேசிய நீதிமன்றத்தில் அவரை நேர் நிறுத்தாமல், தான்தோன்றித்தனமாக கடத்தி தாய்லாந்து வழியாக கொழும்புக்கு கொண்டு சென்று விசாரணை நடத்தி வருகின்றனர். இலங்கை வெளி யுறவு அமைச்சர் ரோகிதபொலகாம, பாதுகாப்புத் துறைக்கான பத்திரிகை தொடர்பாளர் கேஹனீய ரம்புச் செலவு ஆகியோர் இதை உறுதிப்படுத்தினர்.

சர்வதேச நெறிமுறைகளுக்கு எதிரான இந்தக் கடத்தலை கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கடந்த ஆக.9 ஆம் தேதி நெல்லையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் கண்டனம் தெரிவித்தார். மனித உரிமை அமைப்புகள், இந்த கடத்தலைக் கண்டித்து, மனித உரிமைக்கு குரல் கொடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு, அரசியல் போராட்டத்தை முன்னெடுப்ப தாக, அறிவித்த ஒரு தலைவரை இப்படி சிறிலங்கா உளவுத் துறை வன்முறையாக கடத்திச் சென்றிருப் பதிலிருந்து சிறீலங்கா - ஈழத் தமிழர்களுக்கு எந்த உரிமையும் வழங்கத் தயாராக இல்லை என்பதையே மீண்டும் உறுதி செய்திருக்கிறது என்று அவர் கூறினார்.

பிரபாகரன் கைது செய்யப்பட்டால் - அலெக் சாண்டர் மன்னன் புருஷோத்தமனை கவுரமாக நடத்தியதுபோல் நடத்த வேண்டும் என்று கூறிய தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி, இப்போது செல்வராசா பத்மநாபனையும் அவ்வாறே நடத்த வேண்டும் என்று, இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும் என்றும், கழகத் தலைவர் கொளத்தூர் மணி கூறினார்.

அகதி முகாம்களில் போராளிகள் என்று கூறி பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோரை, சிங்கள அரசு கைது செய்துள்ளது பற்றி கழகத் தலைவர் குறிப்பிடுகையில், அவர்களை சர்வதேச நெறி முறைகளின்படி யுத்தக் கைதிகளாக (Prisoners of War) கருதி கைது செய்யப்பட்டவர்களின் முழுமையான விவரங்களைப் பதிவு செய்வதோடு, அவர்களை சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டு கவுரவமாக நடத்தப்பட வேண்டும். இதற்கு மனித உரிமை அமைப்புகள் இலங்கை அரசை வற்புறுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

சர்வதேச பார்வையாளர்கள், தொண்டு நிறு வனங்கள், மனித உரிமை அமைப்புகளை முழுமை யாக வெளியேற்றிவிட்டு, சாட்சிகள் இல்லாத யுத்தத்தை நடத்திய இலங்கை அரசு, இனப்படு கொலையை நடத்தி முடித்த பிறகும், இப்போதும் சர்வதேசப் பார்வையாளர்களை முகாம்களை பார்வையிட அனுமதி மறுத்து, இருட்டில் நிறுத்தி யுள்ள மனித உரிமை மீறல்களை வன்மையாகக் கண்டித்து, மனித உரிமை அமைப்புகள் குரல் எழுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பெரியார் தமது நூல்களுக்கு எந்த ஒரு நிறுவனத்துக்கும் பதிப்புரிமை எழுதித் தரவில்லை என்பதால், அந்த நூல்களை வெளியிடுவதற்கு, பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனம் மட்டும் உரிமை கோர முடியாது. தமிழக அரசு பெரியார் நூல்களை நாட்டுடைமையாக்க எந்தத் தடையும் இல்லை என்றாலும், தி.மு.க. ஆட்சி அதைச் செய்ய மறுப்பதால், பெரியார் நூல்கள் பரவலாக மக்களை சென்றடையவில்லை. எனவே தி.மு.க. ஆட்சி பெரியார் கொள்கைகள் பரவிட வேண்டும் என்று உண்மையாகவே கருதுமானால், பெரியார் நூல்களை நாட்டுடைமையாக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்.

கிராமங்களில் இரட்டை தம்ளர், தனி சுடுகாடு உள்ளிட்ட பல்வேறு வடிவங்களில் நிலவும் தீண்டாமைக்கு எதிராக பெரியார் திராவிடர் கழகம் விரைவில் களமிறங்கி போராடுவதற்கும், கிராமங் களில் சாதி தீண்டாமைக்கு எதிரான இயக்கங்களை நடத்துவதற்கும் திட்டமிட்டு வருகிறது என்றும் கழகத் தலைவர் கூறினார்.

## புதுவையில் கொட்டும் மழையில் நடந்த கூட்டம்

## துண்டேந்ருயரு கிடைத்த வழக்கு நீரு ரூ.74இ000

01.08.09 அன்று புதுச்சேரி பெரியார் திராவிடர் கழகம் சார்பாக “தமிழின உணர்வாளர்கள் மீது தேசிய பாதுகாப்புச் சட்டத்தை ஏவிய தமிழக அரசை கண்டித்து வழக்கு நிதியளிப்பு பொதுக்கூட்டம்” புதுவை பெரியார் திடலில் நடைபெற்றது. புதுச்சேரி பெரியார் திராவிடர் கழகத் தலைவர் லோகு அய்யப்பன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இயக்குனர் சீமான் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இயக்குநர் சீமான் தனது எழுச்சி உரையில் - இனவாத சிங்கள அரசுக்கு துணை போகும் இந்திய அரசை கடுமையாக சாடினார். சிங்கள அரசு தமிழர் பகுதியில் சிங்களர்களை குடியேற்றுவதற்காக ‘வடக்கில் வசந்தம்’ என்ற பெயரில் மிகப் பெரிய தமிழின அழிப்பு நடவடிக்கையை துவக்கியுள்ளது. இதற்கு இந்திய அரசு துணை போகிறது. இதற்காக வேளாண் விஞ்ஞானி (?) சாமிநாதன் என்பவரை ஆலோசகராக நியமித்துள்ளதை சுட்டிக்காட்டி கண்டித்தார். சீமான் பேச்சினிடையே மழை பெய்தது. எனினும் கொட்டும் மழையிலும் சிறு சலசலப்பு ஏதுமின்றி மக்கள் முழுமையாக நனைந்தபடியே உரையை கேட்டு தங்கள் இன உணர்வை வெளிப்படுத்தினர்.

முன்னதாக தேனிசை செல்லப்பா இன உணர்வு பாடல்களை உணர்ச்சியுடன் பாடினார்.

எழுச்சியுடன் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் வழக்கு நிதியாக ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் (1,50,000) முதல் தவணையாக வழங்கப்பட்டது. லோகு அய்யப்பன் கூட்டத்தினரிடையே துண்டேந்தி வரும் தோழர்கள் வசம் தங்கள் இன உணர்வை வெளிப்படுத்தும் விதமாக அள்ளிக் கொடுக்கும்படி வேண்டுகோள் விடுத்தார். அதன்படி துண்டேந்தி சென்ற தோழர்கள் வசம் ரூபாய் எழுபத்தி நான்காயிரத்து பதினாறு (74,016) கிடைக்கப் பெற்றது. ஒரு ரூபாயிலிருந்து பத்தாயிரம் வரை அள்ளி கொடுத்து தங்கள் இன உணர்வை வெளிப்படுத்தினர்.

## கோரிக்கை வெற்றி!




பல்லாயிரக்கணக்கில் பெரியார் திராவிடர் கழகம் இந்த சுவரொட்டிகளை ஒட்டியது. எம்.எஸ். சாமிநாதன் வீடு முற்றுகையிடப்படும் என்று ‘நாம் தமிழர்’ அமைப்பு சார்பில் இயக்குநர் சீமான் அறிவித்தார். இறுதியில் எம்.எஸ்.சாமிநாதன், இத்திட்டத்தில் தாம் பங்கேற்கப் போவதில்லை என்று அறிவித்து விட்டார்.

# பெரியாரை திரிப்பவர்கள் — பெரியார் திடலுக்குள்ளே தான்!

"பெரியார் கருத்துகளை - யாரும் சிதைத்து விடக்கூடாது என்பதே வீரமணியின் கருத்து" - என்று கலைஞர் சென்னையில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் (10.8.2009) குறிப்பிட்டுள்ளார் ('முரசொலி' 11.8.2009).

பெரியாரின் கருத்துகள் காலவரிசைப்படி முழுமையாக தொகுப்பாக்கப் படும் போதுதான், அவரது கருத்து சிதைக்கப்பட்டுள்ளதா, இல்லையா என்பதையே கண்டறிய முடியும். ஆனால், காலவரிசைப்படி தொகுப்பதையே கி.வீரமணி எதிர்க்கிறார்.

பெரியார் கருத்துக்கு தம்மைத் தாமே 'அத்தாரிட்டி'யாக நியமித்துக் கொண்டிருக்கிற வீரமணி, பெரியார் கருத்தை சிதைத்து திரித்து எழுதி பேசி வருவதற்கு அடுக்கடுக்கான சான்றுகளை முன் வைக்க முடியும். இதோ, உதாரணத்துக்கு சில:

- தனது இறுதி மூச்சு வரை தனித் தமிழ்நாடு லட்சியத்தை வலியுறுத்தியவர் பெரியார். ஆனால், பெரியார் பிரிவினை கோரவில்லை என்று, தமது கட்சியின் செயற்குழுவில் தீர்மானம் போட்டு, பெரியாரின் கருத்தை சிதைத்தது யார்? - வீரமணி.
- அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகவேண்டும் என்று இன இழிவுப் போருக்கு அழைப்பு விடுத்து, உச்சநீதிமன்றத்தையும், இந்திய அரசியலமைப்பையும் கடுமையாக சாடி - பெரியார் பேசினார். "கோயில் பகிஷ்காரம் ஏன்?" எனும் தலைப்பில் 1972 இல் பெரியார் உயிருடன் இருந்த போது சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் அந்த உரையை நூலாக வெளியிட்டது. அதே நூல் - 1993 இல் மீண்டும் வெளியிடப் பட்டபோது, பெரியாரின் 'இந்திய' எதிர்ப்புக் கருத்துகளை நீக்கி பெரியார் கருத்துகளை சிதைத்து, நீர்த்துப் போகச் செய்தது யார்? - வீரமணி.
- வடவர் எதிர்ப்பு, பார்ப்பனர் எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு, கடவுள் மறுப்பு - ஆகியவை பெரியாருடைய கொள்கைகளே அல்ல. அவை ஒவ்வொரு கட்டத்தில் பெரியார் பின்பற்றிய வழிமுறைகள்தான் என்று 'தினமணி' ஏட்டுக்கு 1994 இல் பேட்டி அளித்து, பெரியார் கொள்கையை திரித்தது யார்? - வீரமணி.
- 1965 இல் நடந்த இந்தி எதிர்ப்பு போராட்டத்தை பெரியார் ஆதரிக்காத நிலையில், பெரியார் மறைவுக்குப் பிறகு அந்தப் போராட்டத்தை அங்கீகரித்து, சசிகலா நடராசனை மகிழ்விக்க (அப்போது ஜெயலலிதா புகழாரம் பாடிய காலம்) அவருக்கு விருது வழங்கும் மாநாடு நடத்தி - பெரியார் கருத்தை திரித்தது யார்?- வீரமணி.
- 'விடுதலை' நாளேட்டில் முகப்பில் வெளிவந்து கொண்டிருந்த 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கம், 1976 இல் அவசர நிலை காலத்தில் - பெரியார் மறைவுக்குப் பிறகுதான் அகற்றப்பட்டது என்ற உண்மையை திரித்து, பெரியார் காலத்திலேயே அது நீக்கப்பட்டதாக பெரியார் மீதே பழிபோட்டு திரித்தது யார்? - வீரமணி.
- பா.ஜ.க. மதவெறி சக்திகளை மகிழ்விக்க ஜெயலலிதா மதமாற்றத் தடைச் சட்டம் கொண்டுவந்தபோது, அதை எதிர்த்துப் போராடாமல், பதுங்கிக் கொண்டு, அந்தச் சட்டத்துக்கு ஆதரவாக 'விடுதலை'யில் கட்டுரைகளை வெளியிட்டு, சட்டத்தை ஆதரித்து, பெரியார் கொள்கைகளை திரித்தது யார்? - வீரமணி.
- முதுகளத்தூரில் 1957 இல் தலித் மக்களுக்கு எதிரான சாதிக் கலவரத்துக்கு வித்திட்ட முத்துராமலிங்க தேவரை கடுமையாக எதிர்த்தவர் பெரியார். பெரியார் பார்வைக்கு மாறாக அந்த சாதித் தலைவரின் படத்தை தி.க. மாநாடுகளில் திறந்து, பெரியார் பார்வையை சிதைத்தது யார்? - வீரமணி.
- 1925 'குடிஅரசு' வார இதழில் 'மோட்சம்' எனும் மோசடியை விளக்குவதற்காக புரோகிதருடன் நடந்த ஒரு உரையாடலை கதையாக எழுதினார், பெரியார். வெகு தூரத்திலுள்ள ஒரு தோட்டத்துக்கு கையால் ஆற்று நீரை வாரி இறைத்துக் கொண்டிருந்த ஒருவரைப் பார்த்து வெகுதூரம் உள்ள ஆற்றுக்கு இந்தத் தண்ணீர் எப்படிப் போகும் என்று கேட்கிறார், புரோகிதர். அதற்கு அந்தப் பெரியவர், மேல் உலகத்திலுள்ள பிதுர்களுக்கு நீங்கள் மந்திரம் ஓதி அனுப்பும் பொருள்கள் எப்படி போய்ச் சேரும் என்று திருப்பி கேட்கிறார். பெரியார் சுட்டிக் காட்டிய கதையை பெரியாரின் வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சியாகவே மாற்றி 'பெரியார்' படத்தில் காட்சி வைத்து, பெரியார் வரலாற்றில் தவறான தகவல்களைப் புகுத்தியது யார்? - வீரமணி.
- திருவாரூர் விடயபுரத்தில் பெரியார் உருவாக்கிய 'கடவுள் மறுப்பு' தத்துவத்தை, கடலூரில் தம் மீது செருப்பு வீசப்பட்டபோது உருவாக்கியது போல், தாம் தயாரித்த 'பெரியார்' திரைப்படத்தில் வரலாற்றைத் திரித்தது யார்? - வீரமணி.
- 'பகுத்தறிவும் - நாஸ்திகமும்' என்று சில மாதங்களுக்கு முன்பு சுயமரியாதை பிரச்சார நிறுவனம் பெரியார் 'குடிஅரசு' ஏட்டில் எழுதிய சில கட்டுரைகளை தொகுத்து வெளியிட்டிருந்தது. அதில் - 'குடிஅரசில்' பெரியாரே தந்திருந்த தலைப்புகளை எல்லாம் மாற்றி திருத்தியது யார்? - வீரமணி.
- இயக்கத் தோழர்கள், இனி 'தோழர்' என்றே அழைக்கப்பட வேண்டும் என்று 1932-லேயே பெரியார் எழுதினார். ஆனால், நாம் அப்படி எல்லாம் அழைக்க வேண்டாம். கம்யூனிஸ்டுகளைப் பார்த்து காப்பி அடிப்பது நமது வேலை அல்ல என எழுதி பெரியார் கருத்தையே திரித்துக் கூறியது யார்? - வீரமணி.
- ஒற்றுமையும், கட்டுப்பாடும் கொள்கைகளுக்காகத்தான். காந்தி கொள்கையை பலி கொடுத்து ஒற்றுமை கட்டுப்பாடுகளைப் பேசியதால் காந்தி மடாதிபதி போல் ஆகிவிட்டார் என்று பெரியார் கூறியிருக்கும் போது - கொள்கையைத் தட்டிக் கேட்டவர்களையெல்லாம் கட்டுப்பாடு மீறிய துரோகிகள் என்று பட்டம் சுமத்தி, கொள்கையை விட கட்டுப்பாடே முக்கியம் என்று கூறி பெரியார் கொள்கைப் பார்வையை திரிப்பது யார்? - வீரமணி.
- 1925 இல் காஞ்சிபுரத்தில் காங்கிரஸ் மாநாட்டில் பெரியார் பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார், தீண்டாதோர் என்ற மூன்று பிரிவினருக்கும் அரசியல் தொடர்பான அனைத்து பதவிகளிலும் மக்கள் தொகைக் கேற்ப பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என்ற வகுப்புவாரி கோரிக்கையை முன்வைத்த நிலையில், காஞ்சிபுரம் மாநாட்டில் பெரியார் 50 சதவீத இடஒதுக்கீடு கேட்டார் என்று 'விடுதலை'யில் திரித்து எழுதியது யார்? - வீரமணி.
- சமுதாயப் புரட்சிக்காக அரசியலமைப்பையே கேள்விக்குள்ளாக்கிய பெரியார் உருவாக்கிய 'திராவிடர் கழகத்தை' பெரியார் பதிவு கூட செய்ய விரும்பாதபோது, பெரியாரின் திராவிடர் கழகத்தையே இந்திய டிரஸ்ட் சட்டப்படியும், வருமான வரிச் சட்டத்தின் கீழும் அறக் கட்டளையாகப் பதிவு செய்து, "திராவிடர் கழகத்தையே ஒரு பொது அறக்கட்டளையாக மத்திய அரசு அங்கீகரித்துவிட்டது" என்று மகிழ்ச்சியோடு அறிவிப்பு தந்து, பெரியார் இயக்கம் தொடங்கிய நோக்கத்தையே சிதைத்தது யார்? - வீரமணி.
- இனி கல்வி நிறுவனங்களை நடத்துவதில்லை என முடிவெடுத்து, திருச்சியில் கல்லூரி தொடங்குவதற்கு தனது சொந்த நிலத்தையும் ரூ.5 லட்சம் நன்கொடையும் அன்றைய தமிழக முதல்வர் பக்தவச்சலத் திடமே தந்து, அரசே கல்லூரியை நடத்தட்டும் என்றார் பெரியார். பெரியார் கருத்துக்கு மாறாக, அறக்கட்டளை சார்பாக சுயநிதிக் கல்லூரிகளை நடத்தி, அதற்கே முன்னுரிமை தருவது யார்? - வீரமணி.
- இலவசக் கல்வி வழங்கிய காமராசரை 'கல்வி வள்ளல் என்று அழைத்து, பாராட்டி ஆதரித்தார் பெரியார். கல்வியை இலவசமாக்கி, அனைத்து மக்களுக்கும் போய்ச் சேர வேண்டும் என்ற பெரியார் கொள்கைக்கு எதிராக, சுயநிதிக் கல்லூரிகளைத் தொடங்கிக் கொண்டு, கல்லூரிகள் நடத்தும் கல்விக் கொள்ளைகளைப் பற்றி கண்டனம் கூடத் தெரிவிக்காமல், பெரியார் கருத்துக்கு எதிர்திசையில் நடைபோடுவது யார்? - வீரமணி.
- 'லேவாதேவி' எதிர்ப்பு மாநாடு நடத்தியது பெரியார் இயக்கம், அக்கொள்கையை குழிதோண்டி புதைத்து, வட்டிக்கடைகளை, நிதிநிறுவனங்களை நடத்துவது யார்? - வீரமணி.
- 'எனக்கென்று வாரிசு எவருமில்லை; எனது கருத்துகளும் சிந்தனைகளும் தான்' என்று மறைவதற்கு சில வாரங்கள் முன்புகூட பேட்டி அளித்தார் பெரியார். இப்போது மகனை வாரிசாக்கும் முயற்சிகளில் இறங்கி, பெரியார் நூல்களையும் நாட்டுடைமையாக்க எதிர்ப்பு தெரிவித்து, பெரியாரியத்தை கொச்சைப்படுத்திக் கொண்டிருப்பது யார்? - வீரமணி.

இப்படி எத்தனையோ ஆதாரங்களை பட்டியல் போட முடியும்.

பெரியாரை சிதைப்பவர்களே - திரிப்பவர்களே, தங்களது 'வசதிக் கேற்ப' சுருக்குகிறவர்களே பெரியாரியத்தின் முழுமையான காப்பாளர்களாக பாசாங்கு காட்டுகிறார்கள்.

பெண் வீட்டை விட்டு வெளியே போனாலே பெண்களின் 'புனிதம்' கெட்டுவிடும் என்று வீட்டுக்குள் பூட்டி வைத்திருந்த பழமையாளர்களுக்கும் பெரியார் சிந்தனைகள் தங்கள் 'அறக்கட்டளை' எனும் படியைத்தாண்டி விட்டால், "கற்பு" கெட்டுப் போய்விடும் என்று "நியாயம்" பேசுகிறவர்களுக்கும் என்ன வேறுபாடு இருக்க முடியும்?

ஒளிவு மறைவு இல்லாத திறந்த புத்தகமான பெரியாரின் பக்கங்களை வெட்டி, ஒட்டி, சிதைத்து கொண்டிருப்பதே இவர்கள் தானே?

பெரியார் 'குடிஅரசை'யும், 'விடுதலை'யும் முழுமையாகப் பாதுகாக்காமல், பல ஆண்டுகாலத்துக்கான இதழ்களைத் தொலைத்துவிட்டு, அதைப் பற்றி கிஞ்சித்தும் கவலைப்படாத வீரமணியின் நிறுவனம் - தோழர்களிடம் இருந்தால் அனுப்பி வைக்குமாறு வேண்டுகோள் விடுக்கும் அவலத்தில் பெரியாரை நிறுத்தி வைத்திருக்கிறது.

இவர்கள் தான் மரபுரிமையாளர்களா? இவர்கள்தான் பெரியாரின் உண்மையான வாரிசுகளா? இவர்கள்தான் பெரியாரை சிதைக்காமல் காப்பாற்றுகிறவர்களா?

பெரியார் தொண்டால் தலை நிமிர்ந்தோம் என்ற நன்றி உணர்வு கொண்ட தமிழர்களின் சிந்தனைக்கு இந்த கேள்விகளை சமர்ப்பிக்கிறோம்!

# தஞ்சை இரத்தினகிரியின் பொய்; இதோ ஆதாரம்!

தம்மிடமிருந்த தொகுப்புகள் - பெரியார் அறக்கட்டளைக்கு உரிமையுடையவை என்றும், அதே தொகுப்புகளைத்தான் பெரியார் திராவிடர் கழகத்தலைவர் கொளத்தூர் மணி வெளியிட்டுள்ள தாகவும், எனவே கி.வீரமணியின் வழக்கில் அவரது சார்பில் தன்னையும் இணைத்துக் கொள்ள விரும்புவதாகவும் தஞ்சை இரத்தினகிரி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்திருந்தார். இந்த மனுவை உயர்நீதிமன்றம் ஏற்கனவே தள்ளுபடி செய்துவிட்டது.


பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி மீது கி.வீரமணி வழக்கு தொடர்ந்த பிறகு, இரத்தினகிரி, கழகத் தலைவர் கொளத்தூர் மணிக்கு 'குடிஅரசு'க் காக ரூ.3500-க்கான வரைவோலை ஒன்றை தனக்காக முன்பதிவுத் திட்டத்துக்காக அனுப்பியதோடு, கொளத்தூர் மணியை பாராட்டி கடிதம் ஒன்றையும் எழுதியிருந்தார். வழக்கு பற்றிய செய்திகளை தாம் அறிந்ததாகவும், அது பற்றி கவலைப்படாமல் தொகுப்புப் பணி தொடருவது தமக்கு மகிழ்ச்சி தருகிறது என்றும், தனது 35 ஆண்டுகால கனவை கொளத்தூர் மணி நிறைவேற்றி தருவதற்காக தமக்கு நன்றி கடப்பாடு உண்டு என்றும் கூறி, திருக்குறள் ஒன்றையும் எடுத்துக் காட்டியிருந்தார்.

"சிதைவிடத்து ஒல்கார் உரவோர்புதை அம்பின் பட்டுப்பாடு ஊன்றும் களிறு"

என்று இரத்தினகிரி எடுத்துக்காட்டிய குறளின் பொருள், "யானை அம்புகளால் புண்பட்டாலும் மனம் தளராமல் தன் பெருமையை நிலை நிறுத்தும்; அதுபோல் ஊக்க முடையவர்கள் தம் உயர்வுக்கு அழிவு வந்த போதும் மனம் தளராமல் தம் பெருமையை நிலைநாட்டுவர்" என்பதாகும்.

இப்படி பாராட்டு மழையை பொழிந்த - அதே இரத்தினகிரி தான், பிறகு கி.வீரமணி யோடு திடீர்நட்பாகி, கரம் கோர்த்து, உயர்நீதிமன்றத்தில் கழகத்துக்கு எதிராக வழக்கு தொடர்ந்ததோடு, கொளத்தூர் மணி தம்மிடம் பணம் தருவதாகக் கூறி, ஏமாற்றி விட்டதாக, 'ஜூனியர்விகடன்' ஏட்டுக்கு பேட்டியும் அளித்துள்ளார். இது குறித்து 'ஜூனியர் விகடன்' ஏட்டுக்கு கழகத்தலைவர் கொளத்தூர் மணி எழுதிய கடிதத்தையும் (அதை அந்த ஏடு வெளியிடவில்லை), இரத்தினகிரி கைப்பட கழகத் தலைவருக்கு எழுதிய கடிதத்தையும் இங்கு வெளியிடு கிறோம்.

தஞ்சை இரத்தினகிரி குறிப்பிட்டுள்ள ஒப்பந்தம் 44 தொகுதிகளும் முழுமையாக வெளியிடுவதற்கான ஒப்பந்தம் என்பதும்,



இந்த ஒப்பந்தம் பெரியார் திராவிடர் கழகத் தலைமை செயற்குழு ஒப்புதலுக்குப் பிறகே இறுதி செய்யப்படும் என்பதும், இரத்தின கிரியே தனது கைப்படஎழுதியிருப்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறோம். பொய்மை களும், மோசடிகளும் எப்படி அரங்கேறு கின்றன என்பதை தமிழின உணர்வாளர் களும், பெரியாரியல்வாதிகளும் புரிந்துணர வேண்டுகிறோம்.

கழகத் தலைவர் 'ஜூனியர் விகடன்' ஏட்டுக்கு எழுதியுள்ள கடிதம்:

**அன்புள்ள ஜூனியர் விகடன் ஆசிரியர் அவர்களுக்கு,**


வணக்கம். 5.7.2009 தங்கள் இதழின் 31 ஆம் பக்கத்தில் 'குடிஅரசு' நூல் வெளியீடு குறித்த தஞ்சை இரத்தினகிரியின் சில கருத்துகள் குறித்து விளக்கம் தரவே இக்கடிதம் எழுதலானேன்.

அவர் கூறியபடி 8.7.2008 இல் ஒப்பந்தம் மேற்கொண்டது உண்மைதான்.

அவ்வொப்பந்தத்தில் 'குடிஅரசு' இதழ் 1949 ஆம் ஆண்டு நின்று போனவரை 44 தொகுதிகளையும் முழுமையாக ஒரு சேர வெளியிட வேண்டும் என்றும்,

இதழ்களைத் தொகுத்து நகலெடுத்த மைக்கு அவருக்கு ஐந்து லட்சம் ரூபாயை தொகுதிகள் வெளியிடுவதற்கு முன் கொடுப்பது என்றும்,

இவ்வொப்பந்தம் பெரியார் திராவிடர் கழக செயற்குழுவின் இசைவுக்குப் பின்னர்


இரா. இரத்தினகிரி
R. RATHINAGIRI


தான் உறுதி செய்யப்படும் என்றும் தான் உள்ளது. (நகல் இணைக்கப்பட்டுள்ளது)

ஆனால், தற்போது 1949 முடிய உள்ள 44 தொகுதிகளும் வெளியிடப்படவில்லை; பெரியார் திராவிடர் கழகம் ஒப்பந்தத்துக்கு முன்னரே அறிவித்திருந்தபடி 1938 முடிய உள்ள காலத்துக்கான 27 தொகுதிகள் மட்டுமே வெளியிடப்படுகிறது.

ஏனெனில் இரத்தினகிரி ஐந்து லட்சம் கொடுப்பதற்கும், 44 தொகுதிகளையும் ஒரு சேர வெளியிடுவதற்கும், மறு பதிப்புரிமையை தஞ்சை பகுத்தறிவாளர் கழகத்துக்கு வழங்கு வதற்கும் பெரியார் திராவிடர் கழக செயற் குழு ஒப்புக் கொள்ளவில்லை. இதனை 12.07.2008 அன்று கோவையில் பெரியார் திராவிடர் கழக தலைமைக் குழு கூட்டம் முடிந்தவுடன் அவருக்கு அறிவிக்கப் பட்டு விட்டது.

ஆனால் ஏற்கனவே என்னிடம் 2,30,000 ரூபாயும், சில பெரியார் பற்றாளர்களிட மிருந்து 1,15,000 ரூபாய்களும் பெற்று, அப்பணத்தில் தட்டச்சு செய்திருந்தவற்றில் 1928, 1929, 1930, 1932 ஆகிய ஆண்டுகளுக்கான குறுந்தகடுகளையும், அச்செடுத்த நகல்களை யும் மட்டுமே கொடுத்துவிட்டு மற்றவற்றைக் கொடுக்காமல் சாக்கு போக்கு சொல்லி காலம் கடத்தினர்.

மீதி ஒன்பதரை ஆண்டுகளுக்கான 19 தொகுதி களும் எங்களின் கடுமையான தனி முயற்சியிலேயே தொகுக்கப்பட்டு, அச்சிடப் பட்டுள்ளன.



அதன் பின்னர் ஒரு மாதம் கழித்து, 'விடுதலை'யில் வீரமணியின் எதிர்ப்பு அறிவிப்பு வெளிவந்த பின்னரும், 13.08.2008 அன்று இதே இரத்தினகிரி, வீரமணியின் அறிவிப்பை பற்றிய கவலையின்றி பணி தொடர்வதை அறிந்து மகிழ்ச்சி தெரிவித்தும், தனது 35 ஆண்டுகால கனவை நிறைவேற்றி தருவதற்காக எனக்கு நன்றி தெரிவித்தும் கடிதம் எழுதியதோடு, தனது சார்பில் 'குடிஅரசு' நூல்களுக்கு முன் வெளியீட்டுத் தொகைக்கான வங்கி வரைவோலையையும் அனுப்பியிருந்தார். (நகல் இணைக்கப்பட் டுள்ளது)

1987-விருந்து வீரமணியை நாங்கள் இதுவரை பயன்படுத்தியே இராத சொற் களால் விமர்சனம் செய்து வந்த இரத்தினகிரி, இவ்வளவு நடந்த பின்னர் திடீரென வீரமணியோடு சேர்ந்து கொண்டு 'குடிஅரசு' வெளியீட்டுக்கு எதிராக உயர்நீதி மன்றத்தில் மனு செய்தது (அது தள்ளப்பட்டு விட்டது) ஏன் என்பதை வாசகர்களின் யூகத்துக்கே விட்டுவிடுகின்றேன்.

முதல் 'குடிஅரசு' இதழ் வெளி வந்து 84 ஆண்டுகளும், பெரியார் இறந்து 36 ஆண்டு களும் கடந்த நிலையிலும், பெரியாரின் சொத்துக்களையும், உட்கட்டுமானங்களை யும் வைத்துக் கொண்டு அறிவுசார் சொத்தும் தனக்கே என்று வழக்காடும் வீரமணி தங்களிடம் மூன்று ஆண்டுகளுக்கான 'குடிஅரசு' இதழ்கள் இல்லை என்றும், யாரேனும் இருந்தால் அனுப்பி வையுங்கள் என்றும் 'விடுதலை' ஏட்டில் தற்போதுதான் (டிசம். 20, 2008) விளம்பரம் வெளியிட் டுள்ளார். ஆனால், நாங்கள் 'குடிஅரசு' இதழ்களை பாதுகாத்து வைத்திருந்த பெரியார் பற்றாளர்களைத் தேடி அறிந்து சில இதழ்களின் சில பக்கங்களைத் தவிர முழுமையாகவே திரட்டியிருக்கிறோம். அந்தத் தொகுப்புகளைப் பார்த்து மனம் பூரித்து மகிழும் உண்மையான, நேர்மையான பெரியார் பற்றாளர்களின் மகிழ்ச்சிக்கு முன் னால், இந்த தன்னலவாதிகளின் தடைகளும், பொறுமல்களும், குற்றச்சாட்டுகளும் எங்களுக்கு ஒரு பொருட்டே இல்லை.

**- தா.செ. மணி**


**"புரட்சிப் பெரியார் முழக்கம்"**
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**

தொடர்புக்கு: ஆசிரியர், 29,
பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 9840940400

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

## கழகத்துக்கு வெற்றி!

# பெரியார் திடலில் 'குடிஅரசை' தொகுக்கிறார்களாம்!

பெரியார் திடலில் இப்போது இரவு பகலாக சுறுசுறுப்பாக வேலைகள் நடக்கிறதாம். என்ன வேலை தெரியுமா? தங்களிடம் இல்லாத 'குடிஅரசு' இதழ்களை தேடத் தொடங்கியிருக்கிறார்களாம். இருக்கிற இதழ்களிலிருந்து பெரியார் எழுத்துக்களை தொகுத்து அச்சேற்றுகிறார்களாம். 'குடிஅரசு களஞ்சியம்' தொகுதிகளாக வெளியிடும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளதாம்.

பெரியார் திராவிடர் கழகம் 'குடிஅரசு' பெரியார் எழுத்துப் பேச்சுகளை வெளியிடக் கூடாது என்று நீதிமன்றம் போனவர்கள், இப்போது தாங்களே வெளியிடப் போவதாக காட்டுவதற்கு இவ்வளவு முயற்சிகளும் நடக்கிறதாம். திருச்சி பெரியார் மாளிகையில், 1983 ஆம் ஆண்டில் பெரியார் பற்றாளர்கள் தொகுத்து கி. வீரமணியிடம் தந்த தொகுப்பை தூசி தட்டி வெளியே எடுப்பதற்கு 26 ஆண்டுகாலம் தேவைப்பட்டிருக்கிறது. மண்டல் பரிந்துரைக்கூட காங்கிரஸ் ஆட்சியில் 10 ஆண்டுகாலம்தான் அலமாரியில் தூங்கியது.

இது "பெரியார் திராவிடர் கழகத்துக்கு" கிடைத்துள்ள மகத்தான வெற்றி.

பெரியாரியலை பெரியார் திடலிலிருந்து அச்சிட்டு வெளிக் கொணர, 'பெரியார் திராவிடர் கழகம்' என்ற இயக்கத்தின் களச் செயல்பாடுகளும், அதன் 'குடி அரசு' தொகுப்புப் பணியும் தான் காரணமாக அமைந்துள்ளன என்பதை தமிழ் கூறும் நல்லுலகம் நன்றாக இப்போது புரிந்து கொள்ளும்.

26 ஆண்டுகளாக பெரியார் எழுத்து பேச்சுகளை முடக்கிப் போட்டவர்கள் -

பெரியார் திராவிடர் கழக முயற்சியை ஏளனம் பேசியவர்கள் -

நூற்றுக்கணக்கான பக்கங்களில் தொகுதி தொகுதிகளாக வெளியிட்டால், எவன் படிப்பான்; அலமாரியில்தான் தூங்கும் என்று எழுதித் தீர்த்தவர்கள் -

பெரியார் திராவிடர் கழகத்தைப் பார்த்து, "லேசான ஏளனப் புன்னகையோடு புறந்தள்ளுகிறோம்" என்று ஏகடியம் பேசியவர்கள் -

இப்போது 'குடிஅரசு களஞ்சியங்'களை சுறுசுறுப்பாக தொகுக்கிறார்களாம்.

**நல்லது! தாராளமாக தொகுக்கட்டும்.**

எப்போதோ, அவர்கள் மறந்துவிட்ட 'சுயமரியாதை சுடரொளி' புலவர் இமயவரம்பன் படத்தோடு தொகுப்புகள் வெளிவருகிறதாம். வெளிவரட்டும்; நமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி தான்!


**வெளி வரும் தொகுப்புகள் – முழுமையானவையா? திரிக்கப்படாதவையா? என்பதை பெரியார் திராவிடர் கழகத்தின் முழுமையான தொகுப்புகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் புரிந்து விடும் என்பதையும் இப்போதே சொல்லி வைக்கிறோம்!**

**பெரியார் திராவிடர் கழகம் அவ்வளவு எளிதில் இவர்களை உறங்க விடாது!**

## கழகத் தோழர் திலீபன் கைது!




மேற்குறிப்பிட்ட கழகத்தின் சுவரொட்டி - நாராயிணி பீடத்தை அதிர்ச்சியடையச் செய்துள்ளது. வேலூர் இந்து முன்னணியினர் கழகத்தின் மீது காவல்துறையிடம் புகார் தரவே வேலூர் மாவட்ட கழகத் தலைவர் திலீபன், பிணையில் வெளிவர இயலாத வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளார்.




பெரியார் எழுத்துக்களை பிறர் வெளியிட மீண்டும் தடை வாங்கிய வீரமணி- செய்தி நன்றி: 'குமுதம்'

# இந்தியா உருவானது எப்படி?

ஆங்கிலேயர்கள் இந்தியா வருவதற்கு முன், இப்போது இருக்கும் இந்தியா என்ற நாடு இருந்ததா என்ற கேள்விக்கு, இல்லை என்பதே எல்லோருக்கும் தெரிந்த பதில். வட இந்தியாவை எடுத்துக் கொணடால், அதன் 1800 ஆண்டு வரலாற்றில், ஒரே பகுதியாக இருந்ததாக வரலாறு கிடையாது. மவுரியர், கனிஷ்கர், குப்தர், அர்ஷவர்த்தனர், சுல்தான்கள், பல்வேறு பகுதிகளைக் கைப்பற்றி ஆட்சி செய்தனர். தனித்தனி நிலப் பகுதிகளில், தனித்தனி ஆட்சிகளே நடந்தன. ஒரே குடையின் கீழ் பெரும் நிலப்பகுதி கொண்டு வரப்பட்டபோது கூட, தன்னாட்சிகளை அழித்து விடவில்லை.

மராத்தியை மய்யமாகக் கொண்ட மத்திய இந்திய பகுதி, தக்காணிப் பிரதேசம் என்று அழைக்கப்படுவ தாகும். இங்கும், தனித்தனிப் பிரதேசங்களும், தனித்தனி ஆட்சிகளுமே நடந்திருக்கின்றன. மராத்தி, ஒரிசா, கன்னடம் மற்றும் ஆந்திரப் பகுதி களைக் கொண்ட இந்தத் தக்காணப் பிரதேசத்தில் சாதவாகணர் என்ற ஆந்திரர்கள், சாளுக்கியர், ராஷ்டிரகூடர், கங்கர், கடம்பர் என்று பல் வேறு வம்சத்தினரின் ஆட்சிகள், தனித்தனிப் பகுதிகளில் நடந்தன.

13 ஆம் நூற்றாண்டில், வட இந்தியாவிலிருந்து, மொகலாயர்கள் படை எடுத்து வந்து, தக்காணத்தின் வடபகுதியைக் கைப்பற்றினர். அப்போது தக்காணத் தென்பகுதியில் விஜயநகரப் பேரரசு இருந்தது. இது, மத்திய இந்தியாவின் நிலை என்றால், தென்னிந்தியாவின் வரலாறு என்ன? சேரர், சோழர், பாண்டியர், களப்பிரர், பல்லவர் மற்றும் குறுநில மன்னர்களின் ஆட்சிகளுக்குட்பட்ட, தனித் தனிப் பிரதேசங்கள்தான் இருந்தன. இந்திய வரலாற்றில், பெரும் நிலப் பகுதியைக் கைப்பற்றி, பல தனியாட்சிகளை ஒழித்து - ஒரு முக ஆட்சியை உருவாக்கியவர்கள் மொகலாயர்கள் தான்!

மொகலாயர்கள் பேரரசு நடந்த காலத்தில்தான் பார்ப்பனர்கள் நாடு முழுவதும், சமூக அரங்கில் தங்கள் ஆதிக்கத்தை நிலைப்படுத்திக் கொண்டார்கள். இந்தியாவில் வாழ்ந்த முஸ்லிம் அல்லாத பல்வேறு இனக் குழுக்களை, பார்ப்பனர்கள் தங்கள் மேலாதிக்கத்தின் கீழ் கொண்டு வந்ததும் இந்தக் காலத்தில் தான். முஸ்லிம் அல்லாத எல்லோரையும், மொகலாய மன்னர்கள் 'இந்து' என்று கூறியதும், 'இந்து' என்ற பெயர் வழக்கில் வந்ததும், அக்காலத்தில் தான். சமஸ்கிருத சுலோகங்களையும், வேதங்களையும் பார்ப்பனர்கள், தங்கள் சுயநலச் சுரண்டலுக்கு ஏற்ப திருத்தி அமைத்துக் கொண்டதும் அப்போதுதான்.

அப்போதும் தமிழ்நாடு மொகலாயர்கள் ஆட்சியின் கீழ் வரவில்லை. அத்தகைய மொகலாயப் பேரரசுகூட, அவுரங்கசீப்புக்குப் பிறகு வீழ்ந்து விட்டது. அதன் பிறகு 66 ஆண்டுகளுக்கு, இந்தியத் துணைக் கண்டத்தைக் கட்டி ஆளும் ஒரே மய்ய அரசு எதுவும் உருவாகியதில்லை. ஆங்கிலேயரின் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பெனிதான் இங்கே குறி வைத்தது. இந்த வர்த்தகக் கம்பெனி உருவாக்கப் பட்ட நாள் 1.12.1600. இந்திய அரசர் களிடம் உரிமை வாங்கிக் கொண்டு, கடற்கரை ஓரமாக தங்களது வர்த்தகக் குடியேற்றங்களை இவர்கள் ஏற்படுத்திக் கொண்டனர். கி.பி. 1612 இல் முதன்முதலாக சூரத்திலும் தொடர்ந்து மசூலிப்பட்டிணம் (1616), அரிகர்பூர் (1633), சென்னை (1640), பம்பாய் (1669), கல்கத்தாவிலும் (1686) வர்த்தகக் குடியேற்றங்களை நிறுவினர்.

வர்த்தகம் செய்ய வந்தவர்கள், நாடு பிடிக்கும் ஆசையை விட்டு விடுவார்களா? இந்தக் கம்பெனி வெறும் கையுடன் வந்துவிடவில்லை. தனக் காக ஒரு கடற்படையை வைத்துக் கொள்ளவும், தேவையான சட்டங்களை இயற்றிக் கொள்ளவும் பிரிட்டிஷ் ராணியிடம் உரிமை பெற்றிருந்தது. முதலில் மேற்கு வங்கத்தில் உள்ள சிட்டகாங் பகுதியைத் தாக்கி தோல்வி கண்டார்கள். பிரிட்டிஷ் கம்பெனி நாட்டை விட்டே வெளி யேற வேண்டும் என்று உத்தரவு போட்ட அவுரகசீப் மரணமடைந் தார். (கி.பி.1707) பேரரசு சிதைந்து, தனித்தனி ஆட்சிகள் உருவானது. தனது அதிகாரத்தை உறுதிப் படுத்த நேரம் பார்த்துக் கொண்டிருந்த ஆங்கிலேயர்களுக்கு நல்ல வாய்ப்பாகி விட்டது.


ராபர்ட் கிளைவ், ஆற்காடு பகுதியைப் பிடித்தார் (கி.பி.1749) தொடர்ந்து 12 ஆண்டுகள் போர் நடத்தி தென்னிந்தியாவின் பல பகுதிகளைப் பிடித்தனர். கருநாடகப் போர்கள் மூலம் ஆந்திரத்தின் பெரும் பகுதியைக் கைப்பற்றினர். வெற்றி களைக் குவித்த ராபர்ட் கிளைவ் வடக்கே போனார். பிளாசி யுத்தம் நடத்தினார்; அதில் வங்கம் வீழ்ந்தது. அதைத் தொடர்ந்து ஒரு நூற்றாண்டில், படிப்படியாக ஆங்கிலேயர்கள் கைப்பற்றிய பல்வேறு பகுதிகள்தான் இந்தியா. ஆங்கிலேயர் ஆட்சி செய்த இந்தியாவில், இன்றைய ஆப்கானிஸ்தான் நாட்டின் பெரும் பகுதியும், பர்மாவும் (இன்றைய மியான்மர் நாடு) இலங்கையும் அடங்கி இருந்தது.

அப்போது இலங்கை ஒரு மாவட்டமாகக் கூட அங்கீகரிக்கப்படவில்லை; ஒரு வட்டமாகவே கருதப்பட்டு, அதன் நிர்வாக அலுவலகமே தமிழநாட்டில் தான் இருந்தது. இன்றைய பாகிஸ் தானும் பங்களாதேசும் அன்றைய 'இந்தியா' தான். இப்போதுள்ள வட கிழக்கு மாநிலங்களோ, காஷ்மீரோ அன்றைய இந்தியாவில் இல்லை. ஆக, 3000 ஆண்டு கால வரலாற்றில் - தனித் தனிப் பகுதிகளாக நிலவிய தேசங்களை - துப்பாக்கி முனையில் மிரட்டி, ஆங்கிலே யர்களால் உருவாக்கப்பட்ட நாடுதான் 'இந்தியா'.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 14th August 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 ஆகஸ்டு 20, 2009 புரட்சி 8 முழக்கம் 32 விலை: ரூ.2.50

## இரண்டு செய்திகள்

(1) சங்கர்ராமன் கொலை வழக்கில் - முதல் குற்றவாளியான காஞ்சி ஜெயேந்திரன் தண்டனையிலிருந்து தப்பித்து விடுவதற்கான முயற்சிகள் நடப்பது தெளிவாகவே தெரிகிறது. அரசு தரப்பின் முக்கிய சாட்சிகளே 'பல்டி அடிக்கத் தொடங்கிவிட்டனர்; கொலை செய்யப்பட்ட சங்கர்ராமன் மனைவி, தனது கணவரை கொலை செய்தவர்களை தமக்குத் தெரியும் என்று ஏற்கனவே கூறியிருந்த சாட்சியத்தை மாற்றிக் கொண்டு, இப்போது மனைவியும் மகனும், மகளும் அவர்களை தமக்கு அடையாளம் தெரியாது என்று கூறிவிட்டார்கள்.

ஏற்கனவே காவல்துறை கட்டாயப்படுத்திய தால் அவ்வாறு கூறியதாக, இப்போது சங்கர் ராமன் மனைவி கூறியுள்ளார். சங்கராச்சாரி வழக்கை விரைவுபடுத்தவில்லை என்று தி.க.வினர் கூட ஆர்ப்பாட்டம் நடத்தி, தங்களின் பார்ப்பன எதிர்ப்பு எவருக்கும் சளைத்தது அல்ல என்று காட்டிக் கொண்டனர். இப்போது அரசு சாட்சிகளே 'பல்டி' அடித்தது பற்றி ஏதும் வாய் திறக்கவில்லை.

(2) தமிழ்நாட்டில் அரசு வழக்கறிஞராக மாசிலா மணி என்ற தமிழர் இருந்து வந்தார். சமூக நீதியில் அழுத்தமான நம்பிக்கையுள்ளவர். தமிழ்நாட்டில் முதன்முதலாக வகுப்புவாரி ஆணையைப் பிறப்பித்த முத்தையா முதலியார் அவர்களின் பேரன் என்ற சிறப்பும் அவருக்கு உண்டு. இப்போது நடக்கும் "பெரியார் ஆட்சியில்" - திரு. மாசிலாமணி அவர்கள் பதவி விலகி, அதற்கு பதிலாக ஒரு பார்ப்பனர் அரசு வழக்கறிஞராகி உள்ளார். இவர் ஏற்கனவே எம்.ஜி.ஆர். ஆட்சி காலத்தில், அரசு வழக்கறிஞராக நியமிக்கப்பட்ட வி.பி. ராமன் எனும் பார்ப்பனரின் பேரன். அப்போது வி.வி.இராமன் நியமனத்தின் போது எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு எதிராக - பார்ப்பன ஆட்சி நடப்பதாக வீரமணியும், விடுதலையும் வரிந்து கட்டிக் கொண்டு எழுதினார்கள். இப்போது "பெரியார் ஆட்சி" நடப்பதாக வீரமணி கூறும் அதே ஆட்சியில் பார்ப்பன ரல்லாத சமூகநீதியாளர் ஒருவருக்கு பதிலாக வி.பி.ராமன் பேரன் அரசு வழக்கறிஞராகி விட்டார்; 'விடுதலை'யோ, வீரமணியோ வாயை திறக்காமல் இறுக மூடிக் கொண்டு விட்டார்கள்.

தமிழர் தலைவர் இந்த ஆட்சியிடம் தமிழர் களுக்காக "வேலை வாங்கி"க் கொண்டிருக் கிறார் என்று 'விடுதலை' ஏடு அவ்வப்போது மார் தட்டிக் கொள்வது வாடிக்கை.

வேலை வாங்கும் லட்சணம் இதுதானோ?

## கலைஞர் அன்றும் இன்றும்

### அன்று....

*தடைசெய்யப்பட்ட இயக்கங்களை ஆதரித்துப் பேசுவது குற்றமாகாது. அந்த இயக்கத்துக்கு உதவிகள் செய்வதுதான் குற்றம் என்று 'பொடா சட்டப் பிரிவுகளின் அடிப்படையிலேயே உச்சநீதிமன்றம் 16.12.2003 இல் தீர்ப்பளித்தது. தீர்ப்பை உச்சநீதிமன்ற நீதிபதிகள் எஸ்.ராஜேந்திர பாபு மற்றும் ஜி.பி. மாத்தூர் ஆகியோர் வழங்கியிருந்தனர். இந்தத் தீர்ப்பின் அடிப்படையிலேதான் ஜெயலலிதா ஆட்சியில் பொடாவில் கைது செய்யப்பட்டிருந்த பழ.நெடுமாறன், வைகோ. உள்ளிட்டோர், சுமார் ஒன்றரையாண்டு சிறைவாசத்துக்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டனர். உச்சநீதி மன்றத்தின் இந்தத் தீர்ப்பை சட்டமன்றத்தில் ஜெயலலிதா, தவறாக சுட்டிக் காட்டினார். தி.மு.க. ஆட்சியில் அவர் மீது உரிமை மீறல் பிரச்சினையும் கொண்டு வரப்பட்டது. மீண்டும் ஜெயலலிதா, தனது தவறான கருத்தை தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் வலியுறுத்தினார். இதற்கு பதிலளிக்கும் வகையில் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி 'முரசொலி' ஏட்டில் (பிப்.19, 2008) விளக்கமாக விடுத்துள்ள அறிக்கையில் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின் பகுதிகளையே எடுத்துக் காட்டி பதில் எழுதினார்.*

> *"உள்நோக்கத்துடன் செய்யப்பட்டிருந்தால் மட்டுமே பொடாச் சட்டம் 3(1) பிரிவின் கீழ் குற்றமாகக் கருதப்படும். கிரிமினல் நோக்கத்துடன் செய்யப்பட் டிருந்தால் மட்டுமே அது பயங்கரவாதச் செயலாகக் கருதப்படும் என்று நாடாளுமன்றம் வகுத்துள்ளபோது ஒரு நபர், 'பகிரங்கமாக அறிவிப்பதாலோ' (பொடாவின் 20வது பிரிவு) அல்லது, "ஆதரவைக் கோரினாலோ" அல்லது* **"ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்தாலோ, நிர்வகித்தாலோ"** *அல்லது "ஏற்பாடு செய்வதினாலோ" அல்லது "ஒரு கூட்டத்தில்* **பேசினாலோ"** *(பொடாவின் 21வது பிரிவு), ஒரு (பயங்கரவாத) அமைப்பின், எந்தவிதமான நடவடிக்கைக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் நோக்கம் அல்லது திட்டம் அல்லது பயங்கர வாதச் செயலை செய்ய உதவும் திட்டம் எதுவும் அவருக்கு இல்லாத நிலையில் அந்த நபர் குற்றம் இழைத்துள்ளார் என்று எப்படிக் கூற முடியும்? அப்படி இல்லை என்று நாங்கள் தெளிவாக இருக்கிறோம்" ('முரசொலி' பிப்.19, 2008)*

*- கலைஞர் கருணாநிதி உச்சநீதிமன்றத் தீர்ப்பை எடுத்துக் காட்டி அன்று 'முரசொலியில் இப்படி எழுதினார்.*

### இன்று....

> *"தடை செய்யப்பட்ட இயக்கங்களை ஆதரித்துப் பேசுவது, தடை செய்யப்பட்ட இயக்கங்களின் தலைவர்களின் படங்கள், கொடி மற்றும் இலட்சினைகளை பொது விளம்பரங்களுக்கு உபயோகித்தல் மற்றும் பத்திரிகை, தொலைக் காட்சிகளில் பிரசுரித்தல் / காண்பித்தல் ஆகியவை UNLAWFUL ACTIVITIES (PREVENTION) ACT, 1968படி தண்டனைக்குரிய குற்றங்களாகும். எனவே, பொதுக் கூட்டங்கள், மாநாடு, பேரணி போன்றவற்றை நடத்துபவர்கள் யாராயினும், எந்த அமைப்பைச் சார்ந்தவர்களாயினும் இதை மனதில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது. மீறுபவர்கள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் எச்சரிக்கப்படுகிறது. - தலைமைச் செயலாளர், தமிழ்நாடு அரசு."*

*- இது இன்று தி.மு.க. அரசு ஏடுகளில் தந்துள்ள விளம்பரம்.*

*கொடூரமான 'பொடா' சட்டத்தின் கீழேயே தடை செய்யப்பட்ட இயக்கத்தை ஆதரித்துப் பேசுவதோ, கூட்டம் நடத்துவதோ, குற்றமாகாது என்று வாதிட்ட அதே கலைஞர் தான் - இன்று 1968 ஆம் ஆண்டு சட்டத்தைக் காட்டி கருத்துரிமையைப் பறித்து, காங்கிரசை மகிழ்விக்க துடிக்கிறார்.*

*காங்கிரஸ் இனப் படுகொலைக்கு துணை போனாலும், படுகொலைகளை முடித்த பிறகு, தமிழர்களுக்காக கண்ணீர் விட்டு அழுவதுகூட குற்றம் என்று காங்கிரஸ் கூறினாலும், கலைஞர், காங்கிரசின் பக்கம் தான் நிற்பார். தமிழின உணர்வை நசுக்குவார்!*

*இவர்கள் தான் புடம் போட்ட தமிழினப் பாதுகாவலர்களாம்!*

*அந்தோ, தமிழா, உனது நிலையைப் பார்த்தாயா?*

●

# பொய் பரப்பும் தி.க. தலைமைக்கு மறுப்பு

## மலேசியா, சிங்கப்பூர் தமிழர்களுக்கு கழகம் எழுதிய கடிதம், இதோ!

*'குடிஅரசில் பெரியாரின் எழுத்து-பேச்சு தொகுப்புகள் தொடர்பாக கழகம் அறிவித்த, முன் வெளியீட்டுத் திட்டம் குறித்து - மலேசியா, சிங்கப்பூரிலுள்ள பெரியாரியல்வாதிகளுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி கடிதம் எழுதினார். கழகத்தின் இணையதளத்திலும் இக் கடிதம் வெளியிடப்பட்டது. ஏதோ கி.வீரமணிக்கு எதிராக வெளிநாட்டில் வாழும் தமிழர்களுக்கு கழகம் கடிதங்களை எழுதியதாகவும், அதன் காரணமாகத்தான் கி.வீரமணி, இப்போது நீதிமன்றம் வரை வந்ததாகவும் ஒரு தவறான பிரச்சாரம் தி.க. வட்டாரத்தில் பரப்பப்படுகிறது.*

*'நக்கீரன்' வார ஏடும் இதையே கி.வீரமணிக்கு ஆதரவாக செய்தியாக வெளியிட்டிருக்கிறது. உண்மையில் கழகத் தலைவர் எழுதிய கடிதத்தில் தி.க. வீரமணி பற்றி எந்தக் குறிப்பும் இடம் பெறவில்லை. தங்களது 'அடாவடி' நடவடிக்கைகளை நியாயப்படுத்தவே உண்மைக்கு மாறான பிரச்சாரத்தில் தி.க. தலைமை இறங்கியுள்ளது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மலேசியா, சிங்கப்பூரிலுள்ள பெரியாரியல்வாதிகளுக்கும், தமிழின உணர்வாளர்களுக்கும் எழுதிய கடிதத்தை அப்படியே இங்கு வெளியிடுகிறோம்.*

அன்புடையீர் வணக்கம்.

தமிழர்களின் உரிமைகளுக்காக தனது வாழ்நாள் முழுவதும் போராடிய தந்தை பெரியாரின் கொள்கைகள் தமிழ்நாட்டில் மேலும் தீவிரமாகக் கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காக துடிப்பும் சமூக அக்கறையும் கொண்ட இளைஞர்களைக் கொண்டு, பெரியார் திராவிடர் கழகம் என்ற அமைப்பை தமிழ்நாட்டில் நாங்கள் நடத்தி வருகிறோம்.

1925 ஆம் ஆண்டிலிருந்து பெரியார் பேசியும், எழுதியும், போராடியும் - தமிழர்களுக்காக உழைத்திருக்கிறார். அவரது பேச்சுகள், எழுத்துகள் பெரியார் 1925 இல் தொடங்கி "குடிஅரசு" வார ஏட்டில் தொடர்ந்து வெளி வந்திருக்கின்றன.

ஆனால் - வேதனை என்னவென்றால் காந்தியடிகள், அம்பேத்கர் போன்ற தலைவர்களின் எழுத்துகள், பேச்சுகள் முழுமையாக ஆண்டுவாரியாக தொகுக்கப்பட்டு வெளிவந்ததுபோல், பெரியாரின் கருத்துகள் வெளிவராமலே போய்விட்டது.

இப்போது இந்த முயற்சியில் "பெரியார் திராவிடர் கழகம்" தன்னை ஈடுபடுத்திக் கொள்ள முன்வந்திருக்கிறது. இதற்கான "குடிஅரசு" இதழ்களை எல்லாம், தமிழகம் முழுதுமிருந்தும் அரும்பாடுபட்டு திரட்டியிருக்கிறோம். முதல் கட்டமாக 1925 லிருந்து 1938 முடிய 14 ஆண்டுகளாக வாரம் தோறும் வெளிவந்த "குடிஅரசு" இதழ்களில் பெரியார் எழுதிய கட்டுரைகள், அவரது பேச்சுகளை ஆண்டுவாரியாக தொகுத்து வெளியிடும் பெரும் முயற்சியில் இறங்கியுள்ளோம்.

20.12.1929 முதல் 10.1.1930 முடிய மலாயா நாட்டில் சிங்கப்பூர் உட்பட பல்வேறு பகுதிகளில் பயணம் செய்து அகில மலாயாதமிழர் மகாநாடு உட்பட 40 இடங்களில் உரையாற்றியமை போன்ற பல்வேறு அரிய செய்திகளும் இதில் அடக்கம் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மிகவும் பொருட் செலவு உள்ள, கடுமையான முயற்சிகள் தேவைப்படும் திட்டம் இது என்பது உங்களுக்குத் தெரியும்.

1925 லிருந்து 1938 முடிய பெரியார் கருத்துகளை தொகுத்தபோது 400 பக்கங்களுக்கும் கூடுதலாகக் கொண்ட 27 தொகுதிகள் வருகின்றன. இதில் இலாப நோக்கமின்றி அடக்க விலையிலேயே முன் பதிவுத் திட்டத்தின் கீழ் வெளியிடப்படும். இதற்காக 40 லட்சம் ரூபாய் வரை நாங்கள் செலவிட வேண்டியிருக்கிறது. இந்த நிலையில் தான் இந்தப் பெரும்பணியின் தேவையையும், அவசியத்தையும் உணர்ந்த தங்களைப் போன்றோரின் உதவியை நாங்கள் நாடி, இக்கடிதத்தை எழுதுகிறோம்.

6 மாத காலத்துக்கு வட்டி இல்லாத கடனாகவோ அல்லது தாங்கள் விரும்பினால் நன்கொடையாகவோ அளித்து உதவ முன் வந்தால், எங்களுக்கு பேருதவியாக அமையும். ஆகஸ்ட் மாத இறுதிக்குள் தயாரிப்புப் பணிகளை முடித்து பெரியார் பிறந்த நாளான செப்.17 இல் தொகுப்புகள் வெளிவர இருக்கின்றன என்பதையும், தங்களின் மேலான கவனத்துக்குக் கொண்டு வருகிறோம். நமது சமுதாயத்தின் எதிர்கால இளந்தலைமுறைக்கு தமிழர்கள் கடந்து வந்த போராட்டப் பாதைகளையும், நமது சமூக வரலாற்றையும் புரிந்து கொள்வதற்கு, நாம் விட்டுச் செல்லும் அழிக்க முடியாத சொத்தாக இந்தப் பணி திகழும் என்று கருதுகிறோம்.

தங்களின் பங்களிப்பையும் எதிர்நோக்கி, இந்த மடலை விடுக்கிறோம். தங்களின் பதிலை ஆவலோடு எதிர்பார்க்கிறோம்.

### மலேசிய தி.க. தலைவர் ரெ.சு. முத்தையாவுக்கு மட்டும் தனியாக விரிவான கடிதத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி எழுதினார். அந்தக் கடிதம் இதுதான்.

மதிப்பிற்குரிய அய்யா, வணக்கம்.

உங்களிடம் ஒரு வேண்டுகோளை முன்வைக்கவே இக்கடிதம் எழுதலானேன். முதலில் எங்களைப் பற்றி சிறு அறிமுகம் செய்து கொள்ள விரும்புகிறேன்.

உயர்நிலைப் பள்ளி நாட்களிலேயே பெரியாரிடம் ஈடுபடுத்திக் கொண்ட நான் 1970 முதல் திராவிடர் கழகத்தில் நேரடியாக இணைந்து, 1978 முதல் சேலம் மாவட்ட செயலாளராகவும், 1984 முதல் மாநில அமைப்பு செயலாளராகவும் செயல்பட்டு வந்தவன் ஆவேன்.

2000 ஆண்டின் இறுதியில், சந்தன வீரப்பனால் சிறை வைக்கப்பட்டிருந்த கன்னட நடிகர் இராஜ்குமார் மீட்புக்கென அரசு அனுப்பிய தூதுக் குழுவில் சென்ற காரணத்தாலும் (அப்போது தி.மு.க. அரசு - திராவிடர் கழகத் தலைமை ஜெயலலிதா ஆதரவு நிலை எடுத்திருந்தது) முதல்வர் கலைஞரை நேரில் சந்தித்ததாலும் வெளியேற்றப்பட்டேன்.

பல்வேறு காலகட்டங்களில் வெளியேற்றப்பட்ட (அ) வெளியேறிய பலர் பெரியாரை ஏற்றுக் கொண்டபின் வேறு வழியில் இயங்க முடியாமல் தமிழ்நாடு திராவிடர் கழகம், பெரியார் திராவிடர் கழகம் என்ற பெயர்களில் இயங்கி வந்த திருவாரூர் தங்கராசு, ஆனூர் ஜெகதீசன், வழக்கறிஞர் துரைசாமி போன்ற பல மூத்த தலைவர்களின் வழிகாட்டுதலில் அவர்களும் இணைந்து, என்னைத் தலைவராகவும், விடுதலை க.இராசேந்திரன், கோவை கு. இராம கிருட்டிணன் ஆகியோரை பொதுச்செயலாளராகவும் கொண்டு "தந்தை பெரியார் திராவிடர் கழகம்" என்ற பெயரில் "பெரியார் காலத்திய தமிழ்நாட்டை உருவாக்குவோம்" என்ற முழக்கத்தை முன் வைத்து 11.06.2001 இல் புதிய இயக்கம் கண்டோம்.

பெரியாரியலில் ஆழ்ந்த பிடிப்பும், அதை செயற்படுத்துவதில் மிக்க துடிப்பும், அதற்கென இழப்புகளையும் இடர்பாடுகளையும் பொருட்படுத்தாத துணிவும் கொண்ட எளிய உறுதியான இளம் தொண்டர்களுடன் பெரு வீச்சுடன் தற்போது "பெரியார் திராவிடர் கழகம்" என்ற பெயருடன் இயங்கி வருகிறோம்.

இந்த ஏழாண்டு கால இடைவெளியில்,

- அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் உரிமை வேண்டும் என்ற கோரிக்கைக்காக காஞ்சி காமாட்சி அம்மன் கோவில் நுழைவுப் போராட்டத்தில் 865 பேர் கைதானது.
- வேத சோதிடக் கல்வியை மதுரை பல்கலைக் கழகத்தில் நுழைந்ததை எதிர்த்து பஞ்சாங்க எரிப்பு போராட்டத்தை நடத்தி அப்பாடத் திட்டத்தை நிறுத்தியது.
- அறநிலையத் துறையில் பெண்களை நியமிக்காதிருந்த போக்கை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்காடி 23 பெண்களை முதல் கட்டத்தில் பணியமர்த்தச் செய்தமை.
- தனியார் துறையில் இடஒதுக்கீட்டை விளக்கி தமிழகத்தில் முதன்முதலாக தமிழகம் தழுவிய பரப்புரை பயணத்தை நடத்தியமை.
- பெரும்பகுதி தமிழகத்தில் இருப்புப் பாதைகள் இருந்தும் கேரளத்தில் தலைமை இடம் இருந்ததால் தமிழக திட்டங்கள் புறக்கணிக்கப்படுவதால், தொடர் போராட்டங்களை எடுத்து சேலம் தொடர் வண்டிக் கோட்டம் அமையச் செய்தமை.
- பிற்படுத்தப்பட்டோருக்கு மத்திய அரசு கல்வி நிறுவனங்களில் 27 சதவீத இடஒதுக்கீடு கோரி பரவலான பரப்புரைகளும், அதில் தடைபடுத்த பரிந்துரைத்த வீரப்ப மொய்லி அறிக்கை எரிப்பு போராட்டத்தில் மார்க்சிய பெரியாரிய பொதுவுடமைக் கட்சியுடன் இணைந்து போராடி சுமார் 2000 தோழர்கள் சிறைபட்டமை.
- இலங்கைத் தமிழர்களைக் கொல்லும் சிங்கள படைக்கு தமிழ்நாட்டில் பயிற்சி அளிப்பதை எதிர்த்து போராடி வெளியேற்றியதோடு.
- சிங்கள அரசுக்கு இராணுவ உதவி செய்யும் இந்திய அரசைக் கண்டித்து சுமார் 600 தோழர்கள் இந்திய தலைநகர் டில்லி சென்று காயக்கட்டு ஊர்வலமும், ஆர்ப்பாட்டமும் நடத்தி பாதுகாப்பு அமைச்சரிடம் நேரில் சந்தித்து விளக்கி திரட்டப்பட்ட பல இலட்சம் கண்டன கையெழுத்துகளைக் கையளித்தமை.
- திராவிடர் கழகம் நிறுவிய சீரங்கம் பெரியார் சிலை மதவெறி அமைப்பினரால் சேதப்படுத்தப்பட்டபோது, தமிழகமெங்கும் பூணூல் அறுப்புகளும், பார்ப்பன மடங்கள் தாக்கப்படும் நூற்றுக்கணக்கான தோழர்கள் சிறைப்படுத்தப்பட்டதோடு, ஏழு தோழர்கள் மீது ஓராண்டு வெளியே வர முடியாத தேசியப் பாதுகாப்பு சட்டத்தில் கைதானது - உயர்நீதிமன்றத்தில் வழக்காடி தேசியப் பாதுகாப்பு சட்டத்தை உடைத்தது -
- தீண்டாமையின் கொடிய வெளிப்பாடாய் தமிழகத்தின் சில சிற்றூர்களின் தேனீர் கடைகளில் நடைமுறையில் இருந்த தனிக்குவளை முறையை எதிர்த்து, தனிக்குவளைகளை உடைத்து சுமார் 1000 பேர் கைதானமை -
- சாதியும், இன ஒதுக்கலே என வலியுறுத்தி வீதிகளில் இறங்கிப் போராடியதோடு மட்டுமின்றி, தென்னாப்பிரிக்காவில் டர்பன் நகரில் நடைபெற்ற ஐ.நா. இணை மாநாட்டில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் கலந்து கொண்டு வலியுறுத்தியமை -
- மாவட்டங்கள் தோறும் மூட நம்பிக்கை ஊர்வலங்களோடு நாத்திகர் விழாக்களை நடத்தியது போன்ற தொய்வில்லா செயல்பாடுகளின் ஊடாகவே பெரியாரியலைப் பரப்பவும், பல குழப்பங்களைத் தெளிவாக்கவும் சுமார் 40க்கும் மேற்பட்ட நூல்களையும், "சோதிடப் புரட்டு" என்ற 570 பக்கங்களைக் கொண்ட அரிய ஆய்வு நூலையும் வெளியிட்டுள்ளோம்.

அதிலும் குறிப்பாக, தமிழர்களின் வரலாற்றில், வாழ்வியலில், சிந்தனையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதும், பெரியாரால் 1925 இல் தொடங்கப்பட்டு சுமார் 25 ஆண்டுகாலம் நடத்தப்பட்டதுமான "குடிஅரசு", "புரட்சி", "பகுத்தறிவு" ஆகிய இதழ்களில் பதிவாகியுள்ள பெரியாரின் பேச்சுகளும், எழுத்துகளும் சுமார் 80 ஆண்டுகள் கழித்த நிலையிலும் மக்களிடம் முழுமையாக போய் சேராமல் புதைந்து கிடந்த நிலையை மாற்ற 1925, 1926 ஆகிய ஆண்டுகளின் இதழ்களைத் தொகுத்து மொத்தத்தில் சுமார் 1000 பக்கங்கள் கொண்ட மூன்று தொகுதிகளை ஏற்கனவே வெளியிட்டும் உள்ளோம்.

தமிழக சமுதாய இயல் போக்கையே புரட்டிப் போட்ட சுயமரியாதை இயக்கம் முழு வீச்சுடன் இயங்கிய 1925 முதல் 1938 முடிய உள்ள காலத்தில் "குடிஅரசு" ஏட்டில் வெளி வந்துள்ள பெரியாரின் எழுத்துகளையும், பேச்சுகளையும், ஏற்கனவே வெளியிட்ட தொகுதிகளில் வெளி வராது. இப்போது புதிதாக கிடைத்துள்ள சுமார் 150 பக்க புதிய இணைப்புகளுடனும் சுமார் 400 பக்கங்களைக் கொண்ட 27 தொகுதியாக பெரியாரின் 130 ஆவது பிறந்த நாளை 17.9.2008 அன்று வெளியிட உள்ளோம்.

அதே நாளில் 7.11.1928 இல் தொடங்கி சுமார் 55 இதழ்கள் மட்டுமே வெளிவந்த 'ரிவோல்ட்' எனும் ஆங்கில வார ஏட்டில் வெளியாகியுள்ள பெரியார், எஸ்.இராமநாதன், நாகர்கோயில் பி.சிதம்பரம், குத்தூசி குருசாமி, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி முதலிய அறிஞர்களின் தேர்ந்தெடுத்த கட்டுரைகளைத் தொகுத்து சுமார் 800 பக்கங்கள் கொண்ட நூல் ஒன்றையும் வெளியிட உள்ளோம்.

சுமார். ரூ.5800 விலையுள்ள அந்நூற் தொகுதிகளை ரூ.3500 என முன் வெளியீட்டு விலையாக முடிவு செய்துள்ளோம். இந்த எளிய பெரியார் தொண்டர்களின் தோள்களுக்குத் தாங்க முடியாத பெருஞ்சுமையான இந்நூல் வெளியீட்டில் நீங்களும், அங்குள்ள பெரியாரியல் சிந்தனையாளர்கள், தமிழ் இன உணர்வாளர்கள், பொதுநல சிந்தனையாளர்களும், பெரும் அளவிலான முன் பதிவுகள், இயன்ற அளவு நன்கொடைகள் வழியாக ஊக்குவிக்கவும், உதவவும் வேண்டுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். ●

# ஈழத் தமிழர்கள் சுயநிர்ணய உரிமை கோர முழு உரிமை உண்டு

சர்வதேச அளவில் மனித உரிமைகளுக்காக குரல் கொடுத்து வரும் பேராசிரியர் பிரான்சிஸ் அந்தோணி பாய்ஸ் – அமெரிக்காவின் ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றுள்ளவர் என்பதோடு, மனித உரிமைகள் தொடர்பான பல ஆய்வு நூல்களை எழுதியவர். உலக அளவிலான மனித உரிமை அமைப்பான அம்னஸ்டி இன்டர் நேஷனலில் 'உயர்மட்டக் குழு இயக்குனர் ஈழத்தில் தமிழினப் படுகொலையை எந்த ஒரு நாடும் தடுக்க முன் வந்ததை சுட்டிக்காட்டியுள்ள அவர், இந்தியா, இதில் இழுக்கை தேடிக் கொண்டுவிட்டது. என்று கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக 'தலித் முரசு' இதழுக்கு அவர் தொலைபேசியில் அளித்துள்ள பேட்டியின் ஒரு பகுதி:

**அரை நூற்றாண்டிற்கும் மேலாக இனப்படு கொலைக்கு ஆளாகி வரும் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு என்னவாக இருக்க முடியும்?**

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு என்ன தீர்வு என்பதை அவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும். அரசியல் தீர்வுகள் இவ்வாறாக இருக்கலாம்: 1. தங்களுக்கென்று சுதந்திரமான, இறையாண்மை கொண்ட தனி நாட்டை உருவாக்கிக் கொள்வது 2. ஒரு சுதந்திர நாட்டுடன் இணைந்து செயல்படுவது 3. மக்களால் தீர்மானிக்கப்படும் வேறு அரசியல் நிலைப்பாடுகள். இவற்றில் எதுவாக இருந்தாலும், அது இலங்கைத் தமிழர்களாலேயே தேர்வு செய்யப்பட வேண்டும். இலங்கை அரசாங்கமோ, நானோ அல்லது இந்தியாவில் வாழும் தமிழர்களோகூட எந்தத் தீர்வையும் சொல்ல முடியாது. பன்னாட்டுச் சட்டங்களின்படியும் செயல்முறைகளின்படியும் தங்கள் சுயநிர்ணய உரிமையை இலங்கைத் தமிழர்களே முடிவு செய்ய வேண்டும். எனினும் இங்கு ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன். வரலாற்று ரீதியாகப் பார்க்கும்போது, இலங்கைத் தமிழர்களைப் போல இனப்படுகொலைக்கு ஆளாகும் எந்த மக்கள் குழுவும், தங்களுக்கென்று ஒரு சுதந்திரமான தனி நாட்டை உருவாக்கிக் கொண்ட பிறகு தான் அதிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொண்டனர்.

கடந்த சில மாதங்களில் 50 ஆயிரத்திற்கும் அதிகமான தமிழர்கள் வன்னியில் படுகொலை செய்யப்பட்டபோது, எந்த ஒரு நாடும் அந்த வெறித்தனமான படுகொலை நிகழ்வைத் தடுக்க முயலவில்லை. 1948 இன அழிப்பு எதிர்ப்பு ஒப்பந்தத்தின்படி, எல்லா நாடுகளும் தாங்கள் செய்ய வேண்டிய கடமையை செய்யத் தவறிவிட்டன. எனவே, இலங்கை அரசிடமிருந்து தங்களை காப்பாற்றிக் கொள்ள, தனி நாடு ஒன்றை உருவாக்கிக் கொள்வதே இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்புடையது. பன்னாட்டுச் சட்ட திட்டங்களின்படி, இன அழிப்பால் பாதிக்கப்பட்டவர்கள் த னி நாடு ஒன்றை உருவாக்கிக் கொள்வதே பயனுள்ள தீர்வும் உரிய இழப்பீடும் ஆகும்.

இந்திய அரசு இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் தலையிடாததற்கு சொல்லும் காரணம், இலங்கைத் தமிழர்களின் சுய நிர்ணய உரிமைப் போராட்டத்தை, தான் அங்கீகரித்தால், இந்தியாவில் வாழும் 6 கோடி தமிழர்களும் அதைப் போல் தனி நாடு கேட்டுப் போராடுவார்கள் என்பதே. இது, பன்னாட்டுச் சட்டங்களின்படி ஒரு பொய்யான இரட்டை கூறு நிலை. எனவே இவ்வாறான காரணத்தைச் சொல்லி, இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்கத் தவறுவது இந்தியாவுக்கு இழுக்கு.

இலங்கையில் வாழும் தமிழர்கள் ஒரு 'மக்கள் குழு'வினர். எனவே, சுயநிர்ணய உரிமையைப் பெறுவதற்குத் தகுதியானவர்கள். சமூக மற்றும் அரசியல் உரிமைகளுக்கான பன்னாட்டு ஒப்பந்தத்தின்படி, இலங்கைத் தீவில் வாழும் தமிழர்கள் சுயநிர்ணய உரிமை பெறத் தகுதியானவர்கள் என தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தில் இலங்கையும் கையெழுத்திட்டுள்ளது.

இலங்கையில் வாழும் தமிழர்கள், தங்களுக்கென்று தனியாக ஒரு மொழி, இனம் மற்றும் மதத்தைக் கொண்டிருக்கும் மக்கள். இதை இலங்கை அரசும் ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த ஒரே காரணத்துக்காகத்தான் இலங்கை அரசு தமிழ் இன அழிப்பில் ஈடுபடுகிறது.

இன்னும் தெளிவாக சொல்கிறேன். இலங்கையும் கையெழுத்திட்டுள்ள சமூக மற்றும் அரசியல் உரிமைகளுக்கான பன்னாட்டு ஒப்பந்தத்தில், தமிழர்களின் சுயநிர்ணய உரிமைகள் பன்னாட்டு சட்டங்களின்படி அங்கிகரிக்கப்பட்டுள்ளன. அதில் இந்த உரிமையின்படி, அவர்கள் சுதந்திரமாக தங்கள் சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டு வளர்ச்சிகளை முன்னெடுத்துச் செல்ல முடியும்.

# கலகங்கள் – ஆயுதக் குழுக்களை உருவாக்கும் இந்திய உளவு நிறுவனங்கள்

விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் 'எழும் தமிழ் ஈழம்' என்ற தலைப்பில் நடத்திய இன விடுதலை அரசியல் மாநாட்டில் விளம்பர பேனர்களில் பிரபாகரன் படம் இருந்ததால் காவல்துறையே அந்த பேனர்களை அகற்றியது. மத்திய உளவுத் துறையினர் மாநாட்டை சீர்குலைக்கவே இத்தகைய நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்றும், தி.மு.க ஆட்சிக்கு எந்த இடையூறும் வந்துவிடக் கூடாது என்பதில் தாம் தெளிவாக இருப்பதாகவும் தொல். திருமாவளவன் பேசியிருக்கிறார். மத்திய அரசை எதிர்த்தால் தமது அரசை எதிர்ப்பதைவிட கடுமையாகக் கோபம் கொண்டு செயல்படக் கூடிய 'தமிழின' ஆட்சி தமிழகத்தில் நடக்கிறது என்பதே உண்மை. எனவே தான் தொல் திருமாவளவன் பேசிய அடுத்த நாளே தடை செய்யப்பட்ட இயக்கத்தை ஆதரித்துப் பேசினால், 1967 ஆம் ஆண்டு சட்ட விரோத (தடுப்பு) நடவடிக்கைகள் சட்டம் பாயும் என்று தமிழக அரசு அவசர அவசரமாக அறிவித்து விட்டது. 50000 தமிழர்களை சிங்கள ராணுவம் ஒரே நாளில் பிணமாக்கியபோது, அதற்கு உடந்தையாக இருந்த காங்கிரசுக்கு, சிவப்புக் கம்பளம் விரித்த ஆட்சி, இதே ஆட்சிதான். தேர்தல் கூட்டணிக்காக தொல். திருமாவளவன் கூட இதை சகித்துக் கொண்டார். தி.மு.க. தலைவர் காங்கிரசின் துரோகத்தை எந்த நிலையிலும் எதிர்க்கத் தயாராக இல்லை என்பது மீண்டும் மீண்டும் உறுதியாகி வருகிறது. மத்திய அரசு உளவு நிறுவனங்கள் தடை செய்யப்பட்ட இயக்கங்களை தடுத்து நிறுத்தும் "தேச பக்தர்களும்" அல்ல; பல நாடுகளில் உள்நாட்டுக் கலவரங்களை உருவாக்கியதே இந்த "உளவு" (Raw) நிறுவனம்தான். விடுதலை இராசேந்திரன் எழுதிய "தமிழ் ஈழப் பிரச்சினையில் இந்திய உளவு நிறுவனங்களின் சதி" நூலிலிருந்து ஒரு பகுதியை இங்கு வெளியிடுகிறோம்.

தீவிரவாத இயக்கங்களை மத்திய அரசும் - உளவுத் துறை நிறுவனங்களுமே உருவாக்கி வளர்த்து வருகின்றன. பலருக்கு இது வியப்பாக இருக்கலாம். ஆனால், மறுக்கப்பட முடியாத உண்மை.

பஞ்சாபில் பல்வேறு சீக்கியர் அமைப்புகள் ஆயுதப் போராட்டம் நடத்திய போது, உளவுத்துறையே, ஆயுதமேந்திப் போராடும் குழுவை உருவாக்கி பயிற்சி அளித்து, அவர்களுக்குள்ளே மோதல்களை உருவாக்கியது. அண்டை நாடான இலங்கையில் இந்திய அரசே, சில போராளிக் குழுக்களுக்குப் பயிற்சி அளித்து 'சகோதர யுத்தத்தை' ஊக்குவித்தது! இப்போது பொடா சட்டத்தில் தடை செய்யப்பட்டுள்ள ஒரு அமைப்பு 'போடோ (Bodo) தேசிய ஜனநாயக முன்னணி' என்பதாகும். அசாம் மாநிலத்தில் போடோ பழங்குடி மக்கள் வாழும் பகுதியை தனி மாநிலமாக்கக் கோரி, ஆயுதமேந்திப் போராடிய அமைப்பு இது. இந்த அமைப்பு எப்படி உருவானது? யாரால் உருவாக்கப்பட்டது? இதன் பின்னணி என்ன?

பொடா சட்டம் கொண்டு வரப்பட வேண்டியதின் தேவையை வலியுறுத்தி இந்திய சட்ட ஆணையம், ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறது அல்லவா? அதே அறிக்கை, போடோ தீவிரவாதிகள் அசாமில் நிகழ்த்திய வன்முறைத் தாக்குதல்களையும் விவரித்திருக்கிறது.

"1997 இல் பொடோ தீவிரவாதிகள் 178 தாக்குதல்களில் 215 பேரைக் கொன்றனர். 1996 இல் 213 தாக்குதல்களில் 260 பேரைக் கொன்றனர். 1997 இல் 10 பகுதிகளில் வெடிகுண்டுகளை வெடிக்க செய்து 22 பேரை சாகடித்தனர். 1998 இல் இந்தத் தீவிரவாத நடவடிக்கைகள் மேலும் அதிகரித்தன."

என்கிறது சட்ட ஆணையத்தின் பரிந்துரை. பொடா சட்டத்தின் தேவையை வலியுறுத்த, சட்ட ஆணையம் இந்த வாதத்தை முன் வைக்கிறது. ஆனால், இந்த போடோ தீவிரவாத அமைப்பை உருவாக்கி பயிற்சி அளித்ததே மத்திய அரசும் அதன் உளவுத்துறையும் தான்.

மணிப்பூர் மாநில ஆளுநராக இருந்த திரு.வேத்மார்வா இந்தியாவின் தீவிரவாத இயக்கங்கள் பற்றி ஒரு நூல் எழுதியிருக்கிறார், 'Uncivil Wars: Pathology of Terrorism in India' என்பது அந்நூலின் தலைப்பு. அதில் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

"ஆயுதங்களையும் வெடி மருந்துகளையும் செயலாற்றுவதற்கான பயிற்சிகளை, போடோ தீவிரவாதிகளுக்கு முதன் முதலாக அளித்ததே, இந்தியாவின் சிறப்புப் பாதுகாப்புப் பிரிவுதான்! (SSB - Special Security Bureau) வெளியிலிருந்து வரும் ஆக்கிரமிப்பு சக்திகளுக்கு எதிராக, போடோ மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இந்தப் பயிற்சி தருவதாகக் கூறினார்கள். சிறப்புப் பாதுகாப்புப் பிரிவின் இந்தத் திட்டத்துக்கு அப்போதே எதிர்ப்புகள் வந்தன. குறுகிய கண்ணோட்டத்தில் எடுக்கப்படும் இந்த முடிவால், போடோ மக்களிடையே தீவிரவாதம் பரவப் போகிறது என்று, அப்போதே எச்சரித்தார்கள். 1980களின் பிற்பகுதியிலிருந்து போடோ தீவிரவாதம் வளரத் துவங்கியது" என்று எழுதியிருக்கிறார், மணிப்பூர் மாநிலத்தின் ஆளுநர்.

இப்படி மத்திய அரசின் நிறுவனங்களே உருவாக்கும் தீவிரவாத அமைப்புகள், ஒரு கட்டத்தில் அரசுக்கு எதிராகவே திரும்புகின்றன. ஆனால் பொடா போன்ற அடக்குமுறை சட்டங்களைக் கொண்டு வருவதற்கு இவர்களே உருவாக்கிடும் தீவிரவாத அமைப்புகளையே காரணமாக காட்டுகின்றன, இந்த ஆட்சிகள்! இவை மட்டுமா?

**(1) வங்க தேசத்தைப் பிரித்தது:**

பாகிஸ்தானில் வங்க மொழி பேசும், கிழக்கு பாகிஸ்தானை தனி நாடாக்கியதில் 'ரா' உளவு நிறுவனத்துக்கு பெரும் பங்கு உண்டு.

1970களின் முற்பகுதியில் பாகிஸ்தான் ராணுவம் பங்களாதேஷ் விடுதலை கோரிய மக்கள் மீது, கடும்தாக்குதலை நடத்தியது. இலட்சக் கணக்கில் மக்கள் அகதிகளாக, இந்தியாவுக்கு ஓடி வந்தனர். போராடிய பங்களாதேஷ் மக்களுக்கு ஆதரவாக தனி நாட்டை உருவாக்கி, பாகிஸ்தானை கூறு போட 'ரா' முடிவெடுத்தது. 'முக்திவாகினி' என்ற படையை 'ரா' உருவாக்கி, அதன் பெயரில் வங்க மொழி மக்கள் வாழும் கிழக்கு பாகிஸ்தானில் ஊடுருவி, கொரில்லா தாக்குதல் நடவடிக்கைகளில், 'ரா' நிறுவனம் இறங்கியது. பாகிஸ்தானின் உடைமைகள் நசுக்கப்பட்டன. பாகிஸ்தான் ராணுவத்தினர், கிழக்கு பாகிஸ்தான் பகுதிக்குள் நுழைய முடியாத அளவுக்கு பாதைகளை அழித்தார்கள். இறுதியில் பாகிஸ்தான் தோற்றது. பாகிஸ்தான் ராணுவ தளபதி ஏ.ஏ.கே. நிசாரி, இந்திய ராணுவ தளபதி ஜெக்ஜித் சிங் அரோராவிடம், பாகிஸ்தான் ராணுவத்தை சரணடையச் செய்யும் ஒப்பந்தத்தில், 1970 டிசம்பர் 16 இல் கையெழுத்திட்டார்.

**(2) 'சிரிக்கும் புத்தர்' நடவடிக்கை :**

1974 மே 18 ஆம் தேதி இந்தியா - பொக்ரானில் முதன்முதலாக அணுகுண்டு வெடித்தது. அத்திட்டத்தை மிகவும் ரகசியமாக பாதுகாக்கும் பொறுப்பை 'ரா' நிறுவனம் ஏற்றுக் கொண்டது. இந்த அணுகுண்டு வெடிப்புக்கு சூட்டப்பட்ட பெயர் 'சிரிக்கும் புத்தர்' (Operation Smiling Budha) என்பதாகும்.

**(3) சிக்கிம் இணைப்பு:**

இமயமலையின் கிழக்குப் பகுதியில் உள்ள நாடு சிக்கிம். சிக்கிமைச் சுற்றி, திபேத், நேபாளம், பூட்டான் நாடுகளும், மேற்கு வங்க மாநிலமும் அமைந்துள்ளன. சிக்கிமில் நடந்த மன்னராட்சியை இந்தியா அங்கீகரித்து, மன்னருக்கு 'சோக்கியால்' (தர்மராஜா) என்ற கவுரவப் பட்டத்தையும் வழங்கியிருந்தது. சிக்கிமில் மன்னராட்சியை ஒழித்துவிட்டு, இந்தியாவுக்கு ஆதரவான ஒரு ஜனநாயக ஆட்சியமைப்பை உருவாக்கும் பொறுப்பு 1972-ல் 'ரா' அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டது. அதற்கேற்ற சதித்

4 ஆம் பக்கம்

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

## எல்லைத் தாண்டிய பயங்கரவாதிகள் யார்?

# பறிக்கப்பட்ட காஷ்மீர் மக்களின் உரிமை

*கடந்த இதழில் இந்தியா உருவானது எப்படி என்ற கட்டுரையை வெளியிட்டிருந்தோம். இந்த இதழில், காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமையை - இந்திய தேசிய பார்ப்பன ஆட்சி பறித்த சோக வரலாற்றை 'புரட்சி பெரியார் முழக்கம்' பதிவு செய்கிறது. - நன்றி: மோ. ஸ்டாலின் நினைவு நூலக வெளியீடான - 'மாண்டொழிக மரண தண்டனை' நூல்.*

இந்திய அரசு, இந்திய அரசியல்வாதிகள், மக்கள் திரள் ஊடகங்களில் 'குறியீடாக' அண்மையில் அடிபடும் சொல் 'எல்லை தாண்டும் பயங்கரவாதம்' பற்றியதாகும்.

வெள்ளிப் பனிமலையான இமயத்திற்கும், பசுமைப்படம் விரிக்கும் பஞ்சநதி தீரத்திற்கும் இடையில் உள்ள காஷ்மீர். நாற்பது நகரங்கள், ஒன்பதாயிரம் கிராமங்களைக் கொண்ட காஷ்மீரில் 90 சதவீதம் இஸ்லாமியர்கள். இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் காஷ்மீர் மக்கள் பாகிஸ்தானுடனோ, இந்தியாவுடனோ தங்கள் நாட்டை இணைப்பதை எதிர்த்தனர். தங்கள் நாட்டிற்கு முழு சுதந்திரம் கோரி ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

1946 மே 15 இல் ஸ்ரீ நகரில் நடந்த பொதுக்கூட்டத்தில் ஷேக் அப்துல்லா..

"மாநிலத்தில் மன்னராட்சியை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற கோரிக்கை, 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தின் தர்க்க ரீதியிலான நீட்சியேயாகும். சுதந்திரப் போராட்ட இயக்கமானது, பிரிட்டிஷ் அதிகாரம் முழுமையாக விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்று கோரும் பொழுது பிரிட்டிஷ் ஏகாதிபத்திய கைக் கூலிகளும் இயல்பாகவே வெளியேற வேண்டும். இறையாண்மை, அதன் உண்மையான சொந்தக்காரர்களிடம் அதாவது மக்களிடம் மீட்டுத் தரப்பட வேண்டும். இந்திய மாநிலங்களை ஆண்ட ஆட்சியாளர்கள் இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு எப்பொழுதுமே துரோகம் செய்து வந்துள்ளார்கள். வலிமை வாய்ந்த ஜார் மன்னர்களை கவிழ்த்தது ஒரு புரட்சி. பிரான்சில் ஆளும் வர்க்கத்தை வலிமை இழக்கச் செய்தது. பிரெஞ்சுப் புரட்சி. அமிருஸ்தர் ஒப்பந்தத்தைக் கிழித்து எறிவதற்கான நேரம் வந்து விட்டது. இறையாண்மை என்பது மகாராஜா ஹரிசிங்யீன் பிறப்புரிமை அல்ல. காஷ்மீரை விட்டு வெளியேறு என்பது புரட்சி தொடர்பான பிரச்சினையுமல்ல. அது உரிமை தொடர்பான பிரச்சினையாகும்'. (பிரகாஷ் சந்த்ரா National Question in Kashmir, P.40)

காஷ்மீர் தேசத்தின் படை வலுகுன்றி அண்டை நாடுகளான இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் அடிமைப்படும் நிலையில் அந்நாட்டு இந்து மன்னனான ஹரிசிங் நடத்திய ஊதாரி வாழ்க்கையைக் குறிப்பிடும் டொமினிக் லேப்பியர், லேரி காலின்ஸ்

பலவீனமும் சஞ்சலமும் கொண்டவராக இருந்த அவரின் காமக் களியாட்டங்களும், முறைகேடான செயல்பாடுகளும் அவருக்கு இமலாயன் போர்ஜியா என்ற பட்டத்தைப் பெற்றுத் தந்துள்ளது. போர்ஜியா என்பது ஸ்பெயின் வம்சா வழியைச் சேர்ந்த இத்தாலிய குடும்பம். இதன் வழி வந்தவர்கள் பல்வேறு தவறான நடவடிக்கைகளுக்குப் பெயர் போனவர்கள். போருக்கு முன்னர் பிரிட்டன் பத்திரிகைகளின் வாசகர்களுக்குக் கிளுகிளுப்பூட்டும் மிஸ்டர் ஏ-வாக இருந்த ஹரி சிங் துரதிருஷ்ட வசமாக கொஞ்சம் வேறு விதமாகவும் இருந்தார்' (நள்ளிரவில் சுதந்திரம், ப. 295)

1947 செப்டம்பரில் இந்திய இராணுவம் ஒரு பக்கமும், எதிரில் பாகிஸ்தானும் காஷ்மீரைக் கைப்பற்ற நின்ற நிலையில், இந்திய அரசின் உள்துறை அமைச்சுச் செயலாளர் வி.பி. மேனன் காஷ்மீரை இந்தியாவுடன் இணைப்பது என்ற மவுண்ட்பேட்டனின் சதியாலோசனையை நடைமுறைப்படுத்துவதில் ஈடுபடுகிறார். 'காஷ்மீர் அரசரும் நல்லதையே நம்பி ஒன்றும் செய்யாமல் வாளாவிருந்தார். ஆனால் சுதந்திர ஜம்மு காஷ்மீர் என்ற கருத்து ஊசலாட்டம் அவரிடம் இருந்தது' என்கிறார் வி.பி.மேனன். (The Story of Integration of Indian States, P.377)

மவுண்ட்பேட்டன் ஹரிசிங்கிடம் காஷ்மீரை இந்தியாவுடன் இணைக்க ஒப்புக் கொள்ளச் செய்ய நிர்பந்தித்த பொழுது, "இல்லை இந்தியாவுடன் சேரவும் நான் விரும்பவில்லை. நான் சுதந்திரமாகவே இருக்க விரும்புகிறேன்" என்றார். (நள்ளிரவில் சுதந்திரம். ப. 296) வி.பி.மேனன் பலவித தந்திர உத்திகளைக் கையாண்டு காஷ்மீரை இந்தியாவுடன் இணைப்பதற்கான ஒப்புதலைக் காஷ்மீர் மன்னர் ஹரிசிங்கிடம் 1947 அக்டோபர் 26 இல் பெற்றதன் பின்னர் நடந்தவைகளைக் குறிப்பிடும் இந்நூல் ஆசிரியர்கள் -

மூன்று நாட்களுக்குப் பிறகு இணைப்புக்கான இறுதி ஒப்பந்தத்தை மன்னரின் அரண்மனைக்கு மேனன் அனுப்பி வைத்தார். இதில் மன்னர் வருத்தத்துடன் கையெழுத்திட்டார். பின்னர் தனது கடந்த கால நினைவுகளைப் புதைக்க தனது விரும்பத்தகாத விருந்தினரான மேனனுடன் விருந்து நிகழ்ச்சி நடத்த அவர் முடிவு செய்தார். மாலை நேரம் முழுவதும் அந்த வறிய சிவில் ஊழியர் தொண்டையை நனைக்க அவர் விஸ்கி ஊற்றிக் கொடுத்தார். அதன் பிறகு மேனன் ஷாம்பென் மதுவையும் குடிக்க நிர்பந்திக்கப்பட்டார். வறுத்த இறைச்சி, சூதாட்டம், இசைக்குழு, நடனப் பெண்களை தெரிவு செய்து கொள்ளுதல் என முழு அளவிலான விருந்துக்கு மன்னர் உத்திரவிட்டார். கூச்ச சுபாவமுள்ள சைவ உணவுக்காரரான மேனனுக்கு அந்த மாலைப் பொழுது அச்சம் தருவதாக அமைந்தது. (மேலது ப.300)

காஷ்மீர் மீதான இந்திய அரசின் உரிமையை ஆயுதங்களுடன் எதிர்த்த காஷ்மீர் மக்களையும், ஆக்கிரமிக்க முனைந்த பாகிஸ்தானையும் அமைதிப்படுத்த ஐ.நா. ஒரு கமிஷனையும் - அதன் தலைவராக வான்வாங்கனோவே என்பவரையும் நியமித்தது. அவர் 1. காஷ்மீர் மக்களின் பொது வாக்கெடுப்பு (Referendum) மூலம் காஷ்மீரின் தலைவிதியை நிர்ணயிப்பது என்றும் 2. போர் நிறத்தப் பொறுப்புகளை கமிஷன் ஏற்க வேண்டும் என்றும் இரண்டு அம்சத் தீமானத்தை 1948 ஜன.29 ஆம் தேதி முன்மொழிந்தார். 1948 ஏப்ரல் 21 இல் ஐ.நா. வின் பாதுகாப்புக் குழுவில் இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(மீதி அடுத்த இதழில்)

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திட்டங்களை 'ரா' உருவாக்கி, அரங்கேற்றியது மூன்றே ஆண்டுகளில் சிக்கிம், இந்தியாவின் 22வது மாநிலமாக, 1975 ஏப்.26 இல் இணைக்கப்பட்டது.

**(4) பாகிஸ்தான்-பஞ்சாபில்:**

பஞ்சாபில், காலிஸ்தான் தனிநாடு கோரும் போராட்டத்தை, சீக்கியர்கள் தீவிரமாக நடத்தியபோது, 'ரா' உளவு நிறுவனம், ஒரே நேரத்தில், இரண்டு ரகசிய முறியடிப்பு குழுக்களை உருவாக்கியது. ஒரு குழுவுக்குப் பெயர் - Counter Intelligence Team X(CIT-X); மற்றொரு குழுவுக்குப் பெயர் Counter Intelligence Team J(CIT-J) - முதல் குழு பாகிஸ்தானிலும் - இரண்டாவது குழு - காலிஸ்தான் போராட்டக் குழுவினரிடையேயும் ஊடுருவியது. காலிஸ்தான் போராட்டக் குழு ஒன்றை வழி நடத்திய ரபீந்தர்சிங் என்பவர். 'ரா' விரித்த வலையில் வீழ்ந்தார். பஞ்சாப் - பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் கடத்தல் தொழில் நடத்தி வந்தவர்களைப் பயன்படுத்தி, அவர்கள் வழியாக ஆயுதங்களையும், நிதியையும், பாகிஸ்தானுக்கும், பஞ்சாபுக்கும் 'ரா' கொண்டு வந்தது. பஞ்சாபில் சீக்கியர் போராட்டத்துக்கு உதவி செய்த பாகிஸ்தான் உளவு நிறுவனமான 'அய்.எஸ்.அய்.' யும், இதே வழியில்தான், ஆயுதத்தை - காலிஸ்தான் குழுவினருக்கு அனுப்பியது. காலிஸ்தான் கோரிக்கைக்கு போராடிய பல்வேறு குழுக்களே, 'ரா' உளவு நிறுவனத்தின் நடவடிக்கைகளால், தங்களுக்குள் மோதி, அழித்துக் கொண்டனர். இதில் 'ரா' நிறுவனத்துக்கு உதவிய ரபீந்தர்சிங் - 2004-ல், அமெரிக்காவுக்கு இடம் பெயர்ந்து விட்டார். "பஞ்சாபில் பாகிஸ்தான் உளவு நிறுவனத்தின் தலையீட்டால் நடந்த காலிஸ்தான் கிளர்ச்சியை ஒடுக்குவதில் 'ரா'வின் இந்த முயற்சிக்கு நல்ல வெற்றி கிடைத்தது" என்று, ராணுவ ஆய்வாளர் பி.இராமன் எழுதினார். இந்த நடவடிக்கைகளுக்கு 'ரா' செலவிட்ட தொகை மிக மிக அதிகம். அய்.கே. குஜரால், பிரதமராக வந்தபோது, "இந்த நடவடிக்கைகளைத் தொடர வேண்டாம் என்று நிறுத்தினார்.

**(5) மாலத்தீவு:**

1988 இல் மாலத் தீவில், ஈழ விடுதலைக் குழுக்களில் ஒன்றான 'புளோட்' அமைப்பைப் பயன்படுத்தி, ஆட்சிக் கவிழ்ப்புக்கு ஏற்பாடு செய்த 'ரா' பிறகு, முயற்சி தோல்வியுற்றவுடன் கப்பல் மற்றும் விமானப் படைகளை அனுப்பி, கலகக்காரர்களைக் கைது செய்து, அப்துல் க்யூம் அரசை மீண்டும் நிலை நிறுத்தியது. இந்த நடவடிக்கைக்கு 'ரா' சூட்டிய பெயர் 'ஆபரேஷன் கேக்டஸ்' (Operation Cactus) என்பதாகும்.

**(6) பர்மா:**


அடர்ந்த காட்டுப் பகுதிகளைக் கொண்ட மியான்மர் நாடு - எப்போதுமே, இந்திய உளவு நிறுவனத்துக்கு கவலை தரும் பகுதியாகும். வடகிழக்கு மாநிலங்களைச் சார்ந்த பல ஆயுதம் தாங்கிப் போராடும் குழுக்களுக்குப் பயிற்சித் தளமாக இப்பகுதி விளங்குகிறது. எனவே, இந்தப் பகுதியில் நடக்கும் அரசு, இந்தியாவுக்கு ஆதரவான அரசாகவே இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு 'ரா' செயல்பட்டு வருகிறது. இதற்காகவே - பர்மிய கலவரக்குழு ஒன்றை 'ரா' உருவாக்கியதாகக் கூறப்படுகிறது. 'கச்சின் சுதந்திரப் படை' என்பதும் 'ரா' உருவாக்கிய அமைப்பு என்று கூறப்படுகிறது. 'கே.அய்.ஏ.' எனும், இந்தக் குழுவுக்கு ஆயுதங்கள் தந்து உதவுவதோடு, இந்திய எல்லைக்குள், வைரம் போன்ற விலை உயர்ந்த கற்களைக் கடத்தி வர்த்தகம் நடத்தவும் 'ரா' உளவு நிறுவனம் அனுமதி தந்துள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த அமைப்பின் தலைவர் மாறன் பிராங்சீய்ன் (Maran Brangsein) என்பவர் 'ரா'வின் தலைவரை, இரண்டு முறை டெல்லியில் சந்தித்துப் பேசியுள்ளார். ●

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 9840940400

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 21th August 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 ஆகஸ்டு 27, 2009 புரட்சி 8 முழக்கம் 33 விலை: ரூ.2.50


### சிறை எங்களை சிதைக்கவில்லை; செதுக்கி இருக்கிறது

# இளைஞர்களே, சிறை செல்ல அஞ்சாதீர்!

## கோவை இராமகிருட்டிணன் அறைகூவல்!

ஆக. 18 அன்று நடந்த சென்னை பாராட்டுக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் கோவை இராம. கிருட்டிணன் ஆற்றிய உரை.

மே 2 ஆம் தேதி சேலத்தில் இருந்து மதியம் 2 மணிக்கு ஒரு தகவல் வருகின்றது. இராணுவ வாகனங்களில் ஆயுதம் செல்கின்றது. நாங்கள் தடுத்துப் பார்த்தோம்; நிறுத்தவில்லை. எப்படியாவது தடுக்க வேண்டும். அது ஈழத்துக்கு கொச்சி வழியாக செல்கின்றது என அறிகின்றோம் என்று சொன்னார்கள். எங்களுக்கு வேறு சிந்தனையே வரவில்லை. காரணம் இதற்கு முன்பு மார்ச் மாதம் ஈரோட்டிலிருந்து இரயில் வேகன்களில் 30க்கும் மேற்பட்ட இராணுவ டேங்குகள் கொச்சி வழியாக ஈழத்திற்கு சென்றிருக்கின்றது. செய்தித் தாள்களிலும் ('தினத்தந்தி'), தொலைக் காட்சிகளிலும் அந்த செய்திகள் வந்தன. அந்தச் செய்தியை பார்த்தவுடன் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கேட்டார்கள், இப்படி ஒரு படம் வந்திருக்கின்றதே பார்த்தீர்களா? அது எங்கு செல்கின்றது தெரியுமா? தடுக்க முடியுமா? என்று கேட்டார்கள். ஆனால் செய்திகள் எங்களுக்கு எட்டுகின்றபோது ஒரு நாள் முடிந்துவிட்டது. ஆனால், அவர்கள் அதற்குள் கடந்திருப்பார்கள். நாங்கள் ஈரோட்டுத் தோழர்களைக் கேட்டோம், 'இப்படி வாகனங்கள் சென்றதை உடனே எங்களுக்கு சொல்ல வேண்டாமா? சொல்லியிருந்தால் ஈரோட்டி லிருந்து கோவை வரை மக்களை திரட்டி, அந்த வாகனம் ஈழத்திற்கு செல்லாமல் தடுத்திருப்போமே, தெரியாமல் போய்விட்டதே' என்று வேதனைப் பட்டோம்.

அந்த வேதனையில் இருந்த எங்களுக்கு, மீண்டும் ஆயுதம் ஏற்றிக் கொண்டு 80 இராணுவ லாரிகள் செல்கின்றன என்ற செய்தி கிடைத்தவுடன், நாங்கள் என்ன பாடுபட்டிருப்போம்? எங்களுக்கு வேறு சிந்தனையே இல்லை. இராணுவ வாகனங்கள் எங்கே வருகின்றன என்று சேலம் தோழர்களை கேட்ட போது, இன்னும் 2 மணிநேரத்தில் கோவை வந்து விடும் என்று சொன்னார்கள். நாங்கள் உடனடியாக தோழர்களுக்கு தகவல் தந்தோம். ஏறக்குறைய 300 பேர் கூடினோம். எங்கள் கைகளில் எந்த ஆயுதமும் இல்லை. ஆனால் இருந்த ஆயுதமெல்லாம் தமிழ் ஈழத்திலே இந்த இராணுவம் கொன்று குவிக்கின்றதே அதைத் தடுக்க வேண்டுமே என்ற உணர்வு மட்டுமே எங்களிடமிருந்த ஆயுதம். உடனே தடுத்தோம். உணர்வுள்ள தோழர்கள் வாகனங்களின் கண்ணாடி களை உடைத்தார்கள். உள்ளே இராணுவ வீரர்கள் துப்பாக்கிகளோடு இருந்தார்கள்.

தோழர்களே ஒன்றை புரிந்துக் கொள்ளுங்கள். சிலர் அப்பாவித்தனமாக கேட்கின்றார்கள். இந்த இராணுவம் தானே இந்திய நாட்டை காக்கின்றது. அப்பேர்பட்டவர்களை தாக்கலாமா? என்று. ஆனால், அந்த இராணுவ வீரர்களை தாக்குவது எங்கள் நோக்கமல்ல, அவர்கள் குற்றவாளிகள் அல்ல. இந்த ஆயுதங்கள் எங்கே போகிறது என்பதுகூட அவர்களுக்கே தெரிந்திருக்க வேண்டிய அவசிய மில்லை. ஒவ்வொரு பகுதிக்கும் வந்த பின்னால்தான், அடுத்து எங்கே செல்ல வேண்டும் என்பதையே அவர்களிடம் சொல்லுவார்கள். இது இராணுவ கட்டுப்பாடு.




அந்த இராணுவ வீரன் நமது இனத்தைச் சார்ந்தவன். அவர்கள் எந்த மாநிலத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அத்தனை பேரும் சூத்திரர்கள். ஒருவன்கூட பூணூல் போட்டவன் கிடையாது. இராணுவமாக இருந்தாலும், காவல் துறையாக இருந்தாலும் ஆட்கள் தேர்வு செய்கின்ற போது மைதானத்தில் உள்ளவர்களை படம் பிடித்துப் போடுவார்கள் பாருங்கள், மேல் சட்டை யில்லாமல் இருப்பார்கள். ஒருவர் உடம்பிலும் பூணூல் இருக்காது. சிப்பாய்களாக வருபவர்கள் இராணுவமாக இருந்தாலும், காவல் துறையாக இருந்தாலும் அவர்கள் அத்தனை பேரும் சூத்திரர் கள். நம்மவர்கள். ஆகவே எங்களுடைய நோக்கம் அந்த சிப்பாய்களை அடிப்பதல்ல, தடுப்பதல்ல. ஆனால் அந்த ஆயுதங்கள் ஈழத்தில் எம்மக்களை கொன்று குவிக்கப் பயன்படுமே; எனவே ஆயுதங் களைத் தடுக்க வேண்டும் என்பதே எங்கள் உணர்வு.


(4 ஆம் பக்கம்)


## சிறை மீண்ட போராளிகளுக்கு எழுச்சி வரவேற்பு

கோவை நீலாம்பூர் நெடுஞ்சாலையில் இலங்கைக்கு ஆயுதங்களை ஏற்றிச் செல்வதாக வந்த தகவல்களைத் தொடர்ந்து கடந்த மே 2 ஆம் தேதி வாகனங்களை மறித்த தோழர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு கைது செய்யப்பட்டனர். பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன், பெரம்பலூர் இலட்சுமணன், சூலூர் வீரமணி ஆகிய தோழர்கள் மீதும் ம.தி.மு.க.வைச் சார்ந்த தோழர் சந்திரசேகர், வேலுச்சாமி ஆகியோர் மீதும், தேசிய பாதுகாப்புச் சட்டம் போடப்பட்டது. 57 தோழர்கள் வேறு வழக்குகளில் கைது செய்யப்பட்டனர். கோவை இராம கிருட்டிணன் மீதான தேசிய பாதுகாப்பு சட்டத்தை சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்தது. ஏனைய தோழர்கள் மீதான பாதுகாப்பு சட்டங்கள் மத்திய உள்துறை அமைச்சகமே ரத்து செய்துவிட்டது. சுமார் 3 மாத சிறைவாசத்துக்குப் பிறகு விடுதலையான தோழர்களுக்கு வரவேற்பு பொதுக் கூட்டம் சென்னை புரசைவாக்கம் தாணா தெருவில் 18.8.2009 அன்று மாலை 6 மணியளவில் எழுச்சியுடன் நடைபெற்றது. காஞ்சி மக்கள் மன்றத்தின் பறை இசை முழக்கங்களோடு போராளிகள் ஊர்வலமாக பொதுக் கூட்ட மேடைக்கு அழைத்து வரப்பட்டனர்.

எ. கேசவன் தலைமை தாங்கினார். மு. வேலவன் வரவேற்புரையாற்றினார். சு. வெங்கடேசன், சி. பாஸ்கர், நா. டார்வின் தாசன் முன்னிலை வகித்தனர். வழக்கறிஞர் அமர்நாத், வை. இளங்கோவன், அன்பு தனசேகரன், பெரம்பலூர் இலட்சுமணன், வழக்கறிஞர் செ. துரைசாமி, பொதுச்செயலாளர்கள் கோவை இராம கிருட்டிணன், விடுதலை இராசேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ ஆகியோர் உரையாற்றினர்.

சிறை மீண்ட போராளிகளுக்கும், வழக்கில் வாதாடிய வழக்கறிஞர் செ. துரைசாமி, வை. இளங்கோ, சு. குமாரதேவன், அமர்நாத் ஆகியோருக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. நாராயணி பீடத்தைக் கண்டித்து சுவரொட்டி ஒட்டியதாக கைது செய்யப்பட்டு, சிறையிலிருந்து விடுதலையான வேலூர் மாவட்டக் கழகத் தலைவர் திலீபன், கழகத் தோழர் குமார் மற்றும் ராணுவ வாகன மறியலில் கைதாகி சிறையிலிருந்த கழகத் தோழர் பொள்ளாச்சி பிரகாஷ் ஆகியோருக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. கழகத்தோழர் ஓவியர் தஞ்சைத் தமிழன், தமிழ் ஈழத் தலைவர் பிரபாகரன் படத்தை வரைந்து வை.கோவுக்கு அன்பளிப்பாக வழங்கினார். சிறைச் சென்ற போராளிகளுக்கு வைகோ ம.தி.மு.க. சார்பில் ஆடைகளைப் போர்த்தினார்.

முன்னதாக தேனிசை செல்லப்பா குழுவினரின் எழுச்சி இசை நிகழ்ச்சி நடைபெற்றது. கழகத் தோழர் ந. தினகரன் நன்றி கூறினார்.

தலையங்கம்

# ஜின்னா – பட்டேல் – இந்தியா

வல்லபாய் பட்டேலை விமர்சிப்பது கட்சியின் கொள்கைக்கு எதிரானது என்று கூறி மூத்த தலைவர் ஜஸ்வந்த் சிங்கை கட்சியிலிருந்து நீக்கிவிட்டது பாரதிய ஜனதா. காந்தியை இழிவுபடுத்திவிட்டு, பா.ஜ.க.வில் இருக்க முடியும். ஆனால், பட்டேலை குறை கூற முடியாது; அதுதான் பா.ஜ.க.

1947 இல் பிரிந்து போன பாகிஸ்தானுக்கு காரணமாக இருந்தது ஜின்னாவா? நேருவா? பட்டேலா? என்று பா.ஜ.க. பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருக்கிறது. குற்றவாளி ஜின்னா அல்ல என்கிறார் ஜஸ்வந்த் சிங். நேருவும், பட்டேலும் தான் குற்றவாளி என்று கூறி, நூல் ஒன்றையும் எழுதினார். அதற்காகவே கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். ஜின்னாவை அவர் புகழ்வது பற்றி கவலை இல்லை. ஆனால் பட்டேலை குறைகூறக் கூடாது என்கிறது, பா.ஜ.க. இது ஜின்னா மீது பா.ஜ.க. காட்டும் மரியாதை என்று எவரும் தவறாகக் கருதிவிடக் கூடாது. ஏற்கனவே இப்படி ஜின்னாவைப் புகழ்ந்து பேசி அதன் காரணமாக ஆர்.எஸ்.எஸ். கண்டனத்துக்கு உள்ளாகி, கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலகி, மீண்டும் 'பாவமன்னிப்பு' பெற்றவர் அத்வானி. எனவே, அத்வானியைக் காப்பாற்றுவதற்காக ஜின்னாவைப் புகழ்வதையும் பா.ஜ.க. அங்கீகரித்துள்ளது என்பதே உண்மை!

இது தொடர்பாக ஜஸ்வந்த்சிங் எழுதியுள்ள நூலை காங்கிரஸ் கட்சியும் எதிர்த்துள்ளது. நரேந்திர மோடி இந்த நூலை குஜராத்தில் தடை செய்து விட்டார். இந்தியா முழுதும் தடை செய்ய வேண்டும் என்கிறார், வெங்கய்யா நாயுடு!

உண்மையில் பாகிஸ்தான் பிரிவினைக்கு யார் காரணம் என்று கேட்டால், இந்தியாவின் அதிகாரத்தை தங்கள் கட்டுப்பாட்டில் நிறுத்திக் கொண்டு விட்ட பார்ப்பன – பனியாக்கள் தான். இவர்களின் இந்து – பார்ப்பனப் பிடியின் கீழ் சிக்கிக் கொண்டு இரண்டாம் தர குடிமக்களாகிட முஸ்லீம்கள் தயாராக இல்லை என்பதே பாகிஸ்தான் பிரிவினைக்கு காரணம் என்பதை உறுதியாக சொல்ல முடியும்.

பல்வேறு மொழி கலாச்சாரங்களைக் கொண்ட பல்வேறு தேசங்களை உள்ளடக்கிய உபகண்டமே இந்தியா. மன்னராட்சிக்கு உட்பட்ட சுமார் 600 'சமஸ்தானங்களும்' அதில் இருந்தன. நேருவும், பட்டேலும் இந்த கலாச்சார வேறுபாடுகளை அங்கீகரிக்காமல் 'ஒரே இந்தியா' என்ற கற்பனையில் மூழ்கிக் கிடந்தனர்.

பிரிட்டிஷ் ஆட்சியில் முஸ்லீம்களுக்கு உரிய அரசியல் உரிமைகள் (தனித் தொகுதிகள்) வழங்கப்பட்டிருந்தன. அரசியல் நிர்ணய சபையில் நடந்த விவாதங்களில் பட்டேலும், ராஜகோபாலாச்சாரியும் சட்ட ரீதியாக, இந்த உரிமைகள் அவர்களுக்கு கிடைக்கப் பெறாமல், நீர்த்துப் போகச் செய்துவிட்டனர். 1946-47 இல் இந்தியாவின் இடைக்கால அமைச்சரவையில் காங்கிரசும், முஸ்லீம் லீக்கும் இடம் பெற்றிருந்தன. அப்போது, ஒவ்வொரு பிரச்சினையிலும் ஜின்னா, காங்கிரசாரின் முரட்டுத்தனத்தோடு போராட வேண்டியிருந்தது. அந்த அமைச்சரவையில் முஸ்லீம் லீக்கைச் சார்ந்த லியாகத் அலி நிதியமைச்சராக இருந்தார். அவரது நேர்மையான கண்டிப்பான நிர்வாகம் பட்டேலுக்கு கசப்பை உருவாக்கியது.

லியாகத் சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையில் பெரும் தொழிலதிபர்களுக்கு கடுமையாக வரிகளை விதித்தபோது காங்கிரசுக்குள்ளேயே இருந்த சோஷலிஸ்டுகள் வரவேற்றாலும், பனியாக்களின் பாதுகாவலராக இருந்த பட்டேல் ஆத்திரமடைந்தார். பெரும் தொழிலதிபர்களில் முஸ்லீம்கள், பார்சிகள் இருந்தாலும்கூட, பிர்லாக்களுக்கு எதிராகவே இந்த வரி விதிக்கப்பட்டதாகவும் அவர்கள் எல்லாம், காங்கிரசுக்கு நன்கொடை வழங்கக்கூடியவர்கள் என்றும், பட்டேல் வகுப்புச் சாயம் பூசினார்.

இந்தியாவின் ஒவ்வொரு பிரதேசத்துக்கும் முழுமையான சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என்பதே ஜின்னாவின் கருத்து. நெகிழ்ச்சிப் போக்கோடு மாநிலங்கள் செயல்படவேண்டுமே தவிர, "வலிமை மிக்க ஒற்றை இந்தியாவாக" இறுகி விடக் கூடாது என்று தொடர்ந்து ஜின்னா முன்வைத்த நியாயங்களை நேருவும், பட்டேலும் ஏற்கவில்லை. 'இந்து மகாசபை', முஸ்லீம்கள் தனித் தேசத்தவர் என்றே தீர்மானம் போட்டது; அதன் பின்னரே ஜின்னா, தனிநாடு கேட்கத் தொடங்கினார். ஆக, பார்ப்பன-பனியா அதிகார மய்யத்தின் இந்த அதிகாரக் குவிப்புக்குள் அடங்கிப் போக மறுத்ததின் விளைவுதான் பாகிஸ்தானின் உருவாக்கம்.

இந்து மதம் ஒன்று தான், பிற மதங்களையும் வெறுக்காத சகிப்புத் தன்மை கொண்டது என்று ஆர்.எஸ்.எஸ். சிந்தனையாளர் குருமூர்த்தி, அண்மையில் ஒரு ஆங்கில நாளேட்டில் எழுதியிருக்கிறார். அது உண்மையானால், இந்துத்துவ கட்சியான பா.ஜ.க.வின் இந்த நடவடிக்கைகள் அதன் சகிப்புத்தன்மையையா பிரதிபலிக்கிறது? என்று கேட்க விரும்புகிறோம்.

இதில் காங்கிரசும், பா.ஜ.க.வும் இப்போது ஒரே குரலில் பேசுகின்றன. பட்டேலையும் நேருவையும் உயர்த்திப் பிடிப்பதில் இருவரும் கரம் கோர்த்து நிற்கிறார்கள். மதச்சார்பின்மை – இந்துத்துவம் என்ற முகமூடிகள் இந்திய தேசியம் என்று வரும்போது கழன்றுவிடுகின்றனவே!

இவர்களால் இனி இந்தியாவையும் ஒட்ட வைக்க முடியாது; இந்திய தேசியத்தை உயர்த்திப் பிடிக்கும் கட்சிகளையும் ஒட்டி வைக்க முடியாது!

இதை கல்லில் செதுக்கி வைத்துக்கொள்ளட்டும்!

# பன்றி காய்ச்சலும் – பார்ப்பனர்களும்

பன்றியை இந்து புராணங்கள் - மகாவிஷ்ணுவின் அவதாரம் என்று புகழ்கின்றன. ஆனால், ஒரு சக 'இந்து'வை 'பன்றி' என கூறி விட்டால் அதற்காக எந்த இந்தும் மகாவிஷ்ணுவுக்கு ஒப்பிட்டதாக பெருமைப்படுவது இல்லை. திருப்பி அடித்து விடுவான். பன்றி அவதாரம் எடுத்த மகாவிஷ்ணுவுக்கு பன்றி விரும்பி சாப்பிடும் "உணவை"யே படைக்கலாமா என்று கேட்டால், உடனே மதத்தைப் புண்படுத்துகிறார்கள் என்று ஓலமிடத் தொடங்கி விடுவார்கள்.

இப்போது பத்திரிகைகளில் கதாநாயகன் ஒவ்வொரு நாளும் மகாவிஷ்ணு தான்! உலகம் முழுவதும் 'மகாவிஷ்ணு'வைக் கண்டு நடுங்கிக் கொண்டிருக்கிறது. மகாவிஷ்ணு, காய்ச்சல் அவதாரம் எடுத்து மக்களின் உயிரோடு திருவிளையாடல் நடத்து கிறான். அதற்காக மக்கள் பகவான் வந்து விட்டார் என்று கூறி மகிழ்ச்சிக் கூத்தாட தயாராக இல்லை. 'மகாவிஷ்ணு' காய்ச்சலை அதாவது, பன்றி காய்ச்சலை விரட்டி அடிப்பதற்கு மருந்துகளைக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறார்கள். மகாவிஷ்ணு (பன்றி) காய்ச்சல் - தொற்று நோய். இந்தத் தொற்று நோய்களையெல்லாம் தடுப்பதற்கு நமது முன்னோர்களே பாதுகாப்பான ஏற்பாடுகளை செய்திருந்ததாகவும், அதுதான் 'நமஸ்தே' என்று கும்பிடு போடும் பழக்கம் என்றும் ஒரு பார்ப்பனர் 'இந்து' ஏட்டில் (ஆக.23) ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். "மவுண்ட் ரோடு மகாவிஷ்ணுவான" இந்துவும் அதை வெளியிட்டிருக்கிறது. ஒருவருக்கொருவர் கை குலுக்காமல், கும்பிடு போடும் பார்ப்பன கலாச்சாரம் 'தீண்டாமை'யின் மறுவடிவம்தான். நாட்டில் தொற்று நோய்கள் பரவாதிருக்க 'தீண்டாமை'யைப் பின்பற்ற வேண்டும் என்று கூறுவதன் மூலம் 'தீண்டாமை க்ஷேமகரமானது' என்று சங்கராச்சாரி கூறுவதை நியாயப்படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். எப்போதோ வந்து போகும் தொற்று நோய்களுக்காக சமூகம் ஒருவரையொருவர் 'தீண்டாமல்' வாழ்வதே சிறந்த தத்துவம் என்று கூறி, இந்து பார்ப்பனியத்தை நியாயப்படுத்தும் எல்லைக்குப் போய் விடுகிறார்கள்.

எங்கேயாவது விமான விபத்துகள் நடந்தால் கூட அதற்காகத்தான் 'கடல் தாண்டக் கூடாது' என்று, 'இந்து தர்மம்' ஏற்கனவே கூறியிருக்கிறது என்று இவர்கள் கூறினாலும், வியப்பதற்கு இல்லை. தகாத உறவுகளால் 'எய்ட்ஸ்' பரவுகிறது என்பதால்தான் நமது முனிவர்கள் இல்லறத்தையே வெறுத்தார்கள் என்று கூறி, இனி, திருமணமில்லாத வாழ்க்கையே சிறந்தது என்று இவர்கள் கூறுவார்களா, என்று எவரும் கேட்டுவிடக் கூடாது. ஒருவருக்கொருவர் கைகுலுக்கிக் கொள்ளாமல் தூர நின்று, 'கும்பிடு போட்ட' காலங்களில் பிளேக் நோயும் காலராவும் பரவி, ஊர் ஊராக பிணங்கள் விழுந்தனவே. அதற்கு என்ன காரணமாம்! இத்தகைய அபத்தங்களை கட்டுரையாக வெளியிடும் மவுண்ட் ரோடு ஆங்கில "பன்றி"கள் (அதாவது மகாவிஷ்ணுவின் மாற்றுப் பெயர் என்று அறிக!) 'தீண்டாமை'யை நியாயப்படுத்துகின்றனவா? இதற்காக 'தீண்டாமை' தடுப்புச் சட்டத்தின் கீழ் எவராவது இவர்கள் மீது வழக்கு தொடர்ந்தால் அதற்கு நாம் பொறுப்பு அல்ல. தன்மானமுள்ளவர்கள் நாட்டில் இல்லாமலா போய் விடுவார்கள்?

– கோடங்குடி மாரிமுத்து

# ஈழமக்கள் விரும்பும் அரசியல் தீர்வைக் கோருவோம்

(ஆக.20 இல் சென்னையில் இலங்கைத் தமிழகர் பாதுகாப்பு கூட்டமைப்பு நடத்திய கூட்டத்தில் முன் வைத்த உலகத் தமிழர் பிரகடனம்)

1. ஈழத் தமிழ் மக்களின் மரபு வழித் தாயகத்தில் அவர்களுக்கு முழுமையான மனித, ஜனநாயக உரிமைகள் வழங்கிடவும், அதற்கேற்ற அரசியல் அமைப்புக்கு உத்தரவாதம் தரக்கூடிய முறையில் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதற்காக உலக மக்களின், அரசுகளின் ஆதரவை திரட்டிடவும், ஈழத் தமிழ் மக்கள் ஒப்புக் கொள்ளக் கூடியத் தீர்வு ஒன்றே அவர்களின் பிரச்சினையைத் தீர்க்கும் ஒரே வழி என்பதிலும் நாங்கள் அசைக்க முடியாத நம்பிக்கைக் கொண்டிருக்கிறோம்.
2. தங்கள் தாயகத்திலும் உலக நாடுகளிலும் புலம் பெயர்ந்திருக்கக்கூடிய ஈழத் தமிழர்கள் அனைவரும் அவரவர்கள் ஊர்களிலும், வீடுகளிலும், மீண்டும் குடியேறவும் அமைதியான, இயல்பான, சுதந்திரமான வாழ்க்கையை நடத்தவும் துணை நிற்க நாங்கள் உறுதி பூணுகிறோம்.
3. தமிழர் தாயக மண்ணில் அத்துமீறி உருவாக்கப்பட்ட சிங்கள குடியேற்றங்களையும் சிங்கள இராணுவ முகாம்களையும் மற்றும் இராணுவ ரீதியான அமைப்புகளையும் வெளியேற்ற வேண்டுமென அய்.நா.வை வற்புறுத்த நாங்கள் உறுதி பூணுகிறோம்.
4. இலங்கையில் மனித நேய உணர்வை மீறித் தமிழர்களுக்கு எதிரான கொடுமைகளையும், கொலைகளையும் செய்த சிங்கள இராணுவ அதிகாரிகளும் அவர்களை ஏவிவிட்ட சிங்கள அரசியல்வாதிகளும் சர்வதேச நீதிமன்றத்தில் போர்க் குற்றவாளிகளாக நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்படுவதற்கு உரிய நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ள நாங்கள் உறுதி பூணுகிறோம்.
5. உலகிலுள்ள மற்ற தேசிய இன மக்களைப் போல முழுமையான இறைமை உள்ள மக்களாக வாழும் உரிமையும், தங்களின் எதிர்காலத்தைத் தாங்களே முடிவு செய்து கொள்ளும் உரிமையும் ஈழத் தமிழர்களுக்கு இயற்கையாக உண்டு என்பதையும், அந்த வாழ்வுரிமையை அவர்கள் நிலை நிறுத்திக் கொள்ள அவர்களுக்குத் தோள் கொடுத்துத் துணை நிற்க உலகத் தமிழர்களாகிய நாங்கள் உறுதி பூணுகிறோம்.
6. அளப்பரிய தியாகங்களைச் செய்து ஈழத் தமிழ் மக்களும், அவர்களுக்காக இறுதி வரை போராடிய போராளிகளும் வீறு கொண்டு நடத்திய விடுதலைப் போராட்டம் பல நாடுகளின் கூட்டுச் சதியின் விளைவாகப் பின்னடைவைச் சந்திக்க நேர்ந்திருப்பது தற்காலிகமானது. மீண்டும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுவதற்கும், வெற்றி பெறுவதற்கும், அந்த மக்கள் விரும்பி ஏற்றுக் கொள்ளும் அரசியல் தீர்வு உருவாவதற்கும் நாங்கள் முழுமையாக உதவுவோம். அதற்காக எங்களை முற்றிலுமாக ஒப்டைத்துக் கொண்டு, எத்தகைய தியாகத்திற்கும் தயாராக இருப்போம் என உலகத் தமிழர்களாகிய நாங்கள் உறுதி பூணுகிறோம்.

உலகத் தமிழர்களாகிய நாம் ஒன்றுபட்டு ஈழத தமிழர்களுக்காகக் குரல் கொடுக்கும் வேளையில் உலகெங்கிலும் உள்ள சனநாயக சக்திகள், சமத்துவ சிந்தனையாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் அனைவரும் நம்முடன் இணைந்து குரல் கொடுக்க முன்வருமாறும், உலகத் தமிழர்கள் அனைவரும் அவர்கள் வாழும் நாடுகளில் உள்ள மக்களையும், அரசுகளையும் ஈழத் தமிழர் சிக்கலுக்கு ஆதரவாகத் திருப்புவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளுமாறும் அனைவரையும் வேண்டிக் கொள்வதற்காக தமிழர்கள் பெருந்திரளாகக் கூடி இப்பிரகடனத்தை வெளியிட்டுள்ளோம்.

தமிழர் வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில் மகத்தான ஒரு கடமையை மேற்கொள்வதற்காகவே நாம் கூடி உலகறிய செய்துள்ள இப்பிரகடனம், ஈழத் தமிழர்களுக்கு வாழ்வளிக்கப் போகும் பிரகடனம் மட்டுமல்ல, உலகத் தமிழர் அனைவருக்கும் விடிவைக் கொண்டு வருவதற்கான வழிகாட்டும் பிரகடனமுமாகும் என்பதை உணர்ந்து தமிழர்கள் கட்சி, சாதி, மத வேறுபாடுகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு ஒற்றுமையுடன் செயல்பட முன் வருமாறு அனைவரையும் அன்புரிமையுடன் வேண்டிக் கொள்கிறோம்.

## அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகளை இழுத்து மூடிவிட்டது தி.மு.க ஆட்சி

# 'பெரியார் நெஞ்சில் தைத்த முள்' அகற்றப்படவில்லை

*அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகும் - புரட்சி - தமிழகத்தில் நடந்து முடிந்து விட்டதாக திராவிடர் கழகம் அறிவித்து, பெரியார் திடலிலுள்ள பெரியார் நினைவிடத்தில் கலைஞர் கருணாநிதியை மகிழ்விக்க நினைவுக் கல்வெட்டையும் பதித்து விட்டது. உண்மையில், தமிழக அரசின் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியில் ஓராண்டு அர்ச்சகர் பயிற்சி முடித்த எந்த ஒரு பார்ப்பனரல்லாதாரும் எந்த ஒரு கோயிலிலும் அர்ச்சகர் ஆக முடியாத நிலையில் புறக்கணிக்கப் பட்டுள்ளனர். தமிழக அரசும் இது பற்றி ஒரு நடவடிக்கையும் எடுத்திடவில்லை. இது பற்றிய கட்டுரை ஒன்றை 'டெகல்கா' வார ஏட்டில் (ஆக.22) அதன் செய்தியாளர் சஞ்சனா எழுதியுள்ளார்.*

2006 ஆம் ஆண்டு மே மாதம் தமிழக அரசு தமிழகத்தில் உரிய பயிற்சி பெற்ற அர்ச்சகர்கள் சாதி, சம்பிரதாய வேறுபாடுகள் இன்றி அறநிலையத் துறையின் கீழ் உள்ள 36000 கோயில்களிலும் நியமிக்கப்படுவார்கள் என்ற அறிவிப்பை வெளி யிட்டது. மதுரை மீனாட்சி, பழனி முருகன், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி, ஸ்ரீரங்கம் ரெங்கநாதன் உட்பட அனைத்து கோயில்களையும் உள்ளடக்கியே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டு மே மாதம் தமிழகத்தின் 6 பகுதிகளில் அர்ச்சகர் பயிற்சி நிறுவனங்களை தமிழக அரசு நிறுவியது. ஓராண்டுக்கான சான்றிதழ் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்பட்டன. இந்து அறநிலையத் துறையின் மேற்பார்வையின் கீழ், சைவ வைணவ கோயில் நிர்வாகங்களோடு இந்த பயிற்சி மய்யங்கள் இணைக்கப்பட்டன. பயிற்சி பெறும் மாணவர் களுக்கு மாதம் ரூ.500 உதவித் தொகையாக வழங்கப் படுவதோடு, பயிற்சி முடித்தவுடன் அரசு கட்டுப் பாட்டில் உள்ள கோயில்களில் அர்ச்சகர்களாக நியமிக்கப்படுவார்கள் என்று அரசு விளம்பரம் செய்தது. 240 பேர் சேர்க்கப்பட்டனர். இதில் 207 பேர் ஓராண்டு பயிற்சியில் தேர்ச்சிப் பெற்றனர். இதில் 3 பேர் மட்டுமே பார்ப்பனர்கள். ஏனையோர், தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள்.

இதற்கிடையே - மதுரை மீனாட்சி கோயிலைச் சார்ந்த பார்ப்பனர்கள் ஆதிசிவ - சிவாச்சாரியார் சங்கத்தின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசின் ஆணையை எதிர்த்து வழக்கு தொடர்ந்து ஆணைக்கு தடை வாங்கிவிட்டனர். (தடையை நீக்கும் சட்ட நடவடிக்கைகள் எதையும் தமிழக அரசு மேற்கொள்ளாமல், அர்ச்சகர் பயிற்சி நிறுவனங் களை தொடங்கியது. தமிழக முதல்வர் மிகவும் சாதுர்யமாக செயல்படுவதாக தி.க. தலைவர் கி.வீரமணி பாராட்டினார்) உச்சநீதிமன்றத்தில் அரசு ஆணைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால், அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ்களை வழங்காமல், தி.மு.க. ஆட்சி நிறுத்தி வைத்துள்ளது.

பயிற்சி முடித்த மாணவர்கள் மூன்று ஆண்டு களாக வேலையின்றி உள்ளனர். பயிற்சியை முடித்த அருண்குமார் என்ற பார்ப்பன மாணவருக்கு மட்டும் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் பரம்பரை அர்ச்சகர் குடும்பத்தைச் சார்ந்தவர் என்பதால் அர்ச்சகர் வேலையை வழங்க யார் பார்ப்பனர் சம்மதித்து விட்டனர். அவருடன் பயிற்சி பெற்ற 36 பேரில் இவர் ஒருவருக்கு மட்டுமே (பார்ப்பனர் என்பதால்) வேலை கிடைத்துள்ளது. இப்போது அவர் மாதம் ரூ.3000 சம்பளம் பெறுகிறார். இது தவிர பக்தர்கள் தரும் காணிக்கைகள் கிடைக்கின்றன. உச்சநீதிமன்றத்தின் தடையால் தன்னுடன் படித்த பலர் வேறு வேலைகளைத் தேடி வருவதாக இவர் கூறியுள்ளார்.

வேலூர் மாவட்டம் திருமானி எனும் கிராமத்தைச் சேர்ந்த பிரவின் குமார், அர்ச்சகர் பயிற்சியை முடித்து, சான்றிதழ் கிடைக்காமல் உள்ளார். மூப்பன் என்ற பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த இவர், ஓராண்டை பயிற்சியில் வீணடித்து விட்டு, இப்போது பட்டப்படிப்பில் சேர்ந்து படித்து வருகிறார். 'மதச் சடங்குகளை செய்வதற்கு எனது மகனை எவரும் அங்கீகரிப்ப தில்லை' என்று அவரது தாயார் கவலையுடன் கூறினார்.

அதே வேலூர் மாவட்டத்தைச் சார்ந்த அர்ச்சகர் பயிற்சி பெற்ற சரவணன் சுப்ரமணியனுக்கு 24 வயது. 'கருணீகர்' எனும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர். ஏழைக் குடும்பம். பயிற்சி முடித்து, சான்றிதழ் ஏதும் தரப்படாத நிலையில் கிராம கோயில் ஒன்றில் பூசாரி வேலைக்குப் போனார். தனது சாதி அடையாளம் தெரிந்த பிறகு, வேலையிலிருந்து வெளியேற்றப்பட்டதாக அவர் கூறுகிறார். பயிற்சி பெற்ற 207 மாணவர்களும் அர்ச்சகர் பதவி பெற முடியாமல், சமூக புறக்கணிப்புக்கு உள்ளாகியுள்ள னர். ஒரு பார்ப்பனருக்கு மட்டுமே மதுரை மீனாட்சி கோயில் கதவு திறந்துள்ளது. தமிழக அரசு 6 அர்ச்சகர் பயிற்சி மய்யங்களையும் இழுத்து மூடி விட்டது என்று 'டெகல்கா'வின் கட்டுரை கூறுகிறது.

பெரியார் நெஞ்சில் தைத்த முள் - இன்னும் எடுக்கப்படவே இல்லை. அண்ணா நூற்றாண்டில் தமிழர் சமுதாயத்தின் மீதான சூத்திர இழிவு தொடருகிறது. ஆனால், பெரியார் ஆட்சி நடப்பதாக கி.வீரமணி தம்பட்டம் அடிக்கிறார். தி.மு.க. ஆட்சி உச்சநீதிமன்றத்தின் தடையை நீக்குவதற்கான நடவடிக்கைகள் எதையும் எடுக்கவில்லை.

வழக்கு விசாரணைக்கு எடுத்து, முடிக்கப்பட இன்னும் எத்தனை ஆண்டுகாலம் ஆகுமோ, தெரியாது!

# தமிழர்களை அழிக்க இந்தியாவின் ரகசிய ராணுவ உதவிகள் அம்பலம்

2006 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரை சிங்கள - இந்திய கப்பல் படையினருக்கிடையே இருந்த ஒருங்கிணைந்த செயல்பாடுகள்தான் விடுதலைப் புலிகளின் கப்பல் படையான கரும் புலிகளின் முதுகெலும்பையே முறித்துப் போட்டது என்ற உண்மையை அண்மையில் வெளிவந்துள்ள ஆங்கில நூல் ஒன்று அம்பலப்படுத்தியிருக்கிறது.

இந்திய கப்பல் படையின் உளவுப் பிரிவு இலங்கை கப்பல் படைக்கு பல முக்கிய தகவல்களைத்தந்தது, இந்த நூலை எழுதியுள்ள நிதின்கோகலே என்.டி.டி.வி. தொலைக்காட்சியில் செய்திப் பிரிவில் செய்தியாளர். ஈழத்தில் நடந்த கடைசி யுத்தத்தின் போது அப்பகுதியிலிருந்து செய்திகளை சேகரித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. பாதுகாப்புக்கான உதவிகள் மட்டுமே இந்தியா செய்தது என்பது பொய் என்றும் இந்த நூல் அம்பலப்படுத்தியுள்ளது. விடு தலைப் புலிகளுக்கு எதிரான போரில் இலங்கைக்கு இந்தியா எப்படியெல்லாம் மறைமுகமாக உதவியது என்பதை அம்பலப்படுத்தும் நூல் ஒன்று வெளி யிடப்பட்டுள்ளது.

'ஸ்ரீலங்கா போரிலிருந்து அமைதிக்கு' ('ஸ்ரீலங்கா-ப்ரம் வார் டு பீஸ்) என்ற புத்தகம் ஒன்றை நிதின் கோகலே என்பவர் எழுதியுள்ளார். அதில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில், இலங்கைக்கு இந்தியா எப்படியெல்லாம் ரகசியமாக உதவியது என்பது விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இந்தியக் கடற்படை அளித்த முக்கியமான புலனாய்வு தகவல் காரணமாகவே புலிகளின் ஆயுதக் கப்பல்கள் நிற்கும் இடம் பற்றிய தகவல்கள் இலங்கைக் கடற்படைக்குத் தெரிய வந்தது என்றும், பன்னிரண்டுக்கும் அதிகமான ஆயுதக் கப்பல்கள் அழிக்கப்பட்டதாகவும் நிதின் அதில் கூறியுள்ளார்.


இலங்கைக்கு ஆயுத உதவி உள்ளிட்ட எந்த ஒரு இராணுவ உதவிகளையும் அளிக்கவில்லை என்று மத்தியில் ஆட்சியில் இருந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு மறுத்து வந்த போதிலும், 2006 ஆம் ஆண்டின் துவக்கத்திலேயே எம்.ஐ.-17 ரகத்தைச் சேர்ந்த 5 ஹெலிகாப்டர்களை இலங்கை விமானப் படைக்கு இந்தியா அளித்தது. ஆனால், அந்த ஹெலிகாப்டர்களுக்கு இலங்கை விமானப்படை வண்ணத்தைப் பூசிப் பயன்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையை மட்டும் இலங்கை விமானப்படைக்கு இந்தியா விதித்திருந்ததாகவும், அப்போது அரசுக்கு ஆதரவளித்த முக்கியக் கட்சிகளில் ஒன்றான தி.மு.க.வுக்குச் சங்கடத்தை ஏற்படுத்திவிடக் கூடாது என்பதற்காகவே இந்த நிபந்தனை விதிக்கப்பட்ட தாகவும் அந்தப் புத்தகத்தில் கோகலே எழுதியுள்ளார். அதிலும் இலங்கை இராணுவத்திற்கு இந்தியக் கடற்படை அளித்த உதவி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. குறிப்பாக 2002 ஆம் ஆண்டில் இலங்கைக் கடற்படைக்கு, இந்தியக் கடலோரக் காவல்படை 'சுகன்யா' என்ற ஆழமற்ற கடலில் பயணிக்கக் கூடிய ரோந்துக் கப்பல்களை வழங்கியது. இவை இலங்கை விமானப்படைக்கு மிகுந்த உதவி யாக இருந்துள்ளன. இலங்கை இராணுவத்தினரின் ஊடுருவும் படையினர் விடுதலைப் புலிகளால் சுற்றி வளைக்கப்பட்ட போது, அவர்களை இந்தக் கப்பல்களைப் பயன்படுத்தித்தான் இலங்கை விமானப் படையினர் காப்பாற்றியதாகவும் அந்தப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது.

மேலும் விடுதலைப்புலிகளின் ஆதிக்கம் அதிக முள்ள பகுதிகளில் நடைபெற்ற சண்டையின்போது காயமடைந்து சிக்கித் தவித்த இலங்கைப் படையினர், இதில் ஏற்றப்பட்டுத்தான் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் அந்த நூலில் தெரிவித்துள்ளார். அத்துடன் விடுதலைப் புலிகளின் ஆயுதங்களை சேமித்து வைக்கும் கப்பல்களின் இடத்தைக் கண்டுபிடித்து, அது குறித்த தகவலை இலங்கைக் கடற்படைக்கு இந்தியக் கடற்படைதான் தெரிவித்ததாகவும், அவ்வாறு கிடைத்த தகவல் காரணமாகவே புலிகளின் 10 மிதக்கும் ஆயுதக் கப்பல்கள் அழிக்க முடிந்ததாகவும் இலங்கைக் கடற்படைத் தலைமைத் தளபதி அட்மிரல் வாசந்தா கரன்னகோட தம்மிடம் தெரிவித்ததாகவும் அந்தப் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார் கோகலே.

மேலும் கடந்த 2002 முதல் 2009 ஆம் ஆண்டு வரை இந்திய மற்றும் இலங்கைக் கடற்படையினரிடையே காணப்பட்ட அபரிதமான ஒத்துழைப்பால் தான், புலிகளைப் போரில் தோற்கடிக்க முடிந்ததாக இரு நாட்டுக் கடற்படை வட்டாரங்களிருந்து பெறப்பட்ட தகவல்கள் தெரிவிப்பதாகவும் அந்தப் புத்தகத்தில் கோகலே மேலும் தெரிவித்துள்ளார்.

# விநாயகனின் வேண்டுகோள்!

*நீங்கள் என்னைக் கடலிலும், ஆற்றிலும்*
*தூக்கிப் போட்டு கொலை செய்யும்போது*
*மற்ற மதத்துக்காரர்கள் கேவலமாக நினைப்பார்களே!*
*அதற்காகவாவது இந்த ஆண்டு என்னை மன்னித்துவிடக் கூடாதா?*
*கருணை காட்டுங்கள்!* **- பெரியார் திராவிடர்கழகம்**



- என்ற சுவரொட்டிகளை பெரியார் திராவிடர் கழக சார்பில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஒட்டப்பட்டிருந்தன. பொள்ளாச்சி, ஆனைமலையில் இதற்காக கழகத் தோழர்கள் மீது வழக்குப் பதிவு செய்து காவல்துறை கைது செய்துள்ளது.

விநாயகனுக்கு பேசும் சக்தி எது? அது பொம்மை தானே? பிறகு எப்படி விநாயகன் பேசுவது போல் சுவரொட்டி போடலாம் என்று காவல்துறை கருதிவிட்டது போலும்! உண்மையாகவே விநாயகன் பக்தர்கள் புண்படுத்தப்படுவதாகக் கருதுவார்களேயானால் அவர்கள், நாம் மேலே வெளியிட்டிருக்கிற 'தினத்தந்தி' நாளேடு வெளியிட்டுள்ள படத்தைத்தான் எதிர்த்திருக்க வேண்டும்.

திருவல்லிக்கேணியில் 'விநாயகனுக்கு' காவல்துறையினர் பாதுகாப்பு தரும் படம் இது. விநாயகன் சக்தியற்றவனாகி விட்டானா? இப்படி காவல்துறையை பாதுகாப்புக்குப் போட்டு, அதைப் படம் பிடித்து பத்திரிகைகளில் வெளியிடலாமா? என்று உண்மையான பக்தர்கள் எவரும் பொங்கி எழ தயாராக இல்லை. அவர்களுக்கு நன்றாகவே தெரியும், போலீஸ் பாதுகாப்போடு தான் 'விநாயகன்' பவனி வர முடியும் என்று!

இதையே பெரியார் தொண்டர்கள், பகுத்தறிவாளர்கள் சொன்னால் மட்டும் ஆத்திரப்படுவது ஏன்? கைது செய்யப்படுவது ஏன்?

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# அந்தோணி இந்தியரா? மலையாளியா?

*(முதல் பக்கத் தொடர்ச்சி)*



அந்த வாகனங்களில் ராக்கட் லாஞ்சர்கள் இருந்தன. எடுத்து கீழே போட்டார்கள். அந்த இராணுவ வீரர்கள் துப்பாக்கி வைத்திருந்தார்கள். அவர்கள் எங்களை சுட முடியும்; ஆனால் எங்களுக்கோ, அந்த பய உணர்வே யில்லை. இராணுவத்தை தாக்கப் போகிறோம். சுடுவார்கள் என்ற பயம் கடுகளவும் இல்லை. காரணம் லட்சக்கணக்கான மக்களை காக்கப் போகின்றோம் என்ற உணர்வுதான் எங்களிடம் மேலோங்கி நின்றது. அவர்கள் சுட்டிருந்தால் நாங்கள் இறந்து, இப்போது 3 மாதம் ஓடியிருக்கும்.

இதே முதலமைச்சர் கலைஞர் 1989 ஆம் ஆண்டு, இந்திய இராணுவம் அமைதிப்படை என்ற பெயரிலே இலங்கைக்கு சென்றுவிட்டு திரும்பி, இந்தியா வருகின்றபோது அதை வரவேற்க மாட்டேன் என்று சொன்னார். அதற்கு கலைஞர் சொன்ன காரணம், “எங்கள் தமிழ் மக்களை கொன்று குவித்துவிட்டு வந்த இராணுவத்தை நான் வரவேற்க மாட்டேன்” என்பதுதான்.

அமைதிப்படையில் சென்றிருந்த ஒரு இராணுவ வீரனுக்கு சிறப்பு செய்தது இந்திய அரசாங்கம். (அந்த இராணுவ வீரன் யார் என்றால், பகத்சிங்கின் அண்ணன் மகன்.) அந்த சிறப்பு விருதை பெற அவன் தயாரானான். ஆனால் அந்த வீரனுடைய தந்தை (பகத்சிங்கின் அண்ணன்) மகனிடம், ‘எங்கே போகின்றாய்’ என்று கேட்டார். ‘இந்திய அரசின் சிறப்பு விருதைப் பெறப் போகிறேன்’ என்று சொன்னவுடன், தந்தை கேட்டார், “ஒரு விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கி நசுக்குவதற்காக, விடுதலைப் போராளி களை அழிப்பதற்காக இலங்கைக்கு போனாய்; அதற்கு உனக்கு சிறப்பா? இதே விடுதலைப் போராட்டத்திற்காகத் தானே உன் சித்தப்பா பகத்சிங் தூக்கு மேடையேறினார். உன் சித்தப்பா இங்கே செய்த காரியத்தைத் தானே அங்கே விடுதலைப் புலிகளும், பிரபாகரனும் செய்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களை கொன்று ஒழிப்பதற்கு போன உனக்கு இந்த மானங்கெட்ட அரசாங்கம் தருகின்ற விருதைப் பெறப் போகலாமா?” என்று கேட்டார். (பலத்த கைதட்டல்)

**பிரபாகரன் படத்துடன் 10,000 பேர் கூடுவோம்**

**பிரபாகரன் படத்தை போடக் கூடாது என்று தடை போட்டுள்ளது இந்த ஆட்சி! அண்ணன் வைகோ அவர்களையும், கழகத் தலைவரையும் கேட்டுக் கொள்கின்றேன், மீண்டும் நீங்கள் கூடிப் பேசப் போகின்றீர்கள், பேசுங்கள். 10 ஆயிரம் பேர் இதே மெரினா கடற்கரையிலே அண்ணா சதுக்கத்திற்கு முன்னால் பிரபாகரன் படம் போட்ட பனியனோடு நிற்போம். (கைதட்டல்) கைது செய்யட்டும். சிறைச்சாலையிலே அடைப்பதற்கு இடம் கிடையாது. நினைவில் வையுங்கள். அரசாங்கம் மிரட்டிப் பார்க்கின்றது. கைது செய்தாலும் சிறையிலே அடைக்க மாட்டார்கள். திருப்பி அனுப்பித்தான் ஆக வேண்டும். இப்பேர்ப்பட்ட சூழ்நிலையிலே நாம் துணிய வேண்டாமா?**

**- கோவை இராமகிருட்டிணன் உரையிலிருந்து**

தோழர்களே நீலாம்பூரிலே இராணுவத் தாக்குதலில் எங்களுடன் கைதான தோழர் சைமன் அவர்களைப் பார்த்து சிறையிலே அதிகாரிகள் கேட்டார்கள், ‘என்ன வழக்கு என்று’! அதற்கு சைமன் கொஞ்சம்கூட அச்சப் படாமல் ஒவ்வொரு முறையும் கூறுவார், “மானங்கெட்ட இந்திய இராணுவத்தை தாக்கிய வழக்கு” என்று. ஒவ்வொரு முறை கேட்கும் போதும் இதையே தான் சொல்லுவார் (கைதட்டல்)

இவர்கள் - ஒருமைப்பாடு, தேசியம் பேசுவது எல்லாம் நம்மிடம் தான். ஆனால், இந்திய இராணுவ அமைச்சர் அந்தோணி ‘இந்தியா’ எனது தேசம் என்ற உணர்வோடுதான் இருக்கின்றாரா? முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை உயர்த்தலாம் என்று உச்சநீதிமன்றமே கூறினாலும், அம்மாநிலத்தில் காங்கிரஸ் என்றாலும், கம்யூனிஸ்ட் என்றாலும் கட்சிகளை மறந்து எதிர்க்கிறான். அணை வலுவிழந்து இருக்கின்றது என்று பொய்யான காரணத்தைச் சொல்கிறார்கள். அணையை ஆராய்ச்சி செய்வதற்கு அந்தோணியின் பாதுகாப்புத் துறையைச் சார்ந்த இராணுவ வீரர்கள் முல்லைப் பெரியாறு அணையை ஆய்வு செய்தார்கள். தமிழக அரசுக்கே இது தெரியாது. இதற்கு ஆணையிட்டவர் ஏ.கே. அந்தோணி. இந்திய இராணுவ அமைச்சராக இருந்தாலும் தன்னை ஒரு மலையாளியாகக் கருதி, மலையாளி நலனுக்குத்தானே அவர் செயல்பட்டார்? இராணுவ அமைச்சருக்கே மலையாளி என்ற உணர்வு இருக்கும்போது, தமிழனாகிய நான் மட்டும் எனது இனத்தை அழிக்கச் செல்லும் இராணுவத்தை புனிதமாக மதிக்க வேண்டுமா? (கைதட்டல்)

பெரியார் ஒரு முழக்கத்தை சொல்லுவார், “நான் ஒரு நாத்திகன். என்னை யாராவது தாக்கினால், தாக்க முயற்சித்தால், அவர்களை கொல்லும் வேளையிலே சாவேன்” என்றார் பெரியார். அதை நெஞ்சிலே நாங்கள் தாங்கி இருக்கின்றோம். அதனால்தான் அன்றைக்கு அந்த மறியலை நடத்தினோம்.

இந்த வாகனம் கொச்சிக்குப் போகவில்லை என்று அப்போது மறுத்தார்கள். ஆனால், அதற்கு தலைமை தாங்கி வந்த தென்மண்டல அதிகாரி சொல்லுகின்றார், கொச்சிக்குத்தான் போனது என்று. அங்கிருந்து எங்கு செல்லுகின்றது என்பதை யெல்லாம் சொல்ல முடியாது, அது ரகசியம் என்று சொன்னார்.

நாங்கள் மூன்று மாத காலம் சிறையிலே இருந்ததோம். எவ்வளவோ துயர செய்திகள் எங்களை துயரத்தில் ஆழ்த்தின. ஆனாலும் சிறை எங்களை சிதைத்து விடவில்லை. எங்களை செதுக்கி இருக்கின்றது.

தோழர்களே, இளைஞர்களே இனியும் சிறைச்சாலையைக் கண்டு பயப்பட வேண்டாம். தந்தை பெரியார் காலத்தைப் போல் இப்போது சிறைச்சாலைகள் மோசமாக இல்லை.

1957-லே சாதி ஒழிப்புக்காக சட்டத்தை எரித்து 10 ஆயிரம் கருஞ்சட்டைப் படையினர் கைதானார்கள். 4 ஆயிரம் பேர் பல்வேறு சிறையிலே இருந்தனர். அதிலே 5 பேர் சிறைக்குள்ளேயே இறந்தனர். சிறையிலிருந்து வெளியே வந்த ஒரு மாதத்தில் 13 பேர் இறந்தனர். காரணம் உணவு சரியில்லை. மருத்துவம் சரியில்லை. கழிப்பிடமே இருக்காது. அப்போதைய கழிப்பிடம் ஒரு குழியை வெட்டி அதிலே தான் எல்லோரும் உட்கார வேண்டும். 24 மணி நேரமும் அறைக்குள் பூட்டியே வைத்திருப்பர். இருட்டறையிலே வைத்திருப்பர். இப்பேர்ப்பட்ட கொடுமைகள் எல்லாம் இன்றைக்கு சிறைச்சாலையில் இல்லை. இன்றைக்கு கோழிக்கறி, மின் விசிறி, தொலைக் காட்சி, நவீன கழிப்பிட வசதி போன்றவையெல்லாம் இருக்கின்றன. இவ்வளவு வசதிகள் இருந்தும் கடந்த ஆறு மாதகாலமாக பெரியார் திராவிடர் கழகமும், மறுமலர்ச்சி திராவிட முன் னேற்றக் கழகமும் தான் சிறைக்கு போகின்றது. வேறு யாரும் வரவில்லையே. அவர்கள் நினைக் கின்றார்கள். இந்த சிறைகளைவிட இலட்சக் கணக்கான கோடிக்கணக்கான வருமானம் வெளியிலே இருக்கின்றது என்று நினைக்கிறார்கள். ஆகவே தோழர்களே, சிறையைக் கண்டு அஞ்சாதீர்கள்.

எங்களின் வேதனை எல்லாம் என்ன? 30 ஆண்டுகளாக பாடுபட்டோமே, பல்வேறு சிறைகளிலே தொல்லையை அனுபவித்தோமே, இவ்வளவு பாடுபட்டு, வாசல் வரை வந்த அந்த விடுதலையை இந்திய பார்ப்பன ஆட்சி நசுக்கிவிட்டதே. ஒரே நாளில் 25000 பேரை கொன்று குவித்திருக்கின்றதே. அது தான் வேதனை.

இன்றைக்கு தடை செய்யப்பட்ட இயக்கத்தை ஆதரித்து பேசக் கூடாது; படம் வைக்கக் கூடாது என்றெல்லாம் உத்தரவு போடுகிறார்களே, எங்களுக்கு பிரபாகரன் படம் முக்கியமல்ல, அவரது லட்சியம் தான் முக்கியம். அந்த லட்சியத்துக்காக உண்மை யாக போராட வேண்டும். படத்தை மட்டும் காட்டுவதிலே பலன் இல்லை. ஆனால் பிரபாகரன் படத்தை தமிழகத்திலே வைக்க தடை; ஆனால், காந்தியைச் சுட்டுக் கொன்ற கோட்சே படம் வைக்க தமிழ் நாட்டில் தடை யில்லை. கோடிக்கணக்கான மக்களின் உள்ளங்களிலே வீற்றிருக்கின்ற பிரபாகரன் படம் வைக்கத் தடை போடும் இதே ஆட்சி யில் தான் அண்மையிலே 10 ஆயிரம் பேர் ஆர்.எஸ்.எஸ். ‘சாகா’ நடத்தியிருக்கின்றார்கள் இதே சென்னையிலே; அதற்கு தடையில்லை. ஆர்.எஸ்.எஸ்.சின் நோக்கம் என்ன? மக்களை பிரிப்பதும், கொன்றொழிப்பதும் தானே?

தமிழ்நாட்டு மக்கள் தங்களைக் காப்பாற்றுவார்கள் என்று கடைசி வரை தம்பி பிரபாகரன் நம்பினார்; நம்மால் முடியவில்லை. ஆனாலும், எந்த விடுதலையும் நாள் குறித்து வருவதில்லை. 300 ஆண்டுகளுக்கு பிறகுதான் அயர்லாந்துக்கு விடுதலை கிடைத்தது. எனவே இந்த விடுதலையும் கிடைக்கும் என்ற உறுதியான நம்பிக்கை நமக்கு உண்டு.

தோழர்களே, நாங்கள் சிறையிலிருந்த போது பெரியார் திராவிடர் கழகத்தை தடை செய்யப் போகிறார்கள் என்று செய்தி வந்தது. இந்த நாட்டில் ‘பிளாஸ்டிக்’ பொருள்களை தடை செய்தார்கள். எங்காவது பிளாஸ்டிக்கை ஒழிக்க முடிந்ததா? இதையே ஒழிக்க முடியாதபோது பெரியார் திராவிடர் கழகத்தையா தடை போட்டு ஒழிக்க முடியும்? (கைதட்டல்) முடியாது, முடியாது.

நீங்கள் தருகின்ற இந்தப் பாராட்டு, எங்களை பாராட்டுவதல்ல. மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக, மற்றவர்களும் இதுபோல் துணிய வேண்டும்; போராட வேண்டும் என்பதற்காக எங்களை பாராட்டுகின்றீர்கள் என்று கூறி முடிக்கின்றேன்.

**கீசகன் நன்கொடை**

மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சி யாளர் தோழர் கீசகன், கழக ஏட்டுக்கு ரூ.1000-மும், வழக்கு நிதியாக ரூ.1000-மும் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணனிடம் கோவையில் வழங்கினார்.

**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
**தொடர்புக்கு: ஆசிரியர்,**
**29, பத்திரிகையாளர் குடியிருப்பு,**
**திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,**
**சென்னை-41. ✆ 9840940400**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 27th August 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.